வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu வார மலர்

Email : eelanaduweekly@gmail.com
மலர் : 07
26.04.2026 ஞாயிற்றுக்கிழமை
இதழ் : 110
பக்கங்கள் : 16



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

## எரிபொருள் இறக்குமதிச் செலவு இவ்வருடம் அதிகரிக்கும் அபாயம்!

### இலங்கை மத்திய வங்கி எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 26

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் போர் பதற்றங்கள் மற்றும் உலக சந்தையில் நிலவும் ஸ்திரமற்ற தன்மை காரணமாக, இந்த வருடத்தில் நாட்டின் எரிபொருள் இறக்குமதி செலவு கணிசமாக உயரும் என இலங்கை மத்திய வங்கி எதிர்வு கூறியுள்ளது.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள புவிசார் அரசியல் நெருக்கடிகள் காரணமாக, உலகளாவிய ரீதியில் எண்ணெய் விலைகள் உயர் மட்டத்தில் நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் மொத்த இறக்குமதி செலவில் எரிபொருள் இறக்குமதி பிரதான பங்கு வகிக்கின்றது. கடந்த 10 வருடங்களில், நாட்டின் மொத்த இறக்குமதிச் செலவில் சராசரியாக 20 வீதம் எரிபொருளுக்காகவே செலவிடப்பட்டுள்ளதாக மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.


கடந்த 2025ஆம் ஆண்டில் மசகு எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய இறக்குமதியின் அளவு அதிகரித்த போதிலும், அதற்கான மொத்த செலவு வீழ்ச்சியடைந்துள்ளது.

2024ஆம் ஆண்டில் 4.4 பில்லியன் அமெரிக்க டொலர்களாக காணப்பட்ட இறக்குமதி செலவு,

15

# அரச அதிகாரிகளின் அலட்சியமே திறைசேரி மோசடிக்குக் காரணம்!

### இது இணைய வழித் தாக்குதல் அல்ல என்கிறார் ஹர்ஷ டி சில்வா எம்.பி.



கொழும்பு, ஏப். 26

திறைசேரியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி மோசடியானது ஒரு நுணுக்கமான இணையவழி தாக்குதல் அல்ல என்றும், அதிகாரிகளின் அடிப்படை அலட்சியத்தினால் ஏற்பட்ட விளைவு என்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா விமர்சித்துள்ளார்.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், பாரிய அளவிலான நிதிப் பரிமாற்றங்களின் போது பின்பற்றப்பட வேண்டிய முறையான நிதித் தணிக்கைகள் மற்றும் கட்டுப்பாடுகள் இங்கு புறக்கணிக்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டினார்.

மில்லியன் கணக்கான ரூபாய்களைப் பரிமாற்றம் செய்வதற்கு முன்னதாக, அந்த வங்கிக் கணக்கை உறுதிப்படுத்துவதற்காக ஒரு சிறிய அனுப்பிச் சரிபார்க்கும் வழக்கமான நடைமுறை ஏன் பின்பற்றப்படவில்லை என அவர் கேள்வி எழுப்பினார்.

அத்துடன், பணப்பரிமாற்ற அறிவுறுத்தல்கள் மற்றும் வங்கிக் கணக்கு விபரங்கள் ஆகியவை மூல ஒப்பந்தங்களுடன்

15

## காங்கேசன் சிமெந்து தொழிற்சாலையை கைத்தொழில் பேட்டையாக மாற்ற திட்டம்!

### பிரதி அமைச்சர் குழாம் நேரில் ஆராய்வு



யாழ்ப்பாணம், ஏப். 26

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை கைத்தொழில் பேட்டையாக உருவாக்குவது தொடர்பில் பிரதி அமைச்சர் குழாம் கள விஜயம் மேற்கொண்டது.

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை உள்நாட்டு யுத்தம் காரணமாக சுமார் 36 வருடங்களுக்கு மேலாக

15

## ஈஸ்டர் தாக்குதல் விசாரணகளில் சாட்சிகளுக்கு கொலை மிரட்டல்!

### திடுக்கிடும் பல தகவல்கள் அம்பலம் நீதிமன்றில் வெளிப்படுத்தியது சி.ஐ.டி.

கொழும்பு, ஏப். 26

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் இடம்பெற்று ஏழு ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், இது தொடர்பான விசாரணைகளில் இராணுவப் புலனாய்வுப் பிரிவு மற்றும் அரசியல்வாதிகளின் தலையீடுகள் குறித்த அதிர்ச்சியூட்டும் தகவல்கள் கோட்டை நீதவான் நீதிமன்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

15

## கடந்த ஆண்டு வடக்கில் ஐந்து பேருக்கு மலேரியா

### ஒருவர் உயிரிழப்பு

வவுனியா, ஏப். 26

கடந்த ஆண்டில் வடக்கு மாகாணத்தில் 5 பேர் மலேரியா தொற்றுக்கு உள்ளாகி இருந்ததுடன் ஒருவர் மரணடைந்துள்ளதாக மலேரியா தடை இயக்கத்தின் வவுனியா பிராந்திய வைத்திய அதிகாரி வைத்தியர் நிசாந்தினி தெரிவித்தார்.

வவுனியா மலேரியா தடை இயக்கத்தின் பிராந்திய அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற

15

## சட்டவிரோத மீன்பிடியை கட்டுப்படுத்த நோர்வேயின் செய்மதி தொழில்நுட்பம்!

### அமைச்சர்கள் மட்டத்தில் இணக்கம்

கொழும்பு, ஏப். 26

இலங்கை கடற்பரப்பில் மீன்பிடி படகுகளைக் கண்காணிப்பதற்கும், சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளை ஒடுக்குவதற்கும் நவீன செய்மதி தொழில்நுட்ப உதவிகளை வழங்க நோர்வே அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

நோர்வேக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகருக்கும், நோர்வேயின் வர்த்தக, கைத்தொழில் மற்றும் மீன்பிடி அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகளுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே இந்த விடயம் குறித்து

15

## பிரதி நிதியமைச்சர் கிளிநொச்சிக்கு நேற்று விஜயம்

கிளிநொச்சி, ஏப். 26

தொழில் மற்றும் நிதி திட்டமிடல் பிரதியமைச்சர் அனில் ஜெயந்த பெர னாண்டோ நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது ஆனையிறவுப் பகுதியில் முன்னர்

15

## சோமாலியாவில் கப்பல் கடத்தல் இலங்கையர் இருப்பதாக தகவல்

கொழும்பு, ஏப். 26

சோமாலியக் கடற்பகுதியில் கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட எரிபொருள் தாங்கிக் கப்பலின் ஊழியர்களில் இலங்கையர் ஒருவரும் அடங்குவதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

18,500 பீப்பாய் எரிபொருளை ஏற்றிச் சென்ற குறித்த கப்பல், கடந்த புதன்கிழமை இரவு சோமாலியக் கடற்கரையிலிருந்து சுமார் 30 கடல் மைல் தொலைவில் பயணித்துக்கொண்டிருந்தபோது ஆயுததாரிகளால் கடத்தப்பட்டுள்ளது.

15

## 2.5 மில்லியன் டொலர் மோசடி விசாரணையில் முன்னேற்றம்

### அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஏப். 26

இலங்கை திறைசேரியினால் வெளிநாட்டுக் கடன் தவணையாகச் செலுத்தப்பட்ட 2.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள், கணினி ஹக்கர்கள் கைக்குச் சென்ற சம்பவம் தொடர்பிலான விசாரணைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக டிஜிற்றல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுக் கடன் தவணைப் பணத்தை

15

## வடக்கு மாகாண அபிவிருத்திக்கு சில அரச திணைக்களங்கள் தடை!

### ஆளுநர் வேதநாயகன் கவலை

யாழ்ப்பாணம், ஏப். 26

அரசாங்கம் பல அபிவிருத்தி விடயங்களை மிகவும் நேர்மையான முறையில் முன்னெடுத்து வருகின்றபோதிலும், சில அரச திணைக்களங்கள் இவ்வாறான சிறந்த மற்றும் பயனுள்ள செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தடையாக செயற்படுகின்றன என வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார். வடக்கு மாகாணத்தைச் சுற்றுலாத் துறையில் துரித கதியில் முன்னேற்றும் நோக்கில்,

15



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தின் முட்டாள்தனமா? திட்டமிட்ட உள்வீட்டுத் திருட்டா?

## காவிந்த ஜயவர்தன கேள்வி

கொழும்பு, ஏப். 26

திறைசேரியிலிருந்து 2.5 மில்லியன் டொலர் நிதி மாயமான சம்பவமானது, அரசாங்கத்தின் நிர்வாகத் திறமையின்மையால் நேர்ந்த முட்டாள்தனமான செயலா? அல்லது திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட உள்வீட்டுத் திருட்டா? என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

ஒரு போலி மின்னஞ்சலை உறுதிப்படுத்தாமல் மக்கள் வரிப் பணத்தை மாற்றியமை ஊடுருவல் அல்ல என்றும், இது ஆட்சியாளர்களின் இயலாமையையே காட்டுகிறது எனவும் அவர் கடுமையாக விமர்சித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலக வளாகத்தில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததில் இருந்து தொடர்ச்சியான ஊழல்கள் மற்றும் முறைகேடுகள் இடம்பெற்று வருகின்றன. 322 கொள்கலன் விவகாரம், எரிபொருள் கொள்வனவில் ஏற்பட்ட நஷ்டம், தரம் குறைந்த நிலக்கரி இறக்குமதி மூலம் நாட்டுக்கு ஏற்பட்ட பல பில்லியன் ரூபாய் இழப்பு எனப் பட்டியல் நீண்டுகொண்டே போகிறது. தற்போது மக்களின் வரிப்பணமான 2.5 மில்லியன் டொலரும் இவ்வாறான ஒரு மோசடி மூலம் மாயமாகியுள்ளது.

ஒவ்வொரு முறை தவறு நடக்கும் போதும், அதற்குப் பொறுப்பான அமைச்சர்களோ அல்லது ஜனாதிபதியோ பொறுப்பேற்பதில்லை. மாறாக, கீழ்மட்ட அதிகாரிகளின் தலையில் பழியைப் போட்டு அவர்கள் சிறைக்கு அனுப்பப்படுகிறார்கள். திறைசேரிச் செயலாளர் முதல் பொலிஸ் மற்றும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் வரை அனைவரும் அரசாங்கத்துக்கு சாதகமானவர்களாகவே நியமிக்கப்பட்டுள்ளனர். இதனால், இவர்களிடம் முறைப்பாடு செய்வதால் நாட்டுக்கு எந்த நீதியும் கிடைக்கப் போவதில்லை.- என்றார். (எ)

# திறைசேரியின் 2.5 மில். டொலர் மோசடி: பி.இ.சி. நவீன சைபர் தாக்குதலே காரணம்

## நிபுணர் அசேல வைத்தியலங்கார எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 26

இலங்கை திறைசேரியின் ஊடாக செலுத்தப்பட்ட 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி, ஹேக்கர்களின் கைக்குச் சென்றமையானது "பி. இ. சி." எனப்படும் நவீன சைபர் தாக்குதல் முறையினாலேயே இடம்பெற்றுள்ளது என்று சைபர் பாதுகாப்பு நிபுணர் அசேல வைத்தியலங்கார தெரிவித்துள்ளார்.

இவ்வாறான பாரிய நிதி மோசடிகளைத் தடுப்பதற்கான தொழில்நுட்பக் கட்டமைப்புகள் இலங்கையில் உள்ள போதிலும், அவற்றை முறையாகப் பயன்படுத்தாததே இத்தகைய இழப்புகளுக்குக் காரணம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த மோசடி குறித்து அவர் மேலும் விளக்குகையில்,

"தற்போது பரவலாகக் காணப்படும் 'Business Email Compromise' (BEC) எனும் முறையையே ஹேக்கர்கள் இங்கு பயன்படுத்தியுள்ளனர்.

உதாரணமாக, ஒரு நிறுவனம் மற்றுமொரு நிறுவனத்துக்கு மின்னஞ்சல் ஊடாக விலைப்பட்டியலை அனுப்பும் போது, ஹேக்கர்கள் அந்த மின்னஞ்சல் தொடர்புகளுக்குள் ஊடுருவி, வங்கிக் கணக்கு விவரங்களை மாற்றி அமைப்பார்கள். இதன் மூலம் அனுப்பப்படும் பணம் உரிய நிறுவனத்துக்குச் செல்லாமல் ஹேக்கர்களின் கணக்கிற்குச் சென்றுவிடும்" என்றார்.

நிதி அமைச்சின் கீழ் இயங்கும் ஒரு முக்கிய கிளையில் இவ்வாறானதொரு பரிவர்த்தனை எவ்வாறு இடம்பெற்றது என்பது கேள்வியாக உள்ளது.

மின்னஞ்சல் பரிமாற்றக் கட்டமைப்புகள் அண்மைக்கால தொழில்நுட்பத்துக்கு அமைய இற்றைப்படுத்தப்பட்டுள்ளனவா, அவற்றுக்கான பாதுகாப்பு மென்பொருட்கள் இடப்பட்டுள்ளனவா மற்றும் அவற்றை நிர்வகிப்பது யார் என்பது குறித்த கட்டமைப்பு ரீதியான சிக்கல்கள் அங்கு காணப்படுவதாக அவர் தெரிவித்தார்.

இலங்கை மத்திய வங்கி, நாட்டில் உள்ள அனைத்து வங்கிகளும் "ஐ.எஸ்.ஓ.27001" எனும் சைபர் பாதுகாப்பு தரச்சான்றிதழைப் பெறுவதைக் கட்டாயமாக்கியுள்ளது. இதன் காரணமாகவே வங்கித் துறையில் சைபர் தாக்குதல்கள் பெருமளவு குறைந்துள்ளன.

இந்தத் தரச்சான்றிதழைப் பெறுவதால் மட்டும் ஹேக்கிங்கை முழுமையாகத் தடுத்துவிட முடியாது. ஆனால், அதற்கான பாதுகாப்புக் கட்டுப்பாடுகள் மற்றும் வருடாந்த வெளிப்புறத் தணிக்கைகள் மூலம் பாதிப்புகளைக் குறைந்தபட்ச நிலைக்குக் கொண்டு வர முடியும்" என அவர் விளக்கினார்.

நாட்டின் வங்கி முறைமையை விடவும் அதிக நிதிப் பொறுப்புகளைக் கொண்ட திறைசேரி போன்ற நிறுவனங்கள், வங்கிகள் பின்பற்றும் இத்தகைய பாதுகாப்புக் கட்டுப்பாடுகளை முறையாகப் பின்பற்றியிருந்தால், இந்த 2.5 மில்லியன் டொலர் இழப்பைத் தவிர்த்திருக்கலாம் என அசேல வைத்தியலங்கார மேலும் சுட்டிக்காட்டினார். (எ)

# திறைசேரி மீதான தாக்குதலால் வங்கிக் கட்டமைப்புக்கு ஆபத்து

## சம்பிக்க ரணவக்க எச்சரிக்கை



கொழும்பு, ஏப். 26

திறைசேரியின் மின்னஞ்சல் கட்டமைப்பு மூன்றாம் தரப்பினரால் ஊடுருவப்பட்டு வெளிநாட்டு அரசமுறை கடன் செலுத்தலில் 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் மோசடி செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிடுவது இலங்கை வரலாற்றில் இதுவே முதன்முறையாகும். அண்மைக் காலமாக இலங்கையில் இணையவழி குற்றங்கள் தீவிரமடைந்துள்ளன. திறைசேரியின் மீது சைபர் தாக்குதல் இடம்பெறும் போது வங்கிக் கட்டமைப்பின் நிதி நிலைமையின் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்குள்ளாக் கப்பட்டுள்ளன என்று முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

ஐக்கிய குடியரசு முன்னணியின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"திறைசேரியால் செலுத்தப்பட்ட 2.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மூன்றாம் தரப்பினரால் மோசடி செய்யப்பட்டதாக திறைசேரியின் செயலாளர் குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இரகசியத்தை பாதுகாப்பதற்காக விடயங்களை வெளியிடவில்லை என்று குறிப்பிடுவது பாராளுமன்றத்தின் நிதி அதிகாரத்தை மலினப்படுத்துவதாகும்.

திறைசேரியின் மின்னஞ்சல் கட்டமைப்பு மூன்றாம் தரப்பினரால் ஊடுருவப்பட்டு வெளிநாட்டு அரசமுறை கடன் செலுத்தலில் 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் மோசடி செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிடுவது இலங்கை வரலாற்றில் இதுவே முதன்முறையாகும்.

அண்மைக்காலமாக இலங்கையில் இணையவழி குற்றங்கள் தீவிரமடைந்துள்ளன. திறைசேரியின் மீது சைபர் தாக்குதல் இடம்பெறும் போது வங்கிக் கட்டமைப்பின் நிதி நிலைமையின் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

தரமற்ற நிலக்கரி கொள்வனவின் பெறுபேறு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் வெளிப்படும். முன்னாள் வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடியை நம்பிக்கையில்லா பிரேரணையில் இருந்து பாதுகாத்தவர்கள் இதற்கு பொறுப்புக்கூற வேண்டும்.

தரமற்ற நிலக்கரி பயன்பாட்டினால் எதிர்பார்க்கப்பட்ட மின்சார உற்பத்தியை அடைய முடியாத நிலைமை ஏற்படும். இதனால், எரிபொருள் ஊடாகவே மின்சாரத்தை அதிகளவில் உற்பத்தி செய்ய நேரிடும். ஆகவே, எதிர்வரும் ஓகஸ்ட் மாதமளவில் வலுசக்தி விநியோகத்தில் பாதிப்பு ஏற்படும்"- என்றார். (எ)

# அமைதிக்கான நடைபயணத்தின் நான்காம் நாள் நேற்று ஆரம்பம்

கொழும்பு, ஏப். 26

உலக அமைதி மற்றும் நல்லிணக்கத்தை வலியுறுத்தி நடத்தப்படும் அமைதிக்கான நடைபயணத்தின் நான்காவது நாள் நேற்றுச் சனிக்கிழமை மாவனெல்லை பெலிகம்மன ரஜமஹா விகாரையிலிருந்து உத்தியோகபூர்வமாக ஆரம்பமானது.

நேற்றுக் காலை ஆரம்பமான இந்த நடைபயணம், மாவனெல்லையில் இருந்து கேகாலை ஊடாகத் பயணித்து, தொலங்கமுவ பகுதியில் உள்ள டட்லி சேனாநாயக்க மத்திய கல்லூரியைச் சென்றடைய திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த அமைதிக்கான நடைபயணம் கடந்த புதன்கிழமை தம்புள்ளை புனித நகரில் கோலாகலமாக ஆரம்பமானது.

வியட்நாமைச் சேர்ந்த பன்னாகர தேரர் தலைமையிலான பிக்குகள் குழுவினர் இந்த நடைபயணத்தை மேற்கொண்டுள்ளனர். இந்த நடைபயணத்தில் பௌத்த பிக்குகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டுள்ளனர்.(எ)

# 2.5 மில்லியன் டொலர் நிதி மோசடி: சர்வதேச விசாரணை வேண்டும்

கொழும்பு, ஏப். 26

இலங்கை வரலாற்றில் முன்னெப்பொழுதும் இல்லாத வகையில், வெளிநாட்டுக் கடன் தவணையாகச் செலுத்தப்பட வேண்டிய 2.5 மில்லியன் டொலர் நிதியை இணையவழி மோசடிக்காரர்கள் கையகப்படுத்தியுள்ளமை நாட்டின் நிதிப் பாதுகாப்பில் பாரிய சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது என்று முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இத்தனை உயர்மட்டப் பாதுகாப்புகளையும் மீறி மக்கள் வரிப்பணம் திருடப்பட்டுள்ளமை குறித்து சர்வதேச நாணய நிதியத்தின் பங்களிப்புடன் கூடிய வெளிப்படையான விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# பாரிய வீழ்ச்சியை நோக்கி தேயிலை துறை செல்கிறது

கொழும்பு, ஏப். 26

இலங்கை பொருளாதாரத்தில் வலுசேர்க்கும் பிரதான துறையான தேயிலை கைத்தொழில் தற்போது மிக மோசமான அனர்த்தத்தை எதிர்நோக்கியுள்ளதுடன், இத்துறை பாரிய வீழ்ச்சியை நோக்கி செல்வதாக தேசிய தேயிலை உரிமையாளர் சங்கத்தின் தலைவர் சமன் கீகனகே தெரிவித்தார்.

தற்போது உபயோகிக்கும் யூ-709 என்ற ஒரு மூடை உரத்தின் விலை சந்தையில் 15,000 ரூபாய் வரை அதிகரித்துள்ளது. ஆனால், மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலைமைகளுக்கு முன்னர் 8,750 ரூபாய் முதல் 9,500 ரூபாய் வரை காணப்பட்டது. இந்த அதிரடி விலை உயர்வு தேயிலை பயிர்ச்செய்கையாளர்களுக்கு தாங்க முடியாத உற்பத்தி சுமையாக மாறியுள்ளது என்றும் அவர் கூறினார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 12 கோடி ரூபாய் பெறுமதியான ஹெரோயினுடன் ஒருவர் கைது

கொழும்பு, ஏப். 26

சுமார் 12 கோடி ரூபாய் பெறுமதியான 12 கிலோ கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் மேல் மாகாண வடக்கு குற்றத் தடுப்பு பிரிவினரால் நேற்று முன்தினம் ஹோமாகமவில் வைத்து கைது செய்யப்பட்டார்.

இவர், வெளிநாட்டில் தலைமறைவாக உள்ள ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியும் போதைப்பொருள் கடத்தல்காரருமான 'ஹோமாகம கசன' என்பவரின் போதைப்பொருள் கடத்தல்களை வழிநடத்தியவர் என்பது ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஏற்கனவே கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் கிடைத்த தகவலுக்கு அமையவே இவர் கைது செய்யப்பட்டார்.

டுபாயில் அந்த நாட்டு பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாக கூறப்படும் 'கொண்ட ரஞ்சித்' என்ற ரஞ்சித் பெரேரா என்ற ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளி உள்ளிட்ட கடத்தல்காரர்களை கைது செய்ததன் மூலம் ஆரம்பிக்கப்பட்ட இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் கீழ், இதுவரையில் 37 கிலோ கிராம் போதைப்பொருள் மீட்கப்பட்டது.

இதன் ஒரு கட்டமாக, டுபாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சிவப்பு பிடியாணை பிறப்பிக்கப்பட்ட ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியான 'கொண்ட ரஞ்சி' என்பவரின் முக்கிய உதவியாளர் ஒருவரும், சுமார் 30 கோடி ரூபாய் பெறுமதியான போதைப்பொருட்களுடன் ஏற்கனவே கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ)

# 840,000 இற்கும் அதிகமான சுற்றுலா பயணிகள் வருகை

கொழும்பு, ஏப். 26

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 840,000 இற்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, ஜனவரி முதலாம் திகதி முதல் ஏப்ரல் 22 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 840, 411 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக அந்த அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

இவர்களில் பெரும்பாலானோர் இந்தியப் பிரஜைகள் என்பதுடன், அந்த எண்ணிக்கை 176,465 ஆகும்.

அத்துடன் பிரித்தானியா, ரஷ்யா, ஜேர்மனி மற்றும் சீனா உள்ளிட்ட நாடுகளிலிருந்தும் அதிகளவிலான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இதேவேளை, ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் 22 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 99,777 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், இந்தத் தரவுகளை அவதானிக்கும் போது கடந்த மாதங்களுடன் ஒப்பிடுகையில் ஏப்ரல் மாதத்தில் நாளந்த சுற்றுலாப் பயணிகளின் வருகை கணிசமான அளவில் வீழ்ச்சியடைந்தமை தெரியவருகிறது. (எ)

# சிவனொளிபாத மலைக்கு நல்லூரிலிருந்து யாத்திரை



யாழ்ப்பாணம், ஏப். 26

வடபகுதியிலிருந்து சிவனொளிபாத மலைக்கான புனித யாத்திரை நேற்று முன்தினம் அதிகாலை நல்லூர் கந்தசுவாமி கோவிலிருந்து பக்திபூர்வமாக ஆரம்பமானது.

அதிகாலை 5:00 மணியளவில் ஆரம்பமான இந்த யாத்திரையில், 60இற்கும் மேற்பட்ட யாத்திரிகர்கள் கலந்து கொண்டனர். சிவனது திருவுருவச் சிலையை அலங்கரிக்கப்பட்ட வாகன ஊர்தியில் எழுந்தருளச் செய்து, நல்லூர் கந்தசுவாமி கோவிலிருந்து பக்திப் பாடல்களைப் பாடியவாறு யாத்திரிகர்கள் தமது பயணத்தைத் தொடங்கினர்.

தொடர்ச்சியாகப் பத்தாவது ஆண்டாக இடம்பெறும் இந்தப் பாதயாத்திரைக்கு, 'மலையக இந்து குருமார்களின் ஒன்றியம்' தனது முழுமையான ஆதரவை வழங்குகின்றது. யாத்திரிகர்கள் பல இடங்களைக் கடந்து, இறுதியில் சிவனொளிபாத மலையைச் சென்றடைந்து அங்கு தரிசனத்தில் ஈடுபடவுள்ளனர். (எ)

# ச.தொ.ச. லொறி மோசடி விவகாரம்: முன்னாள் அமைச்சருக்கு பிணை

கொழும்பு, ஏப். 26

லங்கா ச.தொ.ச. நிறுவனத்துக்குச் சொந்தமான லொறி ஒன்றை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு கடந்த நான்கு மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை பிணையில் விடுவிக்க வத்தளை நீதிவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

வத்தளை நீதிவான் காஞ்சனா என். சில்வா முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்குச் சொந்தமான எத்தனோல் நிறுவனம் ஒன்றின் பணிகளுக்காக லங்கா ச.தொ.ச. நிறுவனத்தின் லொறியைப் பயன்படுத்தியதன் மூலம் அரசுக்கு சுமார் 2. 5 மில்லியன் ரூபாய் நஷ்டம் ஏற்படுத்தியதாகக் கூறி, பொலிஸ் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவினால் இந்த வழக்குத் தொடரப்பட்டிருந்தது. இந்தச் சம்பவம் தொடர்பில் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, அவரது மகன்களான ஜோஹான் பெர்னாண்டோ, ஜெரோம் பெர்னாண்டோ மற்றும் ச.தொ.சவின் முன்னாள் போக்குவரத்து முகாமையாளர் உள்ளிட்ட ஐந்து சந்தேகநபர்களுக்கு எதிராக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் நேற்று முன்தினம் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது மன்றில் முன்வைக்கப்பட்ட இருதரப்பு சமர்ப்பணங்களையும் பரிசீலித்த நீதிவான் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை பிணையில் விடுவிக்குமாறு உத்தரவிட்டார். இதற்கமைய சந்தேகநபரான முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை தலா 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான நான்கு சரீரப் பிணைகளிலும், 25 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பிணையிலும் விடுவிக்க நீதிவான் உத்தரவிட்டார். மேலும் குறித்த வழக்கினை மீண்டும் எதிர்வரும் ஜூலை மாதம் 10 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பதாக நீதிமன்றம் அறிவித்தது. (எ)

# 3.8 கோடி ரூபாய் பெறுமதியான சிகரெட்களுடன் ஒருவர் கைது!

## ஏனையோர் தப்பியோட்டம்!

கொழும்பு, ஏப். 26

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட சுமார் 3 கோடியே 86 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்கள் மற்றும் இலத்திரனியல் சிகரெட்களுடன் ஒருவர் நேற்று சனிக்கிழமை கைது செய்யப்பட்டார்.

டுபாயிலிருந்து வந்த பயணிகள் குழுவொன்று, பெருந்தொகையான சிகரெட்களை கடத்த முயன்றனர்.

கொழும்பு பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய ஒருவர், தனது பயணப் பொதிகளில் சிகரெட்களை மறைத்து வைத்து வெளியேற முயன்ற போது கைது செய்யப்பட்டார்.

இதனைக் கண்ட அவருடன் வந்த ஏனைய பயணிகள், தங்களது 14 பயணப் பொதிகளை விமான நிலைய வருகை முனையத்திலேயே கைவிட்டு தப்பியோடியுள்ளனர்.

இவர்கள் அனைவரும் நேற்று அதிகாலை 12:55 மணியளவில் டுபாயிலிருந்து எமிரேட்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான விமானம் மூலம் கட்டுநாயக்கவை வந்தடைந்தனர்.

சந்தேக நபர்களால் கொண்டுவரப்பட்ட 16 பயணப் பொதிகளை சோதனையிட்ட போது, அவற்றுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 229, 800 வெளிநாட்டு சிகரெட்கள் மற்றும் 113 இலத்திரனியல் சிகரெட்கள் என்பன கைப்பற்றப்பட்டன.

தப்பியோடிய ஏனைய சந்தேக நபர்களை கண்டறியவும், இந்த கடத்தல் சம்பவம் தொடர்பாகவும் கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# தடம் புரண்ட சாகரிகா ரயில் மீண்டும் தடமேற்றம்

கொழும்பு, ஏப். 26

வாத்துவ ரயில் நிலையத்துக்கு அருகில் தடம் புரண்ட 'சாகரிகா' ரயில் தற்போது வெற்றிகரமாக மீண்டும் தடம் ஏற்றப்பட்டது.

தற்போது அந்த ரயில் வாத்துவ ரயில் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டன.

நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற இந்த விபத்து காரணமாக ரயில் போக்குவரத்துக்கு கடும் பாதிப்புகள் ஏற்பட்டன.

விபத்தைத் தொடர்ந்து, ஒரு வழித்தடம் போக்குவரத்துக்காகத் திறந்துவிட அதிகாரிகள் நேற்று முன்தினம் இரவே நடவடிக்கை எடுத்தனர்.

நேற்றுக் காலை நிலவரப்படி, தடம் புரண்டதால் ஏற்பட்ட சேதங்கள் பெரும்பாலும் சீர் செய்யப்பட்டதுடன், ஏனைய திருத்தப் பணிகளும் மிக விரைவில் நிறைவு செய்யப்படவுள்ளன.

இதேவேளை, கரையோர ரயில் பாதையின் போக்குவரத்து தற்போது பெருமளவுக்கு வழமை நிலைக்குத் திரும்பின. (எ)

# கோழிப்பண்ணை உரிமையாளரிடம் இலஞ்சம் பெற்றவருக்கு 6 ஆண்டு சிறை

கொழும்பு, ஏப். 26

கோழிப்பண்ணை உரிமையாளர் ஒருவரிடம் இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் குற்றவாளியாகக் காணப்பட்ட அதிகாரி ஒருவருக்கு 6 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு, மொனராகலை மாவட்டம் வெல்லவாய பகுதியில் உள்ள கோழிப்பண்ணை உரிமையாளர் ஒருவரிடம், இந்த அதிகாரி சட்ட விவகாரங்களைச் சாதகமாக முடித்துக் தருவதாக கூறி 15,000 ரூபாய் இலஞ்சமாக கோரியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் 2009 செப்ரெம்பர் 02 ஆம் திகதி இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு முறைப்பாடொன்று அளிக்கப்பட்டிருந்தது.

இந்த வழக்கு தொடர்பான நீண்டகால விசாரணைகளின் பின்னர், கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்ப்பை அறிவித்தது.

இலஞ்சம் கோரியமை மற்றும் பெற்றுக்கொண்டமை தொடர்பான மூன்று குற்றச்சாட்டுக்களில் சந்தேகநபர் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டார்.

ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் தலா 6 ஆண்டுகள் வீதம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இந்தத் தண்டனைகளை ஒரே நேரத்தில் அனுபவிக்க வேண்டும் எனவும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் தலா 5,000 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதுடன், இலஞ்சமாகப் பெறப்பட்ட 15,000 ரூபாய்க்கு இணையான மேலதிக அபராதத்தையும் செலுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

### நிதிக்குற்றத்துக்கு பொறுப்பேற்று

# நிதி அமைச்சின் செயலாளர் உடன் பதவி விலக வேண்டும்

கொழும்பு, ஏப். 26

திறைசேரியிலிருந்து வைப்பிலிடப்பட்ட 2. 5 மில்லியன் டொலர் மூன்றாம் தரப்பினரால் மோசடி செய்யப்பட்டமை தொடர்பில் அரசாங்கம் குறிப்பிடும் சைபர் தாக்குதல் என்பது சிறுபிள்ளைத்தனமானது. நிதிக்குற்றத்துக்கு பொறுப்பேற்று நிதி அமைச்சின் செயலாளர் உடனடியாக பதவியிலிருந்து விலக வேண்டும் என்று முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

பத்தரமுல்லை பகுதியில் உள்ள தேசிய சுதந்திர முன்னணியின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"திறைசேரியால் செலுத்தப்பட்ட 2. 5 மில்லியன் டொலர் மோசடி செய்யப்பட்ட விவகாரத்தின் பின்னணியில் இருக்கும் உண்மையான 'ஹேக்கர்' நிதி அமைச்சின் செயலாளராகவே இருக்கலாம் என்று சந்தேகம் காணப்படுகிறது.

அவுஸ்திரேலியாவிலுள்ள கடன் வழங்குநருக்கு செலுத்த வேண்டிய கடனை வெறும் மின்னஞ்சல் மூலம் வந்த வேறொரு கணக்கு இலக்கத்துக்கு வைப்பிலிடும் அளவுக்கு திறைசேரி அதிகாரிகள் முட்டாள்களாக இருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

76 ஆண்டு கால இலங்கை நிதி வரலாற்றில் இவ்வளவு பாரதூரமான மற்றும் தர்க்கமற்ற கொடுக்கல்- வாங்கல் இடம்பெற்றதில்லை. ஒரு தனியார் நிறுவனம் கூட பின்பற்றும் அடிப்படை மீளாய்வு முறைகளை திறைசேரி மீறியுள்ளது.

நிதி அமைச்சின் செயலாளர் ஹர்ஷன சூரியபெரும, அவுஸ்திரேலியாவில் கல்வி கற்ற, அந்த நாட்டுடன் நெருங்கிய தொடர்புகளை கொண்ட ஒரு 'இரட்டைப் பிரஜாவுரிமை' கொண்டவர்.

திறைசேரியின் முன்னாள் செயலாளர் மகிந்த சிறிவர்தன சேவையிலிருந்து ஓய்வுபெற்றதன் பின்னர் திறைசேரியில் பதவி நிலையில் அடுத்தபடியாக இருந்த அதிகாரியை ஜனாதிபதி திறைசேரியின் செயலாளராக நியமிக்கவில்லை.

மாறாக தனது நண்பரான ஹர்ஷன சூரியபெருமவை திறைசேரியின் செயலாளராக நியமித்தார். அதன் பெறுபேறு தற்போது வெளிப்படுகிறது.

பொருளாதார ரீதியில் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு காணப்படுகிறது. இவ்வாறான நிலையில் அரச பொது நிதி குறித்து திறைசேரி அலட்சியமாக செயல்படுவது வன்மையாக கண்டிக்கத்தக்கது" - என்றார். (எ)

## மேலதிக விளக்கமளிக்க பூஜித விடுத்த கோரிக்கையை நிராகரித்த நீதிமன்று

கொழும்பு, ஏப். 26

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்படவுள்ளதாக முன்கூட்டியே புலனாய்வுத் தகவல்கள் கிடைத்தும், அதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்காததன் மூலம் வேண்டுமென்றே கடமையைப் புறக்கணித்ததாகத் தொடரப்பட்ட வழக்கில், சாட்சிக் கூண்டிலிருந்து மேலதிக விளக்கமளிக்க அனுமதிக்குமாறு முன்னாள் பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர முன்வைத்த கோரிக்கையை மூவரடங்கிய கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதிகள் அமர்வு நிராகரித்தது.

நேற்று முன்தினம் நீதிபதி பிரியந்த லியனகே, நீதிபதி வீராஜ் வீரசூரிய மற்றும் நீதிபதி திலகரத்ன பண்டார ஆகியோர் அடங்கிய நீதிபதி அமர்வு முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது, நீதிமன்ற அழைப்பாணைக்கு இணங்க பிரதிவாதி தரப்பு சாட்சியமளிப்பதற்காக ஓய்வுபெற்ற சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நந்தன முணசிங்க மற்றும் கிழக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜயசுந்தர ஆகியோர் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

பிரதிவாதி தரப்பின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ரொஷான் தெஹிவல, நீதிமன்றில் முன்னிலையாகியுள்ள அதிகாரிகளிடம் சாட்சியங்களை வினவப்போவதில்லை எனத் தெரிவித்தார். எனினும், தனது கட்சிக்காரரான பூஜித ஜயசுந்தர கடந்த முறை சாட்சிக் கூண்டிலிருந்து உரையாற்றிய போது இரண்டு முக்கிய விடயங்களைக் குறிப்பிடத் தவறிவிட்டதாகவும், அவற்றைத் தெளிவுபடுத்த அவருக்கு மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்குமாறும் கோரினார். இது ஏற்கனவே வழங்கிய வாக்குமூலத்தின் நீடிப்பே தவிர, புதிய வாக்குமூலம் அல்ல என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்த சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிற்றர் ஜெனரல் திலீப பீரிஸ், "விதிமுறைப்படி பிரதிவாதி ஒருமுறை மாத்திரமே சாட்சிக் கூண்டிலிருந்து உரையாற்ற முடியும். கடந்த முறை சுமார் மூன்று மணித்தியாலங்களுக்கு மேலாக அவர் நீண்ட விளக்கமளித்துள்ளார். இத்தகைய கோரிக்கைக்கு இடமளிப்பது தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்திவிடும்- என்றார். மன்றில் முன்வைக்கப்பட்ட இருதரப்பு சமர்ப்பணங்களையும் பரிசீலித்த நீதிபதிகள், கடந்த மார்ச் 26 ஆம் திகதி சாட்சிக் கூண்டிலிருந்து உரையாற்றிய பிரதிவாதி, தனது உரை முடிவில் அதற்கான நன்றிகளையும் கூறி தனது வரப்பிரசாதத்தை முழுமையாகப் பயன்படுத்தியுள்ளார்.

சாட்சிக் கூண்டு வாக்குமூலத்தின் போது பிரதிவாதியிடம் குறுக்கு விசாரணை செய்ய அரச தரப்புக்கு அனுமதியில்லை. இவ்வாறானதொரு சூழலில், மீண்டும் மீண்டும் விளக்கமளிக்க அனுமதிப்பது சட்டத்துக்குப் புறம்பானது. மேலதிக விடயங்கள் எனக் கூறி புதிய விடயங் களை முன்வைப்பதைத் தடுக்க முடியாது என்பதால், இந்த வரப்பிரசாதம் தவறாகப் பயன்படுத்தப்படுவதைத் தவிர்க்க நீதிமன்றம் இக்கோரிக்கையை நிராகரிக்கிறது என்று தெரிவித்தனர். (எ)

## காத்தான்குடியில் விபத்து: குடும்பஸ்தர் உயிரிழப்பு!

மட்டக்களப்பு, ஏப். 26

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆரியம்பதி பகுதியில் நேற்று முன்தினம் மாலை லொறி ஒன்று சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை இந்த விபத்து இடம்பெற்றது.

காத்தான்குடி நோக்கி பயணித்த லொறி ஒன்று, அதன் முன்னால் சென்ற சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் காயமடைந்த சைக்கிள் ஓட்டுநர், மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் ஆரியம்பதி 02 பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய ஒருவர் என அடையாளம் காணப்பட்டார்.

விபத்துடன் தொடர்புடைய லொறியின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

## இருவேறு பகுதிகளில் போதைப்பொருளுடன் இருவர் கைதாகினர்!

கொழும்பு, ஏப். 26

கொழும்பின் இருவேறு பகுதிகளில் பொலிஸார் மேற்கொண்ட விசேட சோதனைகளின் போது, ஹெரோயின் போதைப்பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்டனர்.

மருதானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 53 வத்தை பகுதியில் வெள்ளிக்கிழமை இரவு பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது ஹெரோயினுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரிடமிருந்து 246 கிராம் 230 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

சந்தேக நபர் கொழும்பு 10 பகுதியைச் சேர்ந்த 62 வயதுடையவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, முகத்துவாரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட சோதனையில் ஹெரோயினுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இதன்போது சந்தேகநபரிடமிருந்து 100 கிராம் 200 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

## மகன் தாக்கியதில் தந்தை உயிரிழப்பு

மாத்தளை, ஏப். 26

கூர்மையான ஆயுதத்தால் தாக்கித் தந்தையைக் கொலை செய்த குற்றச்சாட்டின் பேரில் அவரது மகன் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அதிரஹபிட்டிய பகுதியில் நேற்று முன்தினம் காலை இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றது.

இந்தத் தாக்குதலில் அதிரஹபிட்டிய பகுதியைச் சேர்ந்த 64 வயதுடைய ஒருவரே உயிரிழந்தார்.

உயிரிழந்தவருக்கும் அவரது மகனுக்கும் இடையே ஏற்பட்ட தர்க்கம் முற்றியதாலேயே, மகன் இந்தத் தாக்குதலை மேற்கொண்டமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்தது.

சம்பவம் தொடர்பில் 33 வயதுடைய மகனே சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார்.

மாத்தளை பொலிஸார் இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

## நாட்டின் பல பகுதிகளில் இடியுடன் கூடிய மழை

கொழும்பு, ஏப். 26

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை, கண்டி, நுவரெலியா மற்றும் புத்தளம் மாவட்டங்களிலும் பிற்பகல் 02.00 மணிக்குப் பின்னர் ஆங்காங்கே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் பிரதானமாக மழையற்ற வானிலை நிலவும் என்று அந்த திணைக்களம் வெளியிட்டுள்ள வானிலை முன்னறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய, சப்ரகமுவ, ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் காலி, மாத்தறை மற்றும் குருநாகல் மாவட்டங்களிலும் சில இடங்களில் அதிகாலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படலாம்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் தற்காலிகமாக வீசக்கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வளிமண்டலவியல் திணைக்களம், பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளது. (எ)




## பஸ் கட்டண மோசடி தொடர்பில் முறைப்பாடளிக்க துரித இலக்கம்

கொழும்பு, ஏப். 26

நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை விட அதிக கட்டணம் வசூலிக்கும் பஸ்கள் தொடர்பில் முறைப்பாடுகளை வழங்குமாறு பொலிஸ் ஊடகப் பிரிவு பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

அதிக கட்டணம் வசூலிக்கும் பஸ் நடத்துநர்கள் அல்லது உரிமையாளர்களுக்கு எதிராக 118 அல்லது 119 ஆகிய அவசர அழைப்பு இலக்கங்கள் ஊடாக தொடர்புகொண்டு முறைப்பாடுகளை பதிவு செய்யலாம்.

அல்லது அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்குச் சென்று வாய்மொழி மூலமாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ முறைப்பாடளிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
26.04.2026 ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 13

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## தந்தை செல்வாவின் நினைவாக...

தந்தை செல்வா என்று தமிழர்களினால் நேசத்துடன் அழைக்கப்பட்ட தமிழ் அரசியல் தலைவர் எஸ். ஜே.வி. செல்வநாயகத்தின் 49வது நினைவு தினம் இன்றாகும்.

யாழ்.நகரில் இன்று அவரின் நினைவுப் பேருரையை முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் நிகழ்த்துகிறார். அது குறித்து பல்வேறு விமர்சனங்கள் குறிப்பாக சமூக ஊடகங்களில் முன்வைக்கப்பட்டு வருகின்றன. பல அரசாங்கங்களில் முக்கியமான அமைச்சர் பதவிகளை வகித்த காலப்பகுதிகளில் தமிழர் பிரச்சினை பற்றி பேராசிரியர் எடுத்த நிலைப்பாடுகள் குறித்து விமர்சனங்கள் இருந்தாலும், இன்றைய அரசியல் சூழ்நிலையில் அவர் தந்தை செல்வாவின் அரசியல் வாழ்வு மற்றும் தமிழர்கள் இன்னமும் கைவிடாமல் இருக்கும் சமஷ்டி முறையின் அடிப்படையிலான அரசியல் தீர்வுக் கோரிக்கை குறித்தும் என்ன சொல்கிறார் என்பதை சில மணித்தியாலங்கள் பொறுத்திருந்து பார்ப்போம்.

தந்தை செல்வா தொடங்கிய இலங்கை தமிழரசு கட்சி அதன் வைரவிழாவை கடந்து வந்திருக்கும் நிலையில் இன்று அவரின் நினைவு தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. அவர் சிங்களப் பெரும்பானமையின மேலாதிக்கத்துக்கு எதிரான தமிழ் அரசியல் எதிர்ப்பியக்கத்துக்கு பல வருடங்களாக தலைதாங்கி வழி நடத்தியவர்.

தந்தை செல்வா தனது அரசியல் அணுகுமுறையில் போராட்டமும் பேச்சுவார்த்தையும் கலந்த தந்திரோபாயத்தைக் கடைப்பிடித்தவர். தமிழரசு கட்சி ஒரு புறத்தில் பல்வேறு அகிம்சைப் போராட்டங்களை முன்னெடுத்த அதேவேளை, மறுபறத்தில் சந்தர்ப்பம் வாய்த்தபோதெல்லாம் அரசாங்கங்களுடன் பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபட்டது. அதன் விளைவுகள் தான் 1957 பண்டா - செல்வா ஒப்பந்தமும் 1965 டட்லி - செல்வா ஒப்பந்தமும்.

இரண்டு ஒப்பந்தங்களையும் சிங்கள இனவாதிகளின் எதிர்ப்புக்கு அடிபணிந்து அரசாங்கங்கள் கிழித்தெறிந்தன.

அரசாங்கங்களுடனான பேச்சுவார்த்தைகள் மூலமாக தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க முடியாது என்பதை உறுதியாக உணர்ந்துகொண்ட நிலையில் தான் தந்தை தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்தார். அதற்கு பின்னரான மூன்று தசாப்தங்களுக்கும் அதிகமான காலகட்டத்திலான தமிழர் அரசியலை". வட்டுக்கோட்டையில் இருந்து முள்ளிவாய்க்கால் வரை " என்று வரையறுக்கலாம்.

தந்தை செல்வா சமஷ்டி முறையின் அடிப்படையிலான தீர்வைக் காண்பது இலங்கையில் சாத்தியமில்லை என்பதை உறுதியாக உணர்ந்த நிலையிலேயே தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்தார். உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பிறகு பெரும்பாலும் வடக்கு, கிழக்கின் சகல தமிழ் அரசியல் கட்சிகளுமே மீண்டும் சமஷ்டி முறையின் அடிப்படையிலான தீர்வையே வலியுறுத்தி நிற்கின்றன.

ஆனால், அந்த தீர்வை எவ்வாறு அடைவது என்பதற்கான திட்டம் எதுவும் இந்த கட்சிகளிடம் கிடையாது. தமிழர் அரசியலில் சமஷ்டிக் கோரிக்கை முக்கால் நூற்றாண்டு நீட்சியுடையது. இன்னும் எவ்வளவு காலத்துக்கு தமிழர்களின் இந்த கோரிக்கை தொடரப் போகிறதோ யாருமறியார்.

சமஷ்டித் தீர்வை தமிழர்களுக்கு வழங்குமாறு எந்தவொரு வெளிநாடும் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தப் போவதில்லை. மற்றைய நாடுகளிடம் வேண்டுகோள் விடுப்பதன் மூலமாக சமஷ்டி முறையை அடையமுடியாது என்பது எமது தமிழ் அரசியல்வாதிகளுக்கு தெரியாததும் அல்ல. அதனால் சமஷ்டிக் கோரிக்கையை வலியுறுத்திக்கொண்டு அதை அடைவதற்கான மார்க்கம் குறித்து எந்த அரசியல் வேலைத் திட்டமும் இல்லாமல் இருக்கும் தமிழ்க் கட்சிகள் குறைந்த பட்சம் இடைக்காலத் தீர்வொன்றைப் பற்றி ஆழமான அக்கறையுடன் சிந்திக்க வேண்டியது அவசியமாகும்.

அது விடயத்தில் தற்போதைய மாகாணசபைகளை எவ்வாறு பயனுறுதியுடைய முறையில் பயன்படுத்தலாம் என்பது குறித்து தமிழ்க் கட்சிகள் கவனம் செலுத்துவது காலத்தின் தேவை என்று தந்தை செல்வாவுக்கு நினைவேந்தல் செய்து கொண்டு ஈழநாடு வேண்டிக்கொள்கிறது.

# மன்னாரில் காணாமலாக்கப்பட்டோர் பற்றி சாட்சியங்கள் பதிவு செய்யும் நடவடிக்கை

மன்னார், ஏப். 26

மன்னார் மாவட்ட காணாமலாக்கப்பட்டோர் பற்றிய பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சாட்சியங்கள் பதிவு செய்யும் நடவடிக்கை நேற்று முன் தினம் மன்னார் மாவட்ட செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது காணாமலாக்கப்பட்டோர் பற்றிய அலுவலக பிரதிநிதிகள், சட்டத்தரணிகள் கலந்து கொண்டதோடு, மன்னார் மாவட்டத்தில் காணாமலாக்கப்பட் டோரைத் தேடும் நூற்றுக்கணக்கான உறவினர்களும் கலந்து கொண்டனர்.

மன்னார் மாவட்டத்தில் இதுவரை காணாமற்போனவர்கள் தொடர்பாக 612 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவற்றில் 427 விண்ணப்பங்களுக்கான பூர்வாங்க விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும், இடைக்கால நிவாரணம், காணாமல் போனதற்கான சான்றிதழ், மரண சான்றிதழ் என்பவற்றை வழங்கியுள்ளதாக காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தினர் தெரிவித்துள்ளனர்.

(அ)

# யாழ். அபிவிருத்திக்கு ஏற்றவகையில் அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்

## தொழில் அமைச்சர் அனில் ஜெயந்த



யாழ்ப்பாணம், ஏப். 26

யாழ்ப்பாணத்திற்கு ஒப்புரவான அபிவிருத்திக்கு ஏற்றவகையில் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என தொழில் அமைச்சரும், நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சருமான அனில் ஜெயந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்துக்கான அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் தொழில் அமைச்சரும், நிதி, திட்டமிடல் பிரதி அமைச்சருமான பேராசிரியர் அனில் ஜெயந்த பெர்னாண்டோ தலைமையில் நேற்று முன் தினம் மாலை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்திற்கு வருகை தந்த அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர்கள், நிதி அமைச்சின் அதிகாரிகள் திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்டவர்களை வரவேற்ற அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன், மாவட்டத்தின் புள்ளிவிவரங்கள் மற்றும் தேவைப்பாடுகளை முன்வைத்தார்.

மேலும், இக் கூட்டத்தில் கலந்து கொண்ட யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைப்பாளரும் யாழ் மாநகர சபையின் உறுப்பினருமான எஸ். கபிலன் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 2027 - 2028 ஆண்டுக்களில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்ட பாரிய அபிவிருத்தி திட்டங்களின் முன்மொழிவுகளை முன்வைத்தார்.

இக் கூட்டத்தில் யாழ்ப்பாணத்துக்கான அபிவிருத்தி தொடர்பாக பல்வேறு விடயங்கள் அமைச்சரால் ஆராயப்பட்டது.

இதன்போது முதலீடு மேற்கொள்வதற்கு - முதலீட்டுச் சபை மற்றும் ஏனைய திணைக்களங்களால் அனுமதிக்காக அனுப்பிவைக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கான அனுமதியினை விரைவாக வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும், 2027 மற்றும் 2028 இற்காக பாரிய திட்டங்களின் சாத்தியப்பாடான திட்டங்களை எதிர்வரும் ஆண்டுகளின் வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளடக்க நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சரால் தெரிவிக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான ச.சிறிபவானந்தராஜா, க.இளங்குமரன்,. ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன், திறைசேரியின் பணிப்பாளர் நாயகம், தேசிய திட்டமிடல் பணிப்பாளர் நாயகம், தேசிய அபிவிருத்தி பணிப்பாளர் நாயகம், மேலதிக பணிப்பாளர் நாயகம், மாகாண அமைச்சின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர் நிதி, மேலதிக அரசாங்க அதிபர், பிரதம கணக்காளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், திணைக்களங்களின் தலைவர்கள், நிதி அமைச்சின் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

(அ)

# முல்லைத்தீவு விவசாயிகளுக்கு வட்டியில்லாக் கடன் வழங்கல்

முல்லைத்தீவு, ஏப். 26

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் வட்டியில்லா கடன் வழங்கும் நிகழ்வு விசுவமடு கிழக்கு அட்டைக்குளம் சிறுவர் பூங்காவில் நேற்று முன் தினம் இடம்பெற்றது. பொருளாதார ரீதியாக பின்னடைவை சந்தித்த மக்களை முன்னோக்கிக் கொண்டு செல்லும் நோக்கோடு, தெரிவு செய்யப்பட்ட விவசாய பயிர்ச்செய்கை செய்யும் 11 பயனாளிகளுக்கு தலா 50 ஆயிரம் ரூபா வீதம் வட்டி இல்லா கடனாக 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கி வைக்கப்பட்டது. புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவில் புதிய கிராம மக்கள் மகளிர் உறுப்பினர்களில் தெரிவு செய்யப்பட்ட 11 மகளிர் உறுப்பினர்களுக்கு விவசாய நடவடிக்கைகளுக்காக ஒவ்வொரு பயனாளிகளுக்கும் தலா 50 ஆயிரம் ரூபா வழங்கி வைக்கப்பட்டது. அன்பாலயம் அமைப்பின் நிதி அனுசரணையோடு, புதிய கிராம மக்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற நிகழ்வில், புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் வே.கரிகாலன், திட்ட இணைப்பாளர், பயனாளிகள் என பலர் கலந்து கொண்டனர். (அ)

# ஈரானுடன் பேச்சுவார்த்தையில் பங்கேற்க அமெரிக்கக் குழு இஸ்லாமாபாத் பயணம்

இஸ்லாமாபாத், ஏப். 26

ஈரான் உடனான அமைதிப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள அமெரிக்க பிரதிநிதிக் குழுவினர் பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்துக்குச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் தலைமையில் நடைபெறும் 2 ஆம் கட்ட அமைதிப் பேச்சுவார்த்தையில் பங்கேற்க ஈரானிய வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி நேற்று முன் தினம் இரவு அந்நாட்டு தலைநகர் இஸ்லாமாபாத்துக்குச் சென்றுள்ளார்.

இதனைத் தொடர்ந்து, அமெரிக்க அதிகாரி ஸ்டீவ் விட்கோப் மற்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் மருமகனும் அவர் நிர்வாகத்தின் மூத்த அதிகாரியுமான ஜராட் குஷ்னர் ஆகியோர் நேற்று பாகிஸ்தான் சென்றுள்ளனர். அவர்கள் ஈரானிய அதிகாரிகளுடன் நேரடி பேச்சுவார்த்தையில் ஈடுபடுவார்கள் என அமெரிக்க ஜனாதிபதியின் வெள்ளை மாளிகை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு



# புத்தகங்களைக் கொண்டாடுவோம்!

உதயை மு. வீரையன்

புத்தகம் என்பது என்ன? புத்தகம் என்பது புதிய உலகங்களுக்கான நுழைவாயில் அறிவின் கருவூலம் மனித கற்பனையின் உச்சம் என்றும் கூறலாம். இது கருத்துகளின் தொகுப்பான கட்டுரை கற்பனையின் ஊற்றான கதைகள் மற்றும் தகவல்களின் உருவகமாகும்.

புத்தகங்கள் புனைகதை அல்லது புனைகதை அல்லாத படைப்புகள், கவிதை அல்லது உரைநடை, பாடப் புத்தகங்கள் அல்லது சுயசரிதைகள் மற்றும் வடிவங்கள் தொழில்நுட்பத்துடன் தொடர்ந்து உருவாகின்றன.

புத்தகங்கள் நமது பண்பாட்டின் அடிப்படை அம்சமாகும். கடந்த காலத்துடன் அவை நம்மை இணைக்கின்றன. அத்துடன் எதிர்காலம் குறித்த நுண்ணறிவை வழங்குகின்றன. ஆர்வத்தைத் தூண்டி, படைப்பாற்றலைப் பெருக்கி, எண்ணற்ற வழிகளில் நம் வாழ்க்கையை வளப்படுத்த வந்தவையாகும்.


மனித நாகரிகத்தை வடிவமைப்பதில் உள்ளார்ந்த மதிப்பு மற்றும் கல்வி, ஊக்கம், மகிழ்விக்கும் திறன் ஆகியவற்றுக்காக புத்தகங்கள் மதிக்கப்பட வேண்டும்.

இந்த காலத்தால் அழியாத கருவூலங்கள் ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்கு அறிவு, கதைகள் மற்றும் கருத்துகளை வழங்குவதற்கான ஒரு வழிகாட்டியாகச் செயல்படுகின்றன. புத்தகங்கள் மூலம் நமது சிந்தனைத் திறனை மேம்படுத்தலாம். நமது சொற்களஞ்சியத்தை விரிவுபடுத்தலாம். நமது நடைமுறை வாழ்க்கையிலிருந்து பிரித்து ஆராயப்படாத உலகங்களுக்கு அழைத்துச் செல்லலாம். பல்வேறு நாகரிகம் மற்றும் பண்பாட்டை அனுபவிக்க வாய்ப்பளிக்கின்றன.

புத்தகங்கள் - நெருக்கடியான காலங்களில் நமக்கு ஆறுதலைத் தருகின்றன. நமது வாழ்விலும், சமுதாயத்திலும் அதன் செல்வாக்கை அங்கீகரிப்பதற்காகவே நாம் புத்தகங்களைக் கொண்டாடுகிறோம். மேலும், அவை நம்மையும், மற்றவர்களையும் உலகத்தை ரசிக்க ஊக்கப்படுத்துகின்றன.

உலக மக்களால் கொண்டாடப்படும் புத்தக தினம், புத்தகங்களைப் பண்பாட்டு வெளிப்பாட்டின் ஒரு வடிவமாகக் காட்டுகிறது. வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கிறது. அனைவரும் புத்தகங்களைத் தேட வேண்டும் என்று வாதிடுகிறது. 1995-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது முதல் இப்போதுவரை 100-க்கும் மேற்பட்ட நாடுகளில் கொண்டாடப்படுகிறது. புத்தக தினம் கொண்டாடுவதற்குக் காரணமான மூன்று தலைசிறந்த மேதைகளை நினைவுபடுத்துகிறது. ஆங்கில நாடகாசிரியரும், கவிஞருமான வில்லியம் ஷேக்ஸ்பியர் ஆங்கில மொழி மற்றும் இலக்கியத்துக்கான அவரது நீடித்த பங்களிப்பு நினைவுகூரப்படுகிறது.

புத்தக ஆர்வலர்கள் ஒன்றுகூடி வாசிப்பின் மகிழ்ச்சியையும், ஆற்றலையும் கொண்டாடவும், நமது உலகத்தை வடிவமைப்பதில் எழுத்தாளர்கள் மற்றும் படைப்பாளர்களின் முக்கியத்துவத்தைப் பற்றிச் சிந்திக்கவும் இந்த ஒரு நாள் அடையாளப்படுத்துகிறது.



உலகப் புத்தகத் தலைநகரம் என்பது நூல்கள் மற்றும் வாசித்தல் துறைகளில் ஒரு நகரத்தின் செயல்பாடுகளின் தரம் மற்றும் முன்னேற்றத்தை அங்கீகரிக்கும் முகமாக ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனத்தால் (யுனெஸ்கோ) அந்த நகரத்துக்கு வழங்கப்படும் சிறப்புப் பெயராகும்.

பன்னாட்டுக் குழந்தைகள் புத்தக நாள் 1967-ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் ஏப்ரல் 2-ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. இந்நாள் ஆன்சு கிறிஸ்டியன் ஆண்டர்சன் (1805-1875) என்னும் குழந்தை இலக்கிய எழுத்தாளரின் பிறந்த நாள் ஆகும். இளம் மக்களுக்கான புத்தகங்களின் பன்னாட்டு வாரியம் என்னும் பன்னாட்டு அமைப்பு இந்நாளைக் கொண்டாடும் முன்முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

புத்தகம் படிக்கும் விருப்பத்தை ஊக்குவித்தல், குழந்தைகளுக்கான புத்தகங்களின் மீது கவனத்தை ஈர்த்தல் என்னும் இரண்டு நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக இந்நாள் கொண்டாடப்படுகிறது.

**"இன்று குழந்தைகள் நீங்கள் - எனினும்**
**இனி இந்த நாட்டினை ஆளப்பிறந்தீர்"** என்று பாவேந்தர் பாரதிதாசன் பாடினார்.

அந்தக் குழந்தைகளை முழு மனிதர்களாக மாற்றும் ஆற்றல் புத்தகங்களுக்கே இருக்கிறது. ஒவ்வொரு குழந்தைக்கும் பிறந்த நாள் பரிசாக புத்தகங்களையே வாங்கித் தரவேண்டும்.

பெற்றோர்கள் பிள்ளைகளுக்குப் பொருட் செல்வத்தைச் சேர்த்து வைப்பதைவிட அறிவுச் செல்வத்தையே சேர்த்து வைக்க வேண்டும் என்றே அறிஞர்கள் அறிவுறுத்துகின்றனர்.

பொது அறிவு நூல்கள், அறிவியல் நூல்கள், சிறுகதைகள், கவிதைகள், நாவல்கள், பழந்தமிழ் இலக்கியங்கள், கட்டுரை நூல்கள் எனப் பலவிதமான இலக்கிய நூல்கள், திறனாய்வு, மருத்துவம், சமையல், உடல்நலன் குறித்த புத்தகங்கள் என ஆயிரக்கணக்கான நூல்களைத் தன்னகத்தே கொண்டிருந்தும் கேட்பாரற்ற சிறுமி போல தெருவோரம் கவனிப்பாரற்று நூலகங்கள் இருக்கலாமா?

"உன் நண்பனைச் சொல் உன்னைப் பற்றி சொல்கிறேன்" என்றார் சாக்ரடீஸ். ஜேம்ஸ் ஆலன் என்னும் அறிஞர், "நீ எந்தப் புத்தகத்தைப் படிக்கிறாய், படித்திருக்கிறாய் என்பதைச் சொல். நீ யாரென்பதைச் சொல்கிறேன்" என்றார்.

"ஒரு புத்தகம் நூறு நண்பர்களுக்குச் சமம்" என்று புவிஈர்ப்பு விசையைக் கண்டறிந்த ஐசக் நியூட்டன் கூறினார். "ஒரு புத்தகத்தைக் காப்பாற்றி அடுத்த தலைமுறைக்குத் தருபவனே மனிதகுலத்தின் உண்மையான விடிவெள்ளி' என்றார் அறிஞர் ஜான் மில்டன்.

"ஒரு கோடி ரூபாய் கிடைத்தால் என்ன செய்வீர்கள்" என மகாத்மா காந்தியிடம் கேட்டபோது அவர் சொன்ன பதில் என்ன தெரியுமா? "நூலகம் கட்டுவேன்" என்றாராம்.

மனித சமுதாயத்தின் மனவளத்தைப் பெருக்க, சமூகத்தை மேம்படுத்த எது சரியான முதலீடு என்பதை உணர்ந்து அவர் சொன்ன வார்த்தைகள் இவை.

மலர்ந்த பூக்களில்தான் நறுமணம் வீசும் ஓடும் நீரோடைகள் தூய்மையாக இருக்கும் எரிகிற விளக்குதான் இன்னொரு விளக்கை ஏற்ற முடியும் அறிவார்ந்த புத்தகங்களை வாசிக்கிறவனே அறிஞனாக முடியும். எனவே, உலகப் புத்தக தினத்தைக் கொண்டாடுவோம். (தினமணி)

## இந்தவார ராசிபலன் 26.04.2026 - 02.05.2026

ஞாயிற்றுக்கிழமை
பராபவ வருடம் - சித்திரை 13
நல்ல நேரம்: 7.31 - 09.00
ராகு காலம் : 4.30 - 06.00
திதி : தசமி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

மேஷ ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக மேன்மையான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் பொறுப்பு அதிகமாக இருக்கும், சில இடங்களில் விட்டுக் கொடுத்துப் போக வேண்டிய நிலை இருக்கும். உத்தியோக ரீதியாக சிரமங்கள் நிவர்த்தியாகும், ஆனால் எதிர்பார்த்த ஒரு செயல் சிறப்பாக நடக்கும். தொழில் வியாபாரம் பெருகி கையிருப்பு அதிகரிக்கும், புதிய முயற்சிகளில் நம்பிக்கையாக ஈடுபடலாம். மனமகிழ்ச்சி உண்டாகும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

ரிஷப ராசிக்காரர்களுக்கு சித்திரை மாத முதல் வாரம் வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை சுமையாக இருக்கும், சில இடங்களில் சுவையாக இருக்கும். உத்தியோக ரீதியாக பதவி மாற்றம் வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் தடையில்லாமல் நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரிக்கும். தொழிலை மேம்படுத்த தகுந்த நேரம். குடும்பத்தில் இருந்து வந்த குழப்பங்கள் மறையும். பிள்ளைகளால் மன மகிழ்ச்சி உண்டாகும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

மிதுன ராசிக்காரர்களுக்கு புத்தாண்டு முதல் வாரம் நன்மையான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை கடினமாக இருக்கும், சில இடங்களில் சுலபமாக இருக்கும். உத்தியோக ரீதியாக உயர்வும் செல்வாக்கும் கிடைக்கும், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் தள்ளி போகலாம். வியாபாரத்தில் பொருள் வரவும் கையிருப்பும் அதிகரிக்கும், புதிய முயற்சிகளில் நிதானமாக ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த இடையூறுகள் நீங்கி உற்சாகம் பெருகும், பிள்ளைகளால் சில பிரச்சனைகள் வரலாம்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

கடக ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக உயர்வான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் கடுமையான நிலை உண்டாகும், சில இடங்களில் எதிர்ப்புகள் இருக்கும். உத்தியோக ரீதியாக இடமாற்றம் உண்டாகலாம், ஆனால் நினைத்த ஒரு காரியத்தில் தாமதம் உண்டாகும். வியாபாரத்தில் எதிர்ப்புகள் மறைந்து லாபம் அதிகரிக்கும், புதிய முயற்சிகளில் அக்கறையாக ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த பிரச்சனைகள் நீங்கும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

சிம்ம ராசிக்காரர்களுக்கு சித்திரை புத்தாண்டு முதல் வாரம் மிதமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் அழுத்தம் இருக்கும், சில இடங்களில் சவாலாக இருக்கும். உத்தியோக ரீதியாக பதவி உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் சற்று சுணக்கமாக நடக்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் அதிகரித்து பண வரவு முன்னேற்றமாகும். மூலதனத்தை அதிகரிக்க தகுந்த நேரம் இது. குடும்பத்தில் இருந்து வந்த மன முரண்பாடுகள் விலகும், செலவுகள் வரலாம்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

கன்னி ராசிக்காரர்களுக்கு தமிழ் புத்தாண்டு முதல் வாரம் மிக மிதமான பலன்கள் இருக்கும். சில இடங்களில் வேலையில் அழுத்தம் இல்லாமல் இருக்கும், சில இடங்களில் சவாலாக இருக்கும். உத்தியோக ரீதியாக ஊதிய உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் கொஞ்சம் தடையில்லாமல் நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் வருமானமும் அதிகரிக்கும், புதிய முயற்சிகளில் எச்சரிக்கையாக ஈடுபடலாம். குடும்பத்தில் புரிந்துணர்வு இல்லாத நிலை உண்டாகலாம், மன நிம்மதி நிலைக்கும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

துலாம் ராசிக்காரர்களுக்கு பராபவ ஆண்டு முதல் வாரம் மிக உயர்வான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் அழுத்தம் உண்டாகும் , சில இடங்களில் பதட்டமாக இருக்கும். உத்தியோக ரீதியாக சில உயர்வு வரலாம், ஆனால் நினைத்த ஒரு காரியம் சற்று தாமதமாக நடக்கும். வியாபாரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டு வருமானம் அதிகரிக்கும், புதிய முயற்சிகளில் தைரியமாக ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து முரண்பாடுகள் நீங்கும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

விருச்சிக ராசிக்காரர்களுக்கு சித்திரை மாத முதல் வாரம் மிக சிறப்பான பலன்கள் கிடைக்கும் . சில இடங்களில் வேலையில் சோதனை உண்டாகும், சில இடங்களில் சாதனை இருக்கும். உத்தியோக ரீதியாக சில சிரமங்கள் வரலாம். ஆனால் எதிர்பார்த்த பதவி உயர்வு வேலை மாறுதல் தள்ளிப் போகலாம். வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தில் இருந்து வந்த பிரச்சனைகள் நீங்கி மன அமைதி உண்டாகும், பிள்ளைகளால் மருத்துவச் செலவு வரலாம்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

தனுசு ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக சிறப்பான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் மேன்மையாக இருக்கும். சில இடங்களில் சவாலாக இருக்கும். உத்தியோக ரீதியாக சில பிரச்சனைகளை எதிர்பார்க்கலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் நல்லபடியாக நடக்கும். வியாபாரத்தில் லாபம் சற்று மிதமாக இருக்கும். புதிய முதலீடுகளில் இறங்க ஏற்ற நேரம் இது. குடும்பத்தில் குழப்பங்கள் விலகும், பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

மகர ராசிக்காரர்களுக்கு தமிழ் வருடத்தின் முதல் வாரம் மிக சிறப்பான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் சவால் உண்டாகும், சில இடங்களில் போராட்டமாக இருக்கும். உத்தியோக ரீதியாக பதவி உயர்வு வரலாம், எதிர்பார்த்த ஒரு காரியம் உடனே நடக்கும். வியாபாரத்தில் பொருளாதார முன்னேற்றம் அதிகரிக்கும், தொழிலில் புதிய முதலீடுகளை போட்டு தைரியமாக இறங்கலாம். குடும்பத்தில் இருந்து வந்த மன கஷ்டம் விலகிகும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

கும்ப ராசிக்காரர்களுக்கு சித்திரை புது வருடத்தின் முதல் வாரம் நன்மை தீமை கலந்த பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் கடுமையாக இருக்கும், சில இடங்களில் போராட்டமாக இருக்கும். உத்தியோக ரீதியாக சில மாற்றங்கள் வரலாம், ஆனால் எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். வியாபாரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டு லாபம் கிடைக்கும், புதிய முயற்சிகளுக்கு வெற்றிகரமான நேரம். குடும்பத்தில் இருந்து வந்த சிக்கல்கள் நீங்கும், பிள்ளைகளால் சில பிரச்சனைகள் முடிவுக்கு வரும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

மீன ராசிக்காரர்களுக்கு பராபவ வருடத்தின் முதல் வாரம் மிக உயர்வான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வெற்றிகரமாக இருக்கும். சில இடங்களில் சவாலாக இருக்கும். உத்தியோக ரீதியாக சில உயர்வுகளை எதிர்பார்க்கலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் தடையில்லாமல் நடக்கும். வியாபாரத்தில் பண வரவு அதிகமாக இருக்கும். புதிய திட்டங்களுக்கு சிறப்பான நேரம் இது. குடும்பத்தில் இருந்து வந்த குழப்பங்கள் விலகும், பிள்ளைகளால் மன மகிழ்ச்சி உண்டாகும். குடும்பத்திற்காக பண வரவை அதிகரிக்க அக்கறை காட்ட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அரசாங்கத்தின் 'தூய்மை' முத்திரையை சேதப்படுத்தும் முயற்சிகளில் எதிரணி மும்முரம்



வீரகத்தி
தனபாலசிங்கம்

பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டுக்கும் அதிகமான பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டிருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை, அதன் பதவிக்காலத்தில் ஒன்றை வருடங்களுக்குள்ளாக பதவி விலகுமாறு எதிரணி அரசியல் கட்சிகள் கேட்கத் தொடங்கியிருக்கின்றன.

கூட்டு எதிரணி என்று தங்களை அழைத்துக் கொள்கின்ற-மிகவும் பலவீனப்பட்டிருக்கும் இந்த கட்சிகளிடம் (தோல்வி நிச்சயம் என்று தெரிந்திருந்தும், அவ்வப்போது அமைச்சர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணைகளைக் கொண்டுவந்து பாராளுமன்றத்தில் ஆவேசமாகப் பேசிவிட்டுப் போவதைத் தவிர) அரசாங்கத்துக்கு எதிராக உருப்படியான அரசியல் தந்திரோபாயம் எதுவும் இல்லை. ஆனால், கொழும்பில் அடிக்கடி நடத்துகின்ற செய்தியாளர்கள் மகாநாடுகளை மாத்திரம் கூட்டாக நடத்துகின்றன.

2025 மே உள்ளூராட்சி தேர்தல்களில் தேசிய மக்கள் சக்தி நாடளாவிய ரீதியில் பெற்ற வாக்குகள் 2024 பாராளுமன்ற தேர்தலில் அது பெற்ற வாக்குகளை விடவும் சுமார் 18 இலட்சம் குறைவாக இருந்ததனால், அடுத்து வரக்கூடிய எந்தவொரு தேர்தலிலும் ஆளும் கட்சி பாரிய வீழ்ச்சியைச் சந்திக்கும் என்ற நம்பிக்கையில் இந்த எதிரணி கட்சிகள் மாகாண சபை தேர்தல்களை விரைவாக நடத்துமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்து வந்தன.

மாகாணசபை தேர்தல்கள் எட்டு வருடங்களாக நடத்தப்படாமல் இருப்பதால் மாகாணங்களின் நிர்வாகங்கள் மக்கள் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்படாமல் அவர்களின் ஜனநாயக உரிமை மறுக்கப்படுகிறது என்ற கவலையில் அந்த தேர்தல் கோரிக்கை முன்வைக்கப்பட்டதாக கூறமுடியாது. அரசாங்கம் மக்கள் செல்வாக்கை இழந்து வருகிறது என்று காண்பிக்க வேண்டும் என்பதே இந்த கட்சிகளின் நோக்கம்.

பதவிக்கு வந்த ஒரு வருடத்துக்குள் மாகாணசபை தேர்தல்களை நடத்துவதாக தேசிய தேர்தல்களின்போது வாக்குறுதியளித்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தற்போது மாகாண சபைகளுக்கு எந்த முறையின் கீழ் தேர்தல்களை நடத்துவது என்பது குறித்து ஆராய்வதற்கு பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை அண்மையில் நியமித்தது. மூன்று தடவைகள் கூடிய தெரிவுக்குழுவின் அடுத்த கூட்டம் திகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.


மாகாணசபை தேர்தல்களை விரைவாக நடத்தும் நோக்கம் அரசாங்கத்துக்கு இல்லை என்பது தெளிவாகத் தெரிகின்ற நிலையில், அதற்கு நெருக்குதலைக் கொடுக்கக்கூடிய எந்தவொரு போராட்டத்தையும் நடத்துவதற்கான திராணி எதிரணி கட்சிகளுக்கு இல்லை.

மறுபுறத்தில், மாகாணசபை தேர்தல்களை விரைவாக நடத்துமாறு அரசாங்கத்துக்கு நெருக்குதலைக் கொடுப்பதற்கு மக்கள் போராட்ட இயக்கத்தை முன்னெடுக்கப் போவதாக இடைக்கிடை அறிவிக்கும் சில தமிழ் கட்சிகள் சில நாட்களில் அதை மறந்து விடுகின்றன. உண்மையில், இது விடயத்தில் வடக்கு, கிழக்கில் இருந்தோ அல்லது தென்னிலங்கையில் இருந்தோ அரசாங்கத்துக்கு எந்தவிதமான நெருக்குதலும் கிடையாது.

தற்போது தென்னிலங்கை எதிரணி கட்சிகள் பதவி துறந்து இடைக்காலப் பொதுத்தேர்தலுக்கு வழிவிடுமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கத் தொடங்கியிருக்கின்றன.

ஐக்கிய தேசிய கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி, சர்வஜன சக்தி மற்றும் சில கட்சிகள் கடந்த வியாழக்கிழமை கூட்டிய செய்தியாளர்கள் மாநாட்டில் உரையாற்றிய முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் அரசாங்கம் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தினார்.

" தரங்குறைந்த நிலக்கரி இறக்குமதி, இணைய ஊடுருவல் மூலமாக திறைசேரியின் பணம் மோசடி என்று பல்வேறு ஊழல்கள் கடந்த சில வாரங்களில் இடம்பெற்றிருப்பதை காண்கிறோம். அரசாங்கம் அதன் இயலாமையை தெளிவாக வெளிக்காட்டியிருக்கிறது. தரங்குறைந்த நிலக்கரி கொள்வனவு போன்ற முறைகேடுகளை ஒரு அமைச்சர் தனியாக திட்டமிட்டுச் செய்ய முடியாது. அமைச்சரவையின் முழுமையான ஆதரவு இல்லாமல் அவரால் அதைச் செய்திருக்க முடியாது. அதனால், அரசாங்கம் பதவி விலக வேண்டும் என்று நாம் கோருகிறோம்' என்று தெரிவித்தார்.





இதனிடையே, கடந்த வாரம் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச புத்தாண்டில் மீண்டும் ஆட்சியதிகாரத்தைப் பெறுவதற்கான முக்கியமான திட்டம் ஒன்று தங்களிடம் இருப்பதாகவும் விரைவில் ஏற்படப்போகும் அரசியல் மாற்றத்துக்கு தங்களது கட்சி முழுமையாகத் தயாராக இருக்கிறது என்றும் கூறினார்.

தங்களிடம் இருக்கும் திட்டம் குறித்து ராஜபக்ச விரிவாகக் கூறவில்லை. ராஜபக்ச குடும்பத்துக்கு நீண்ட நாட்களாக அதிகாரத்தில் இல்லாமல் இருப்பது கஷ்டமாக இருக்கலாம். ஆனால், நாட்டு மக்களுக்கு மீண்டும் எதற்காக அந்த குடும்பத்தின் ஆட்சி தேவை? இலங்கை அரசியலில் முன்னரும் பல தசாப்தங்களாக குறிப்பிட்ட சில மேல்வர்க்க குடும்பங்கள் ஆதிக்கம் செலுத்தி வந்தன. அவர்களை மக்கள் தேர்தல்களில் தான் தோற்கடித்து அதிகாரத்தில் இருந்து இறக்கினார்கள். ஆனால், இலங்கையில் மாத்திரமல்ல, தெற்காசியாவிலேயே. முதன்முதலாக மக்கள் கிளர்ச்சியின் மூலமாக தூக்கியெறியப்பட்ட ஆட்சி தங்களது குடும்பத்தின் தலைமையில் இருந்தது என்பதை ராஜபக்சாக்கள் மறக்கக்கூடாது.

தேசிய மக்கள் சக்தியை பாராளுமன்றத்தில் தோற்கடிக்க முடியாது. அதனால், முன்னைய அரசாங்கங்களின் காலத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களை பேரம் பேசி விலைக்கு வாங்கி இன்றைய அரசாங்கத்தைப் பலவீனப்படுத்துவது என்பது சாத்தியமில்லாத ஒரு காரியம். அதனால், பாராளுமன்றத்தில் கொடுக்கும் "தொல்லைகளினால்" அரசாங்கத்தை எதுவும் செய்துவிட முடியாது.

தேசிய தேர்தல்களின்போது நடைமுறைச் சாத்தியத்தைப் பற்றி கிஞ்சித்தும் சிந்திக்காமல் தேசிய மக்கள் சக்தி பெருவாரியான வாக்குறுதிகளை அள்ளிவீசியது. அவற்றை நிறைவேற்ற முடியாமல் அரசாங்கம் தடுமாறிக் கொண்டிருந்தபோது அதற்கு 'கெடுதியில் நன்மை' போன்று கடந்த கடந்த வருட பிற்பகுதியில் 'டித்வா' சூறாவளியும் இந்த வருடம் மார்ச் மாதம் முதல் மத்திய கிழக்குப் போரும் அமைந்து விட்டன. அந்த போரின் விளைவாக முழு உலககுமே பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுக்கின்ற சூழ்நிலை வாக்குறுதிகளைக் காப்பாற்றாமல் இருப்பதற்கு அரசாங்கத்துக்கு வசதியை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது.

புதிய அரசியல் கலாசாரமும் முறைமை மாற்றமும் காற்றோடு போய்விட்டன. ஏதாவது மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்றால், அது ஏற்கெனவே நடைமுறையில் இருந்த முறைமைக்கு அரசாங்கம் தன்னை இசைவாக்கிக் கொண்டிருப்பதை மாத்திரமே கூறமுடியும்.

பாரம்பரிய அரசியல் அதிகார வர்க்கத்தின் தவறான ஆட்சி முறைக்கு எதிரான மக்கள் கிளர்ச்சியின் விளைவாக நாட்டில் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலை மாற்றம் அதிகாரத்துக்கு கொண்டு வந்த தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஊழல் முறைகேடுகளுக்கும் அதிகார துஷ்பிரயோகத்துக்கும் எதிராக கடுமையான விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டியிருக்கிறது.

ஆனால், அதேவேளை, முன்னைய ஆட்சியாளர்களுக்கு சேவை செய்த அதே ஊழல்தனமான அரசு இயந்திரத்தைப் பயன்படுத்தியே அரசாங்கம் நிருவாகத்தை நடத்த வேண்டியிருப்பதால் பல்வேறு நெருக்கடிக்கு உள்ளாகிறது. அண்மைக் காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்ற முறைகேடுகளை இந்த பின்புலத்திலேயே நோக்க வேண்டும்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் "தூய்மை" முத்திரையை சேதப்படுத்துவதற்கு எதிரணி கட்சிகள் அவற்றினால் இயன்றவரை முயற்சிகளை மேற்கொள்கின்றன. அதற்கு முகங்கொடுப்பதில் அரசாங்கம் தடுமாற வேண்டிய அளவுக்கு சில ஊழல் குற்றச்சாட்டுக்கள் அமைகின்றன என்பது உண்மை. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தமிழ்த் தலைவர்களிடம் மக்கள் எதிர்பார்ப்பது படக்காட்சிகளல்ல, பயனுள்ள முன்னெடுப்புகளே!



கந்தையா
அருந்தவபாலன்

அண்மையில் இந்தியாவின் துணை ஜனாதிபதி சந்திரபுரம் பொன் னுசாமி ராதாகிருஸ்ணன் இலங்கைக்கு வருகை தந்திருந்தார். தனது வருகையின் போது அவர் இலங்கையின் முக்கிய தலைவர்கள் பலரையும் சந்தித்திருந்தார். அந்தவகையில் தமிழ்க் கட்சிகளின் தலை வர்கள் சிலரையும் அவர் சந்தித்திருந்தார். இந்தச் சந்திப்புக்கான திகதி, நேரம், இடம் மட்டுமன்றி யாரை அழைப்பது என்ற சகல விடயங்களும் இந்திய உயர் ஸ்தா னிகரகத்தின் தெரிவுக்குரியவையாகும். இதற்கமைய இச்சந்திப்பில் கலந்து கொண்ட தமிழ்த் தலைவர்களின் நடத்தைகள், கோரிக்கைகள், அது தொடர்பான துணை ஜனாதிபதியின் எதிர்வினைகள் தொடர்பாக வெளிவந்த செய்திகள் எவையும் தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் தொடர்பில் நம்பிக்கை தருவதாக அமையவில்லை. பதிலாக தமது தலைவர்கள் தொடர்பாக தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி துணை ஜனாதிபதிக்கும் கூட அதிருப்தியையே தோற்றுவித்துள்ளதை உணரமுடிகிறது. ஆனால் இதைப்பற்றியெல்லாம் அத்தலைவர்கள் கவலைப்படுவது போலத் தெரியவில்லை.

துணை ஜனாதிபதியுடனான குறித்த சந்திப்பு சம்பிரதாயபூர்வமானதொன்று மட்டுமே. தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கான உத்தியோகபூர்வமான எந்த நிகழ்ச்சி நிரலையும் அது உள்ளடக்கியதொன்றல்ல. அத்துடன் தமிழ் மக்களின் பிரச்சினைகள் மற்றும் இலங்கை ஆட்சியாளர்களின் நிலைப்பாடுகள் தொடர்பில் அவருக்கோ அல்லது இந்தியத்தரப்புக்கோ சொல்லித் தான் புரியவைக்கவேணுமென்ற எந்தத் தேவையுமில்லை. அதற்கு மேலாக இந்திய அரசாங்கத்தில் அவரின் வகிபங்கு எத்தகையது என்பதுவும் கவனத்தில் கொள்ளப்படவேண்டும். இந்திய அரசியலமைப்பில் ஜனாதிபதிப்பதவி நிறைவேற்று அதிகாரம் கொண்டதொன்றல்ல. பெயரளவிலான அதிகாரம் கொண்டதொன்று. ஒருவகையில் 1978 இல் புதிய அரசியலமைப்பு வருவதற்கு முன் இலங்கையிலிருந்த ஜனாதிபதி பதவியை ஒத்ததொன்று. அதனை 'றபர் ஸ்ராம்ப்' பதவி என்று வர்ணிப்பவர்களுமுண்டு. ஜனாதிபதி பதவியே அவ்வாறெனில் துணை ஜனாதிபதி பதவி எவ்வாறானது என்பதைப் புரிந்துகொள்ள முடியும். அவரின் பிரதான பணி மேற்சபை அல்லது மாநிலங்கள் அவை எனப்படும் ராஜ்ய சபாவுக்குத் தலைமை தாங்குவது மட்டுமே. ராதாகிருஸ்ணன் ஆர்எஸ்எஸ் காரர், அந்த அடிப்படையில் ஆளும் பாரதிய ஜனதாக் கட்சியின் மூத்த உறுப்பினர் அதற்கு மேலாக தமிழ் நாட்டைச் சேர்ந்தவர் என்ற அடிப்படையில் அரசியல் ரீதியான முக்கியத்துவம் அவருக்கு வழங்கப்படுகிற தேயன்றி ஆட்சியாளரின் தீர்மானங்களில் அவரது செல்வாக்கு வரையறுக்கப்பட்டதொன்றாகும். இவற்றை இங்கு சுட்டிக் காட்டுவதன் நோக்கம் அவரைத் தரம் தாழ்த்துவதற்கல்ல, அவருடனான சந்திப்பினை தமிழ்த்தலைவர்கள் எவ்வாறு அரசியல் ரீதியாகக் கையாளவேண்டும் என்பதற்காகவே. ஏனெனில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் முன்னர் அண்ணாமலையைச் சந்திப்பதற்காக யாழ்ப்பாணத்திலுள்ள ஹோட்டல் ஒன்றில் தவம் கிடந்த சோக வரலாறும் உள்ளது.

தமிழ்த் தலைவர்கள் துணை ஜனாதிபதியைச் சந்திப்பதில் காட்டிய ஆர்வத்தை அதில் எப்படி ஒற்றுமையாக, நாகரீகமான முறையில் தாம் நடந்து கொள்ளவேண்டும் என்பதில் காட்ட ஏனோ தவறிவிட்டனர். தொடக்கப் பள்ளியிலுள்ள பிள்ளைகள் "அவள் கிள்ளிவிட்டாள், இவன் அடிச்சுப்போட்டான்" என்று நடப்பது போல தம்மை அறிமுகப்படுத்திக்கொள்வதில் முரண்பாடு, கூடநின்று படப்பிடிப்பதில் முரண்பாடு, அரசியல் கோரிக்கை வைப்பதில் வேறுபாடு என பல முதிர்ச்சியற்ற நடத்தைகளை அங்கு அவர்கள் வெளிப்படுத்தியுள்ளதை அறியமுடிகிறது. அயல்நாட்டு தலைவர் ஒருவர் எமது தலைவர்களைப் பார்த்து ஒற்றுமையாகுங்கள் என்று கேட்கும் நிலைமையைத் தோற்றுவித்ததை நினைத்து ஒவ்வொருவரும் வெட்கப்படவேண்டும். குறித்த சந்திப்பில் இத்தலைவர்களின் நடத்தை தொடர்பாக கரடியே காறித்துப்பியதுபோல ஈபிடிபி செயலாளர் டக்ளஸ் தேவானந்தா விமர்சித்திருப்பதையிட்டு இத்தலைவர்கள் சிந்திக்கவேண்டும்.

இதில் கவலைக்குரிய விடயம் என்னவென்றால் துணை ஜனாதிபதியின் ஒற்றுமைக் கோரிக்கை தொடர்பாக குறித்த சந்திப்பில் கலந்துகொண்ட தமிழரசுக் கட்சியின் தலைமைப்பதவியை தற்போது வைத்திருக்கும் சி. [illegible] ஐயா ஊடகங்களுக்கு சொன்ன விடயம்தான். அவர் (துணை ஜனாதிபதி) எவ்வளவு பெரிய மனிசன், அவர் எங்களின் கையைப் பிடித்துக்கொண்டு ஒற்றுமையாகுங்கள் என்று சொல்வதைக் கேட்கத்தானே வேண்டும் என்ற கருத்தை சிவஞானம் ஐயா முன்வைத்துள்ளார். உதைத்தானே மக்களும் சமூகத்தலைவர்களும் இவ்வளவு காலமும் தொடர்ந்து சொல்லி வருகிறார்கள். போதாக்குறைக்கு சென்ற பாராளுமன்றத் தேர்தலிலும் மறைமுகமாக அதைத் தானே அவர்கள் தெரியப்படுத்தினார்கள். அப்போதெல்லாம் தேவைப்படாத ஒற்றுமை இப்போது ஏன் அவசியப்படுகிறது? அல்லது இதைத்தான் மணிகட்டின மாடு சொல்வேண்டும் என்று இருந்தாரா?

தமிழ்க் கட்சிகளிடையே ஒற்றுமை குலைக்கப்பட்டதற்கு குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிதறியதற்கும் இப்போது தமிழரசுக் கட்சி பிளவுண்டு நிற்பதற்கும் சிவஞானம் ஐயாவும் பொறுப்புக் கூறவேண்டிய ஒருவர் என்பதில் வேறு கருத்து இருக்க முடியாது. யுத்தத்திற்குப் பின்னரான இன்றுவரையான காலப்பகுதியில் சிவஞானம் ஐயா தமிழரசுக்கட்சியின் முக்கிய பொறுப்புக்களில் இருந்து வருகிறார். மாவை சேனாதிராசா எல்லாவற்றுக்கும் ஆமாம் போட்ட நேரத்தில் இவர் அவருக்குத் தாளம் போட்டுக்கொண்டிருந்தார். பின்னர் அவரையே தூக்கியெறிவதற்கு உடந்தையாக இருந்துவிட்டு இப்போது தமிழரசைப் பிளப்பதற்கு சுமந்திரனுக்குத் தாளம்போடும் ஒருவராக [illegible] கட்சிப் பிரச்சினைகளை உறுப்பினர்களே வெளியில் கதைக்காதீர்கள் என்று ஊடகங்களின்மூலம் கெஞ்சும் நிலையில்தான் இன்று தமிழரசுக் கட்சியின் ஒற்றுமை காணப்படுகிறது. அதையிட்டு அக்கட்சியில் உள்ள எல்லோருமே வெட்கப்படவேண்டும். கடந்தகாலத்தில் சிவஞா னம் ஐயாபோன்ற மூத்த தலைவர்கள் எல் லாவற்றுக்கும் ஆமாம் போடாது சரியானமு றையில் கட்சியை வழிப் படுத்தியிருந்தால் இன்று அயல்நாட்டுத் தலை வர் ஒருவர் ஒற்றுமை பற்றி இவர்களுக்கு வகுப்பு எடுக்கும் நிலை ஏற்பட்டிருக்காதல்லவா?



மேலும் துணை ஜனாதிபதியுடனான இந்தச் சந்திப்பின் போது சமஷ்டி, கூட்டாட்சி பற்றிக் கோரிக்கை வைப்ப தில் ஏதாவது விளை பயன் உண்டா? இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங் கர் உட்பட முக்கிய மான இந்தியத் தலைவர்களுடனான சந்திப்புக்களிலும், கடிதங்களிலும் இந்தக்கோரிக்கை தானே தொடர்ந்து முன்வைக்கப் படுகிறது. இதுவரை அதில் எத்தகைய முன்னேற்றம் ஏற்பட்டது? இந்தி யாவின் நிலைப்பாடு மிகத் தெளிவானது. மாகாண சபை முறைமைக்கு மேலாக எதுவு மில்லை. அதைக் கூடத் தமிழ்மக் கள் விரும்பும் வகையில் கொடுக்கவேண் டும் என்று இலங்கையை வலியுறுத்தும் நிலையில் இன்று இந்தியா இல்லை. உலக அரசியலும் அதில் இந்திய இலங்கை உறவும் மாற்றமடைந்துவிட்டன. இலங்கையில் தமிழ் மக்களை வைத்துத்தான் தனது தேவைகளை நிறைவேற் றவேண்டும் என்ற நிலை இந்தியாவுக்கு இப்போது இல்லை. அதற்கு மேலாக இந்தியாவிலேயே மாநிலங்களுக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்களை மையப்படுத்தும் போக்கு படிப்படியாக அதிகரித்து வருவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. அவ்வாறான ஒருநிலையில் அந்த அரசாங்கத்தின் துணை ஜனாதிபதியிடம் சமஷ்டி அல்லது கூட்டாட்சிக் கோரிக்கையை முன்வைப்பதில் பயனேதும் இருக்குமா? ஆனால் இந்தியத் துணை ஜனாதிபதி மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு இலங்கை ஜனாதிபதியிடம் தான் கேட்டுக்கொண்டதாக தமிழ்த் தலைவர்களுக்கு கூறியதன் மூலம் ஒருவ ரியில் இந்தியாவின் நிலைப்பாட்டைச் சரியாகத் தெளிவுபடுத்தியுள்ளார் போலத் தெரிகிறது. மாகாண சபைத் தேர்தலை நடத்தவேண்டுமென வலியுறுத்தும், அழுத்தம் கொடுக்கும் நிலையில் இன்று இந்தியா இல்லை. அதற்கு அந்தத் தேவை யுமில்லை. அந்த நிலையை இந்தியாவுக்கு ஏற்படுத்தும் நிலையில் இலங்கைத் தமிழ்த் தரப்பும் இல்லை. மாறிவரும் தேசிய, சர்வதேச அரசியலைப் புரிந்து கொண்டு தமிழ்த்தரப்பு அதற்கேற்றவகையில் தன்னை மாற்றிக்கொள்ளாதவிடத்து யார்மீதும் எந்த அழுத்தங்களையும் தமிழ்த்தரப்பு ஏற்படுத்த முடியாது. வெறும் சந்திப்புக்கள், கோரிக்கைகள், படக்காட்சி கள் மட்டுமே தொடரும். அதனால் எந்த விளைபயனும் ஏற்படப் போவதில்லை. ●

**மாறிவரும் தேசிய, சர்வதேச அரசியலைப் புரிந்து கொண்டு தமிழ்த்தரப்பு அதற்கேற்றவகையில் தன்னை மாற்றிக்கொள்ளாதவிடத்து யார்மீதும் எந்த அழுத்தங்களையும் தமிழ்த்தரப்பு ஏற்படுத்த முடியாது. வெறும் சந்திப்புக்கள், கோரிக்கைகள், படக்காட்சிகள் மட்டுமே தொடரும். அதனால் எந்த விளைபயனும் ஏற்படப்போவதில்லை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பொதுவெளியில் பிளவுண்டு அரங்கேறும் தமிழ்த் தேசியத்தின் தலைவிதி!

**பனங்காட்டான்**

**தமிழ்த் தேசிய கட்சிகளை ஒன்றிணைக்கும் முயற்சி சாண் ஏற முழம் சறுக்குவதுபோல் காணப்படுகிறது. தமிழரின் தலையாய கட்சி என அடையாளம் காணப்படும் தமிழரசு உள்ளகப் பிளவுகளால் முறுகல் நிலையில் உள்ளது. அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் எப்போதும்போல விட்டுக்கொடுக்காத தனிவழியில். ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி எவரையும் நம்பாத நிலையில் பேசிப்பேசி உழல்கிறது.**

- **தமிழ் மக்களுக்கு எதிராக அரசாங்கம் முன்னெடுக்கும் செயற்திட்டங்களை எதிர்ப்பதற்கு இன்னும் இறுக்கமான கட்டமைப்பை உருவாக்குவதற்காக தமிழரசு கட்சியுடன் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி தொடர்ந்து பேசி வருகிறது.**

- **தமிழரசு கட்சிக்குள் இருக்கும் கருத்து வேறுபாடுகளை பொதுவெளியில் பேசுவதை தவிருங்கள் என கட்சியின் பதில் தலைவர் சி.வி.சிவஞானம் பேண்டுகோள்.**

- **வடக்கு கிழக்கு கட்சிகளை ஒழுங்குக்குள் கொண்டு வாருங்கள் என்று தமிழரசு கட்சியிடம் இந்திய துணை ஜனாதிபதி இராதாகிருகஷ்ணன் கோரியுள்ளார்.**

- **தமிழ்த் தேசிய கட்சிகளிடையே தீர்வு காண முன்னெடுக்கப்பட்ட ஒற்றுமை முயற்சியை தமிழ்க் காங்கிரஸ் கட்சி தகர்த்துவிட்டதென தமிழரசுக் கட்சி குற்றச்சாட்டு.**

- **இலங்கை தமிழ்மக்களுக்கு இந்தியா எப்போதும் உறுதுணையாக இருப்பதாகவும் கரிசனையுடனும் அர்ப்பணிப்புடனும் இருப்பதாகவும் அதன் துணை ஜனாதிபதி தமிழ்க் கட்சிகளிடம் நேரடியாகத் தெரிவிப்பு.**

மேற்குறிப்பிட்ட செய்திகளின் தலைப்புகள் கடந்த ஒரு வாரத்துக்குள் தமிழ் ஊடகங்களில் வெளிவந்தவை. இவை வெவ்வேறாக, வெவ்வேறு தினங்களில் வெளிவந்திருந்தாலும் இவை அனைத்துமே ஒன்றுடன் ஒன்று நெருக்கமான தொடர்புடையவை.


தங்களை தமிழ்த் தேசிய கட்சிகள் என்று பெருமையுடன் குறிப்பிட்டுச் சொல்லும் தமிழரசு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி ஆகியவை சம்பந்தப்பட்டதாக சொல்லப்பட்ட விடயங்கள் இவை. தமிழ் தேசிய மக்கள் முன்னணி என்பது கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங் கிரஸ் கட்சியை தலைமையாகக் கொண்டது. புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆகிய மூன்று முன்னாள் ஆயுதக் குழுக்களும் இணைந்த அரசியல் அமைப்பு ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி. இப்போது மேலும் இரண்டு அமைப்புகள் கூட்டணியோடு சேர்ந்து இயங்குகின்றன.

ஆக, தமிழரசு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி என்ற மூன்றும் எவ்வாறு ஒற்றுமையாக தேசிய நலன் சார்ந்து இயங்குகின்றன என்பதை இப்பத்தியின் ஆரம்பத்தில் சொல்லப்பட்ட செய்தித் தலைப்புகள் ஊடாக புரிந்து கொள்ள முடியும்.


அண்மைக் காலத்தில் தமிழரசுக் கட்சியுடன் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி மிக நெருக்கமாக பல பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டது. மாகாண சபை தேர்தல் நடைபெறுமென்ற எதிர்பார்ப்பில் இவர்களுக்கிடையே ஓர் இணைப்பு ஏற்படுமென எதிர்பார்க்கப்பட்டது. இணைப்பு ஏற்பட்டதுபோல இரு தரப்பிலிருந்தும் அவ்வப்போது அறிவிப்புகளும் வெளிவந்தன.

ஆனால், இப்போது கூட்டணி விடுத்திருக்கும் அறிவிப்பை பார்க்கும்போது அவ்வாறு இணைப்பு இன்னும் ஏற்படவில்லை, அல்லது தமிழரசுக் கட்சியை





இன்னும் முழுமையாக கூட்டணி நம்ப வில்லையென்பது தெரிய வருகிறது. இறுக்கமான கட்டமைப்பை உருவாக்க தாங்கள் தமிழரசுடன் பேசி வருவதாக கூட்டணியினர் தெரிவித்திருப்பதை பார்க்கும்போது, ஏதாவது தேர்தல் வந்தால் தான் குருவிச்சை ஒட்டு



இவர்களுக்குள் வரும்போலத் தெரிகிறது.

கடந்த காலங்களில் தமிழரசுக் கட்சி தங்களைத் தூக்கியெறிந்ததை கூட்டணியினர் இன்னும் மறக்கவில்லை போலும். தமிழரசுக் கட்சி பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் அவர்களுக்கும் கூட்டணியின் தலைவர்களில் ஒருவரான சுரேஸ் பிரேமச்சந்திரனுக்குமிடையில் நீண்டகாலமாக நிலவி வரும் ஷஅரசியல் பகைமையும் இதற்கொரு காரணமாக இருக்கலாமென நம்பப்படுகிறது.

தமிழரசுக் கட்சிக்குள் இருக்கும் வேறுபாடுகளை பொதுவெளியில் பேசுவதைத் தவிர்க்குமாறு கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் விடுத்திருக்கும் வேண்டுகோள் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது. உட்கட்சி விவகாரங்களை ஊடகங்கள் ஊடாக கசிய விட்டு, பொதுவெளியில் அதனை சர்ச்சையாக்கி வருபவர் யார் என்பது சி.வி.கே.சிவஞானம் அவர்களுக்குத் தெரியும். கட்சியின் பதில் செயலாளர் சுமந்திரனே அந்த நபர். நேரடியாக தனது கருத்தை அவரிடம் தெரிவிக்காது பொதுவெளியில் இதனைக் கொண்டு வந்து கட்சியின் உட்பிளவை பதில் தலைவரே மேலும் பகிரங்கமாக்கியுள்ளார்.

தமிழரசுக் கட்சிக்குள் இன்று ஏற்பட்டிருக்கும் பிளவு நீதிமன்றத் தீர்ப்பின் பின்னரும்கூட தீர்க்க முடியாத ஒன்றாக நீட்சி பெற்றுள்ளது. கட்சி பல்வேறு காரணிகளால் துண்டு துண்டாகியிருக்கிறது. இந்நிலை மாற்றப்பட வேண்டுமானால் உயர்மட்ட பதவிகளில் மக்கள் கருத்துக்கும் விருப்புக்கும் ஏற்றவாறு மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். இது சி.வி.கே. அவர்களுக்குத் தெரியாததல்ல. பொதுவெளியில் அறிக்கை விடுவதன் மூலம் பொதுவெளியில் பேசுவதை தடுக்க முடியாதென்பதை கட்சியின் இரு கூறுகளும் நன்கு தெரிந்துள்ளன்.

இவ்வாறு அத்திவாரத்தில் ஆட்டம் கண்டு கொண்டிருக்கும் தமிழரசுக் கட்சியிடம், வடக்கு கிழக்கு கட்சிகளை ஒழுங்குக்குள் கொண்டு வாருங்கள் என்று இந்திய துணை ஜனாதிபதி இராதாகிருகஷ்ணன் வேண்டியிருக்கிறார் என்ற செய்தியை படிக்கும்போது நகைச்சுவையாகத் தெரிகிறது. தான் போக வழி தெரியாத மூஞ்சுறிடம் விளக்குமாறையும் இழுக்குமாறு கேட்கப்பட்டது போன்றது இந்த வேண்டுகோள். பாவம் இந்திய துணை ஜனாதிபதி. செய்ய முடியாத ஒரு பொறுப்பை எதற்காகத் தான் தமிழரசுக் கட்சியிடம் ஒப்படைத்தாரோ தெரியாது.

தமிழ்த் தேசிய கட்சிகளிடையே தீர்வு காண முன்னெடுக்கப்பட்ட ஒற்றுமை முயற்சியை தமிழ்க் காங்கிரஸ் கட்சி தகர்த்துவிட்டதென தமிழரசுக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது என்பது அடுத்த செய்தித் தலைப்பு. தமிழரசுக் கட்சியின் இந்த அறிக்கையில் அதன் பதில் தலைவர் சிவஞானமும் பதில் செயலாளர் சுமந்திரனும் கூட்டாக ஒப்பமிட்டுள்ளது கவனத் துக்குரியது. தமிழரசுக்கும் தமிழ் காங்கி ரசுக்குமிடையில் பச்சை மண்ணும் சுட்ட மண்ணும் போன்ற ஒவ்வாமை இன்று நேற்று உருவானதல்ல. அதன் வெளிப் பாடு இப்போதும் உலாவி வருகிறது.

சில மாதங்களுக்கு முன்னர் தமிழ் காங்கிரஸ் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமிழரசின் பதில் தலைவர் சிவஞானத்தை நாடிச் சென்று இரு தரப்பையும் ஓர் இணக்கப்பாட்டுக்கு கொண்டு வர முயற்சி எடுத்தது ஞாபகம் இருக்கிறது. ஆனால், அப்போது தமிழரசுக் கட்சி கஜேந்திரகுமாரின் வேண்டுகோளை தூக்கி எறிந்தது. அதற்கு தங்களுக்கு பொருத்தமான காரணத்தையும் தமிழரசுக் கட்சி தெரிவித்திருந்தது.

இருப்பினும், பொதுவெளியில் பொதுவானவர்கள் சந்திப்பில் முக்கியமாக வெளிநாட்டு ராஜதந்திரிகள், இந்திய அரசின் பிரதிநிதிகளுடனான பேச்சுவார்த்தைகளில் தமிழ்க் காங்கிரசும் அதன் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் மற்றைய தமிழ்த் தேசிய கட்சிகளோடு இணைந்து பங்கேற்று வருகிறது. எனினும், அது தன்னுடைய நிலைப்பாட்டிலிருந்து ஒருபோதுமே விலகியதில்லை.

தற்போது தமிழ்ச் சட்டத்தரணிகள் பேரவை அனைத்துத் தமிழ் தேசிய கட்சிகளையும் இணைத்து மேற்கொண்டு வரும் பேச்சுவார்த்தைகளிலும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அணிகள் பங்குபற்றியே வருகின்றன. இவ்வேளையிலும்கூட தங்களது தனிப்பட்ட நிலைப்பாட்டிலிருந்து அவர்கள் விலக விரும்பாததே அவர்களின் போக்கு.

இதனையே சுட்டிக்காட்டும் தமிழரசுக் கட்சி தங்களுக்கிடையே நீண்டகாலமாக இருக்கும் அரசியல் கசப்புணர்வை உட்புகுத்தி தமிழ்த் தேசிய கட்சிகளிடையே ஏற்பட்டு வரும் ஒற்றுமையை தமிழ்க் காங்கிரஸ் சிதறடித்து விட்டதாக குற்றஞ்சாட்டியுள்ளது. இதற்கு காலமே நின்று பதில் சொல்லும் கடப்பாடுடையது.

இலங்கைக்கு குறுகிய விஜயம் மேற்கொண்ட இந்திய துணை ஜனாதிபதி சி.பி.இராதாகிருக்ஷ்ணன் பல தரப்பட்டவர்களையும் சந்தித்துப் பேசினார். தமிழ்த் தேசிய தரப்பில் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி ஆகிய மூன்றையும் ஒன்றாகவே சந்தித்தார். இலங்கை தமிழ் மக்களுக்கு இந்தியா எப்போதும் உறுதுணையாக இருப்பதாகவும், கரிசனையுடனும், அர்ப்பணிப்புடனும் செயற்படுவதாகவும் இவர் தெரிவித்தார்.

இது ஒன்றும் புதியவை அல்ல. பழைய பல்லவிதான். இந்தியாவின் உண்மையான கரிசனையும் அக்கறையும் தமிழ் மக்கள் மீது இருப்பின் இரு நாடுகளின் ஒப்பந்தம், 13ம் திருத்தம், மாகாண சபை தேர்தல் என்பவை கேட்பாரில்லாத அநாதையாகி இருக்க முடியாது. இப்போது எதுவுமே இல்லை என்ற நிலையில் வெற்று வார்த்தைகளால் எதையும் சொல்லி விடுவதில் அர்த்தமில்லை.


மாகாண சபை தேர்தலை விரைவில் நடத்துமாறு இலங்கை அரச உயர்மட்டத்திடம் தாம் எடுத்துக் கூறியிருப்பதாகவும் துணை ஜனாதிபதி இராதாகிருக்ஷ்ணன் தமிழர் தரப்பிடம் கூறியுள்ளார். அவ்வாறு அவர் கூறியிருப்பதற்கு நன்றி சொல்ல வேண்டும். ஆனால், அது எந்தளவுக்கு உள்வாங்கப்படும் என்பதுதான் கேள்வி.

இலங்கையில் பொதுமக்கள் வாக்குகளால் ஜனாதிபதி தெரிவு செய்யப்படுவது போன்ற நடைமுறை இந்தியாவில் இல்லை. நாடாளுமன்ற உறுப்பினர்களும், மாநில மக்களவை உறுப்பினர்களும் சேர்ந்தே ஜனாதிபதியையும், துணை ஜனாதிபதியையும் இந்தியாவில் தெரிவு செய்வர். அதாவது ஆட்சியிலிருக்கும் கட்சியைச் சார்ந்தவர்களுக்கே இப்பதவி கிடைக்கும். சொல்லப்போனால் நிறைவேற்று அதிகாரமில்லாத ஓர் அலங்காரப் பதவி என்றே இதனைச் சொல்ல வேண்டும். இதனைப் புரிந்து கொண்டால் துணை ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கு இலங்கை அரசு எவ்வாறு செவிசாய்க்கும் என்பதை அறிந்து கொள்ள நேரம் எடுக்காது.

கடந்த ஒரு வாரத்தில் தமிழ்த் தேசிய பரப்பில் என்ன நடைபெறுகிறது என்பதை ஊடகங்கள் வாயிலாக தெரிந்து கொள்ள முடிந்தது. தமிழரசுக் கட்சி உள்ளக மோதலால் பொதுவெளியில் மிக மோசமாக பிளவுபட்டுள்ளது. தமிழ்க் காங்கிரஸ் கட்சி எப்போதும் போல் தனி வழியிலேயே பயணிக்கிறது. ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி இன்னமும் பூரணமாக தமிழரசுக் கட்சியை நம்பாது தொடர்ந்து பேசிக் காலத்தை கழிக்கிறது. சகல தமிழ்த் தேசிய கட்சிகளும் தமிழர் நலன் சார்ந்து இன்னமும் இயங்க ஆரம்பிக்கவில்லை என்றே தோன்றுகிறது. அதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாகவும் தெரியவில்லை. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# "தந்தை செல்வா" 49 ஆவது நினைவு ஆண்டு



## தன்னாட்சி அதிகாரக் கோரிக்கை, இந்திய இலங்கை ஒப்பந்தம் என்பவற்றுக்கு அடித்தளமிட்ட தலைவர்!

### இன்று தமிழ்க் கட்சிகளுக்கு இராதாகிருஷ்ணன் இன்று சொன்னதும் அன்று நேருஜி சொன்னதும், மொராஜி சொன்னதும் இந்திராகாந்தி, பார்த்தசாரதி சொன்னவையும்.

"தமிழ்க் கட்சிகள் ஏன் பலவாகச் செயற்படுகிறீர்கள்?" என்று அண்மையில் விஜயம் செய்த இந்திய உப ஜனாதிபதி இராதாகிருஷ்ணன் கேட்டுவிட்டார் என்று பலர் குழம்பிப்போய்ப் பதிவிடுகின்றனர். எல்லோரும் ஒன்றாகுங்கள் என்று ஏற்கனவே இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரும் "அட்வைஸ்" பண்ணியிருந்தார்.

தமிழர் பிரச்சினைக்குரிய தீர்வுக்கு ஆலோசனை வழங்குவதை விட்டு "சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன்னர் வல்வைப்பெரியார் ஞானமூர்த்தி அப்பா பார்த்த வேலையை இந்திய ராஜதந்திரிகள் ஆலோசனையாகச் சொல்லும் நிலைக்குத் தமிழினம் மீண்டும் தள்ளப்பட்டுள்ளதோ என்று வருந்தவேண்டியுமுள்ளது.

ஓரிருவர் அல்லது ஒரு கட்சியுடன் பேசுவது பலருடன் பேசுவதைவிட இரகசியத்தன்மையும் நம்பிக்கையும் வாய்ந்ததாக இருக்கும் என்பதும் இப்படி ஆலோசனை விடுப்பதன் காரணமாகவுமிருக்கக்கூடும்.

பொறுப்பு வாய்ந்த தலைவர்கள் துணிந்து ஏற்ற நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். அதுவே தமிழ் மக்களுக்கு அவர்கள் செய்யக்கூடிய முக்கிய கடமையாகும்.

தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் அந்தத் துணிவினைப் பெற்ற ஒருவராக இருந்தார் "தந்தை" என்ற அடைமொழி வந்தமை பற்றிப் பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் "இலங்கை மாக்சீய அரசியல் மரபின் பிரதான நிறுவனங்களில் ஏற்பட்ட அக்,புறச் சிதைவின் பின்னர் செல்வநாயகத்தின் அசாதாரணமான அரசியல் எண்ணத் துணிவே ஏற்கனவேயிருந்த பொன்னம்பலம் இராமநாதன் , ஜீ.ஜீ. பொன்னம்பலம் ஆகியோருடன் இணைத்துக் கொள்ளப்படாத தமிழரின் (அரசியல்) தந்தை என இணைக்கப்பெற்றது என்கிறார்.

எழுபது எண்பதுகளில் தந்தை செல்வா அல்லது அவரும் தலைவர் அமிர்தலிங்கமுமே இந்தியத் தலைவர்களைச் சந்தித்துவந்தனர். பெரும்பாலும் தமிழகத் தலைவர்களை அவரும் அமிரும் சந்தித்தனர். பின்னர் அமிர்தலிங்கம் "எதிர்க்கட்சித்தலைவர்" என்ற பதவிக்கூடாகச் சந்தித்தார். சிலவேளைகளில் சிவசிதம்பரத்துடன் , சம்பந்தனுடன் ,ஆனந்தசங்கரி, தங்கதுரை, வவுனியா சிவசிதம்பரம், நீலன், யோகேசுடனும் சென்று சந்தித்தார். அவர்கள் எல்லோரிடமும் ஒவ்வொருவகை ஆற்றலும் விவரங்களும் திறமைகளு மிருந்தன. கட்சிக் கட்டுப்பாடு மிக்கதொன்றாகவுமிருந்தது.

பிரதமர் இந்திரா காந்தி, பார்த்தசாரதி, வெங்கடேஸ்வரனுடன் சந்தித்த போது கதைத்தவற்றை விட அவர்கள் சொன்ன யோசனைகளை இவர்கள் அக்காலத்தில் "ஓ ப் த ரெக்கோர்ட்" ஆகவே ஊடகர்களுக்குச் சொல்லி வந்தனர். அவை காலம் கடந்தே பின்னர் அவர்களாலும் ஊடகர்களாலும் வெளிவந்தன. அப்படியான பக்குவமான ஊடக கலாச்சாரம் ஒன்றிருந்தது.

"ஓ ப் த ரெக்கோர்ட் என்பதற்கு ஊடக வகுப்புகளில் மூத்த ஊடகர் த.சபாரத்தினம் ஒரு கதை சொல்வார். பண்டாரநாயக்கவுடன் முதலில் சந்தித்ததை "டெய்லி நியூஸ்" பத்திரிகை செய்தியாகப் போட்டவுடன் -வன்னியசிங்கத்திடம் அதனை "ஓப் த ரெக்கோர்ட்" என்று சொல்லியிருந்தால் போட்டிருக்கமாட்டார்கள் .இனி ஊடகர்களுடன் கதைக்கும்போது "ஓப் த ரெக்கோர்ட் -என்று சொல்லிவிட்டுச் சொல்லுங்கள் அவர்கள் அவற்றைப் போடமாட்டார்கள் -என்று. அதனைத் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் தொடர்ந்து பின்பற்றி வந்தார்களாம்.-என்று சபாரத்தினம் சொல்வார்.

ஐந்து, ஆறுபேருடன் சந்திப்பதைவிட ஓரிருவருடன் சந்திப்பதால் பல விடயங்களை ராஜதந்திரிகள் மனந்திறந்து பகிர்வார்கள் -என்பது "ராஜதந்திர சந்திப்பு" பற்றிய பொதுவான கருத்து. குழு போன்ற ஒன்றுடன் பேசுவதைவிட அந்தக் கூட்டணியின் சார்பில் ஒருவர் இருவருடன் மூவருடன் கதைக்கும்போது இராஜதந்திரமான விடயங்களைப் பகிரலாம், தனிப்பட்ட யோசனைகளை வழங்கலாம் என்பதற்காகவும் - ஒற்றுமைப்படுங்கள்" என்று ஆலோசனை சொல்லியிருக்கலாம்.

1979இல் எதிர்க்கட்சித் தலைவராக அமிர்தலிங்கம் பாரதப்பிரதமர் மொராஜி தேசாயைச் சந்தித்தபோது அவர் -இலங்கை அரசுக்கும் -கூட்டணிக்குமிடையில் மத்தியஸ்தராகத் தாம் வரலாமா என்று கேட்டிருந்தார். ஆனால், இலங்கை அரசு அதற்கு மறுத்தது. அப்பொழுதே எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலிருந்து அமிர்தலிங்கத்தை நீக்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கடசிக்குள்ளேயே குரல்கள் எழும்பின. எதிர்க் கட்சித் தலைவர் பதவியைப் பயன்படுத்தி வெளிநாடுகளுக்குப் போய், உள்நாட்டில் கிளர்ச்சியை ஏற்படுத்துகிறார்கள் என்று இனவாதிகள் கிளர்ந்தனர்.

1970 களில் அன்றைய பாரதப் பிரதமர் இந்திரா காந்தி இலங்கை வந்தபோது கடசித் தலைவராக செல்வநாயகம் சந்திக்க முயற்சி எடுத்த போது இலங்கை அரசு அதற்கு அனுமதி வழங்க மறுத்தது. எதிர்க்கட்சித் தலைவர் என்ற பதவி தலைவர் செல்வ நாயகம் நிற்கும் கிடைக்காத வாய்ப்பை தலைவர் அமிர்தலிங்கத்துக்கு வழங்கியது.

1980களில் எதிர்க்கடசித் தலைவராயிருந்த -கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கம் பிரதமர் இந்திரா காந்தியைச் சந்தித்தபோது "உங்களால் தனிநாட்டுக் கோரிக்கையை மறு பரிசீலனை செய்ய முடியாதா?" என்று கேட்டிருந்தார். அப்படி அவர் கேட்டபோது அமிர் கடசியினருடன் பேசி முடிவெடுப்பதாகச் சொல்லிவிட்டு வந்தமையும் குறிப்பிடத்தக்கது.

1980 -81 இல் எதிர்க்கட்சித் தலைவராக தலைவர் அமிர்தலிங்கம் அன்றைய வெளியுறவு அமைச்சரான நரசிம்மராவைச் சந்தித்தபோது தந்தை செல்வா எப்பவோ தூர தரிசனத்துடன் குறிப்பிட்ட - ஆங்கிலேயர்கள் விட்டுச் சென்ற திருமலைத் துறைமுகத்தின் அன்றைய நிலையை விளக்கினார். இந்து மா கடலில் அதன் அமைதிப்பிராந்தியக் கொள்கைக்கு எதிராக இலங்கை செயற்படும் விடயத்தை விபரங்களுடன் நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் அவராற் பகிரக்கூடியதாகவிருந்து.

1983 இல் இன வன்செயலைத் தொடர்ந்து இந்தியப் பிரதமரின் சிறப்புத் தூதுவராக திரு. ஜி.பார்த்தசாரதி வந்தபோது அமிர்தலிங்கம், மு.சிவசிதம்பரம், தா.சிவசிதம்பரம், ஆனந்தசங்கரி, சம்பந்தன், கலாநிதி நீலன் திருச்செல்வம் ஆகியோர் சந்தித்தனர். சுதந்திரத் தமிழீழத்திற்குக் குறைந்த கோரிக்கையை முனவைக்க முடியாதென இவர்கள் எடுத்த எடுப்பிலேயே விளக்கினார்கள். ஆனால் பார்த்தசாரதியோ நாட்டுப் பிரிவினைக்கு இந்தியா ஆதரவு வழங்கும் நிலையில் இல்லை என்பதைத் தெரிவித்ததுதுடன் மேலும் பல ஆலோசனைகளையும் வழங்கியிருந்தார்.

அந்த அடிப்படையிலேயே இலங்கை இந்தியாவைப் போல பல மாநிலங்கள் கொண்ட ஓர் ஐக்கிய இராஜ்யமாக அமைய வேண்டும் என்றும் - அதில் இந்திய மாநிலம் ஒன்றுக்கிருக்கின்ற அதிகாரங்களைக் கொண்ட ஒரு தமிழ் மொழிவாரி மாநிலம் வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைத்து ஆக்கப்படவேண்டுமென்றும், அதற்கான அதிகாரங்களை வரையறுத்து ஒரு பத்திர வடிவம் தயாரிக்கப்பட்டது.

தமிழ் ஈழக் கோரிக்கையைத் தம்மால் கைவிட முடியாது என்று இவர்கள் தெரிவித்தபோது பார்த்தசாரதி மேலும் ஒரு ஆலோசனையை வழங்கினார்.

அங்கு தயாரிக்கப்பட்ட பாத்திரம் கூட்டணியின் கருத்தாக வழங்கப்படமாட்டாது என்றும் - அதிலுள்ள கருத்துக்களுக்கு யாரும் பொறுப்புஏற் கத்தேவையில்லை (Non Paper)எனவும் அவர் இவர்களுக்கு விளக்கினார். பின்னர் உருவான இலங்கை -இந்திய ஒப்பந்தத்திற்கு அடிப்படையான பாத்திரம் அதுவே என்பது குறிப்பிடத்தக்கது.

வட்டுக்கோட்டைத் தீர்மானம் , அதையொட்டி நடைபெற்ற பொதுத்தேர்தலில் வடக்கு கிழக்கில் அதிக பிரதிநிதித்துவம் பெற்ற ஒரேயொரு கட் சியான தமிழர் விடுதலைக் கூட்டணியினதும் அதில் அங்கம் வகித்த தமிழரசுக் கடசியினதும் தலைவரான அமிர்தலிங்கத்திடம் "நீங்கள் ஒற்றுமையாக வாருங்கள்" என்று அவர்கள் எவராலும் கேட்க (முடிய)வில்லை.

1977 பொதுத்தேர்தலின் பின்னர் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரசிலிருந்து வெளியேற்றப்பட்ட தலைவர்கள் மு.சிவசிதம்பரம், தா .சிவசிதம்பரம், வீ.ஆனந்தசங்கரி ஆகியோர் தமிழர் விடுதலைக் கூட்டணியில் அங்கம் வகித்தபோது காங்கிரசின் தலைவர் குமார் பொன்னம்பலம், தமிழர் விடுதலைக் கூட்டணியில் இப்போதிருப்பது தமிழரசு மட்டுமே என்று நையாண்டி செய்தார். அவர் குறிப்பிட்டது போல "தமிழரசுக் கட்சியே" அதிகப்பிரதிநிதித்துவம் செய்த ஒரே கட்சியாயிருந்தது. ஆயினும் அவர்கள் பல உள்ளகப் பிரச்சனைகள் நிலவிய போதும் மிகுந்த பொறுப்புடனும் ஒற்றுமையுடனும் வெளியில் திகழ்ந்தனர். கூட்டணியின் செயற்குழு, மத்திய குழுக்கூட்டங்களில் இடம் பெறும் கிசுகிசு க்களை- திருப்தி சிந்தாமணி இதழ்கள் மட்டுமே வெளிக்கொணர்ந்தன.

தமிழரசுக் கட்சியை உடைப்பதன் மூலம் அல்லது அதில் குழப்பத்தை ஏற்படுத்துவதன் மூலம் இலங்கையில் சமஸ்டி எனப்படும் தன்னாட்சிக் கோரிக்கையையும் ,அதன் வேரை அழிப்பதற்குப் பல்வேறுவகையான முயற்சிகள் அக்கட்சி ஆரம்பமான காலம் முதல் இடம் பெற்று வருவதை தமிழர் அரசியல் வரலாறு தெரிந்தோர் அறிவர்.

ஒரு காலத்தில் தென்னிலங்கை அரசியல் செய்த வேலையை இன்று பலரும் செய்கின்றனர். இத் தந்திர நடவடிக்கை இலங்கை நாட்டின் தேசப்பிதா என்றழைக்கப்பட்ட சிங்களத் தலைவர் டீ.எஸ்.சேனநாயக்க காலத்திலிருந்து ஆரம்பமானதொன்றாகும்.

அன்று பலம் மிக்க கடசியாகவிருந்த அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸை உடைப்பதற்கு டீ.எஸ் - தமக்கும் செல்வநாயகத்திற்கும் நண்பரான டீ .எ .பி .விஜேரத்னவை காங்கிரசின் உபதலைவரான செல்வாவிடம் அனுப்பினார். அவருக்கு ஒரு மந்திரி பதவி தருவதாகத் தகவல் அனுப்பினார். ஆனால் ஜீ ஜீ யை விட்டு விலகாமல் அவருக்குத் துணையாகவே நின்றார் செல்வா.

இன்னுமொன்றையும் இங்கு குறிப்பிடலாம்.தமிழரசுக் கடசியின் பிரசாரப் பீரங்கியாகவும் கிழக்கின் தூணாகவுமிருந்த சொல்லின் செல்வர் இராசதுரைக்காக, அவரை அரசில் இணைப்பதற்காக டீ.எஸ்.ஸின் வழிவந்த ஜனாதிபதி ஜே ஆர் ஜயவர்தன அரசியலமைப்பில் ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்தார்.தமிழரசுக் கடசியைப் பலவீனமாக்கும் வேலைக்காக நாட்டின் அரசியல் அமைப்பையே மாற்றுவதற்குத் தென்னிலங்கை தயாராயிருந்தது.

1960 மார்ச் பொதுத் தேர்தலிலும் பின்னர் நடைபெற்ற 1960 ஜூலை தேர்தலிலும் தமிழரசுக் கட்சி முறையே 15 ,16 பிரதிநிதிகளைப் பெற்றிருந்தது . தமிழ்க்காங்கிரஸ் இரண்டு முறையும் ஒரு இடத்தைப் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. காங்கிரசில் இரண்டு முறையும் வென்றவர் தலைவர் சிவசிதம்பரம் அவர்களே. கரவெட்டியிலும் அதைச் சுற்றிய பிரதேசங்களிலும்

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வீதிக்கு ஒரு குடை



நல்லூர் பிரதேசசபை ஒரு வித்தியாசமான காரியத்தைச் செய்திருக்கிறது. அதன் ஆளுகைக்குட்பட்ட திருநெல்வேலிச் சந்தியில் போக்குவரத்துச் சமிக்கை விளக்குகளுக்காக கிட்டத்தட்ட ஒரு நிமிடம் காத்திருக்கும் வழிப்போக்கர்களுக்கு தற்காலிகமாக ஒரு நிழல் குடை அமைத்துக் கொடுத்திருக்கிறது. இப்போதுள்ள அசாதாரண வெக்கையைக் கவனத்தில் எடுத்து சாக்கினாலான படங்குகளை அந்தச்சந்தியில் கூரைபோல இழுத்துக்கட்டியிருக்கிறார்கள்.

தனது பிரதேசத்துக்கு ஊடாகச் செல்லும் வழிப்போக்கர்களை தாங்கமுடியாத வெயிலில் இருந்து பாதுகாப்பதற்காக ஒரு பிரதேசசபை அப்படிச்சிந்தித்துச் செயல்பட்டிருப்பதைப் பாராட்டலாம்.

அது ஒரு தற்காலிக ஏற்பாடுதான். அதில் நல்லதும் உண்டுகெட்டதும் உண்டு. எனது நண்பர் ஒருவர் சொன்னார், காலையில் வரும்போது அந்த கூரையின் நிழல் எங்கே யோநின்றது. அப்படித்தான் பின்னேரங்களிலும் என்று. ஏனென்றால் சூரியன் நகரும்போது நிழலும் நகரும். எனினும், உச்சிவெயிலில் நிழல்தலைக்கு மேல்தான் நிற்கிறது.

இவ்வாறு வீதியில் நிழல்கூரைகளைப் போடுவது அல்லது தற்காலிகப் பந்தல்களை அமைப்பது என்பது எமது பண்பாட்டில் ஏற்கனவே உண்டு. பெருவிழாக் காலங்களில் குறிப்பாக கோடை வெயில் தலையைப் பிளக்கும் காலங்களில் பக்தர்களின் வசதிக்காக தண்ணீர் பந்தல்கள் வீதிகள் தோறும் அமைக்கப்படும். இப்பந்தல்கள் பெரும்பாலும் பச்சைத் தென்னோலைகளால் அல்லது கிடுகுகளால் அமைக்கப்படும் வீதியிலும் வீதியின் ஓரங்களிலும் மணல் தூவப்பட்டு அங்கே நீர் விசிறப்பட்டிருக்கும். அந்த இடம் குளுமையாக இருக்கும். இங்கே தாகம் தீர்வதோடு நிழலில் சிறிது ஆறிச் செல்லலாம்.

நல்லூர் திருவிழாவையொட்டி கோவிலைச் சூழஉள்ள வீதிகளிலும் கிராமங்களிலும் இவ்வாறு தற்காலிகப்பந்தல்கள் அமைக்கப்படுவதுண்டு. இந்தத்தாக சாந்திப் பந்தல்களின் அடுத்த கட்டவளர்ச்சியாக, ஒரு நிரந்தர அமைப்பாக தெருமூடி மடங்கள் அமைக்கப்பட்டிருக்கலாம் என்பதனை யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சனாதனன் சுட்டிக்காட்டினார். யாழ்ப்பாணத்தின் ஒருமரபுரிமைச் சொத்தாகப்பேணப்படும் தெருமூடி மடம் மடமராட்சியில் உண்டு. தெருமூடிமடங்கள் தெருவில் நிழல்விரிக்கும் ஓர் ஏற்பாடுதான். தெருவுக்குமேலே கூரை அமைத்து, வீதியின் இருமருங்கிலும் திண்ணைகள் கட்டப்பட்டிருக்கும். அந்த நிழலில் வழிப்போக்கர்கள் இளைப்பாறிச் செல்லலாம்

தெருமுடி மடங்களை உதாரணமாகக்கொண்டு வீதிகளில் சந்திகளில் குறிப்பாக போக்குவரத்துச் சமிக்கை விளக்குகள் பொருத்தப்பட்ட சந்ததிகளிலும் நடைபாதைகளிலும் அதுபோல பொருத்தமான கட்டமைப்புகளை உருவாக்கலாம்.

வீதிகளுக்கு உயரத்தில்கூரைகளை அமைப்பது என்பது ஏற்கனவே பல நாடுகளில் உண்டு. குறிப்பாக லிங்யா ஓ என்ற சீன விஞ்ஞானி உலகில் உள்ள நெடுஞ்சாலைகளுக்கு சூரியமின்கலக்கூரை போடுவதன் மூலம் போதியளவு மின்சக்தியை உற்பத்தி செய்யலாம் என்று கூறினார். அவ்வாறு தயாரிக்கப்படும் மின்சக்தியானது 2023 ஆம் ஆண்டுக்குரிய உலகின் மொத்த மின்சார நுகர்வின் 60 விகிதத்துக்கும் அதிகமானது என்றும் லிங்யா ஓ கணித்திருந்தார். உலகில் உள்ள எல்லா நெடுஞ்சாலைகளினதும் மொத்த நீளம் கிட்டத்தட்ட 3.2 மில்லியன் கிலோ மீட்டருக்கும் அதிகம்.

சாலைகளில் சூரியமின்கலக்கூரை போடுவதால் தலையைப் பிளக்கும் வெயிலிலிருந்து வழிப்போக்கர்களைப் பாதுகாக்கலாம். அது நிழலாகவும் அமையும் மின்சக்தியாகவும் அமையும். அதாவது மனிதர்களுக்குக்கெடுதியான ஒன்றையே நன்மையாக மாற்றுவது.

யாழ்பாணத்தில் இப்பொழுது நடுத்தரவர்க்க வீடுகளில் சூரியமின்கலக்கூரை ஏற்கனவே வந்துவிட்டது. அப்படி ஒரு கூரையை சமிக்கை விளக்குச் சந்திகளில் பொருத்தினால் அது நிழலாகவும் மின்சக்தியாகவும் அமையும். தெருமூடி மடங்களின் இற்றைப்படுத்தப்பட்ட - அப்டேட் செய்யப்பட்ட - வளர்ச்சியாக அது அமையும்.

நல்லூர பிரதேசசபையின் மக்கள் நேயச் செயற்பாடானது இவ்வாறான புதிய விவாதப் பரப்புகளையும் சிந்தனைகளையும் தூண்டிவிடுகிறது. அப்பிரதேசசபையை இப்பொழுது நிர்வகிக்கும் தமிழ் மக்கள் கட்சியானது வெயிலைவைத்து அரசியல் செய்கிறது என்று சிலர் விமர்சிக்கிறார்கள். எல்லாவற்றிலும் அரசியல் உண்டு. வெயிலிலும் அரசியல் உண்டு நிழலிலும் அரசியல் உண்டு. அதை விமர்சிப்பதிலும் அரசியலுண்டு.

இது தற்காலிக ஏற்பாடுதான். நிரந்தரமான பசுமை ஏற்பாடு எதுவென்றால், பிரதேசசபை தந்து ஆட்சிக்குட்பட்ட பிரதேசத்தைச் சோலையாக மாற்றுவது. பிரதேசசபைகள் ஆட்சிக்கு வந்தபொழுது இதை நான் பல தடவை எழுதியிருக்கிறேன். பிரதேசசபையின் ஆட்சிக்காலம் முடியும்போது, அவர்கள் எத்தனை மரங்களை வளர்த்துவிட்டு செல்கிறார்கள் என்ற ஒரு கணக்கை மக்களுக்குக் காட்டட்டும். வீதியோரங்களிலும், பொது இடங்களிலும், எங்கெல்லாம் மரங்களை நடமுடியுமோ அங்கெல்லாம் மரங்களை நடலாம். எங்கெல்லாம் குளங்களைத் தூர்வாரமுடியுமோ, வாய்க்கால்களைத் துப்புரவாக்கித் தூர்வாரமுடியுமோ, அங்கெல்லாம் அதைச்செய்யட்டும். எங்கெல்லாம் நகர்ப்புறச்சிறு காடுகளை உருவாக்க முடியுமோ அங்கெல்லாம் அதைச்செய்யட்டும். அவை தனிய அரசியல் சாதனைகளாக மட்டும் இருக்காது அந்தப் பிரதேச சபையின் சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் நடவடிக்கையாக தலைமுறைகள் தோறும் போற்றப்படும் கொண்டாடப்படும். ●



நிலாந்தன்

## தந்தை செல்வா...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவருக்கிருந்த தனிப்பட்ட செல்வாக்கே அவரது வெற்றிக்கு காரணம் என்று எனது தந்தையார் உள்பட அவரது ஆதரவாளர்களாலேயே பேசப்பட்டது. அதனை உணர்ந்த நிலையிலேயே அவர் அமரர் குமார் பொன்னம்மபலம் குறிப்பிட்டது போல தமிழரசுடன் இணைந்து செயற்பட்டார் என்ற விமர்சனம் இன்றும் உள்ளது.

1964ஆம் ஆண்டு இந்தியபிரதமர் ஜவஹர்லால் நேரு இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டார் . ஏற்கனவே சிக்கலிலிருந்த மலையக மக்களின் பிஜாவுரிமை தொடர்பான பேச்சுக்கள் அவரது நிகழ்ச்சி நிரலில் இடம்பெற்றது.

ஏற்கனவே இரண்டு தடவை இலங்கைக்கு வந்த நேருவின் கடைசிப்பயணம் அது. அவர் முன்பு வந்தபோது தமிழ்க்காங்கிரஸோ ,தமிழரசோ தோன்றியி ருக்கவில்லை. அப்போது கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரிக்கும் வந்திருந்தார். தலைவர் சிவசிதம்பரத்தின் மாமனார் கே சி நடராஜா (அன்றைய இராசா வழக்கறிஞர்) அக்கல்லூரியின் மாணவராக அவரைக் கை குலுக்கி வாழ்த்திய கதை ஒன்றுமுண்டு. (நேருவே அதனைத் தமது பயணக்குறிப்பிற் குறிப்பிட்டுள்ளார்)

தலைமுறைகளின் மாற்றங்களின்போது அயல் நாட்டின் அரசியல் சூழ்நிலைகளின் மாற்றத்துக்கு இந்த நிகழ்வும் ஓர் உதாரணம் என்பதற்கே இந்த நினைவுக் குறிப்பு..

1964 இல் நேரு வரும்போது அரசியல் நிலைமைகள் மாறியிருந்தன.

“பெடரல் பார்ட்டி” அல்லது கூட்டாட்சிக் கட்சி என்று அப்போது ராஜதந்திர மட்டங்களில் அழைக்கப்பெற்ற -தமிழரசுக் கட்சி பலம் மிக்க பிரதிநிதித்துவதுடனிருந்தது.

1950களில் இடம்பெற்ற தமிழ் பிரதேசங்களில் இடம்பெற்ற குடியேற்றம்

1956 இல் சிங்கள மொழி அரச கரும மொழியாகவேண்டுமென்று ஐ தே க வின் களனி மாநாட்டுத் தீர்மானம்

அதைத்தொடர்ந்து வடகிழக்கில் இடம்பெற்ற தமிழரசுக் கடசியின் பூரண ஹர்த்தால்

1956இல் பண்டாரநாயக்க சிங்களமொழிச் சட்டத்தைக் கொண்டுவரல்

காலிமுகத் திடலில் சத்தியாக்கிரகம், குண்டரின் தாக்குதல், அம்பாறை க் கலவரம், நாடளாவிய இன வன்செயல், திருமலை யாத்திரை, தமிழரசு முத்திரை, சிங்கள சிறீ எதிர்ப்புப் போராட்டம், வடகிழக்கு வரும் அமைச்சர்கள் பகிஷ்கரிப்பு, தமிழரசுக்கட்சிக்குத் தடை, தமிழரசுக் கட்சித் தலைவர்கள் கைதும் தடுப்புக்காவலும் எனப் பலவும் நாட்டில் இடம்பெற்றிருந்தன. பண்டாரநாயக்கவுடன் செய்த ஒப்பந்தம் கிழிக்கப்படுதல்- இதில் முக்கியமானது.

இந்தச் சூழ்நிலைகளிலேயே நேரு இலங்கை வந்திருந்தார். செல்வநாயகம் நேருவைச் சந்திக்க முயன்றார்.

பிரதமர் நேரு செல்வநாயகத்தை நேரடியான முறை சார்ந்த சந்திப்பைத் தவிர்த்தார் எனக் கூறப்படுகிறது.

கணிசமான அழுத்தத்தைத் தொடர்ந்தே, இந்திய உயர் ஸ்தானிகரின் இல்லத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சிக்கு செல்வநாயக்கம் இறுதி நேரத்தில் அழைக்கப்பட்டார் அந்த நிகழ்ச்சியில் நேருவும் கலந்துகொண்டிருந்தார். மலையகத் தமிழர்களின் பிரச்சினை தொடர்பாகவும் தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பு ,இறைமை தொடர்பாகவும் அவர் நேருவுடன் பேசினார்.

அகிம்சைப்போராட்டத்தை நடத்திய தமிழரசுக்கட்சியின் சத்தியாகிரகம் குறித்த நேருவின் பார்வை இந்தப் பேச்சில் முக்கியமானது.

சத்தியாகிரகம் (அகிம்சை எதிர்ப்புப் போராட்டம் ) எனும் கருத்துருவாக்கம் மகாத்மா காந்தியுடன் முடிந்துவிட்டது என்றும், உள்நாட்டு மோதல்களைத் தீர்ப்பதற்கு இனி அது பொருத்தமற்றது என்றும் அவர் செல்வாவிடம் கூறியதாயும் அது அந்தச் சூழ்நிலையில் தமிழரின் போராட்டத்திற்கு ஒரு “மென்மையான அடியை” கொடுத்ததாகவும் அரசியலரங்கில் விமர்சிக்கப்பட்டது.

இந்தியத் தலையீட்டிற்கான தமிழர்களின் எதிர்பார்ப்புகள் என்றோ தமிழர் அரசியலில் இணைந்திருந்தன.

1940களின் பிற்பகுதியில், சமஸ்டிக் கட்சி உருவாகிக் கொண்டிருந்தபோது, தந்தை செல்வநாயகத்தின் பேச்சுகள் அவ்வப்போது இந்தியாவின் நெருங்கிய ஈடுபாட்டிற்கான விருப்பத்தை வெளிப்படுத்தின. திருமலைத் துறைமுகம் ஆங்கிலத்துறைமுகமாகவிருந்து அரச துறைமுகமானபோது அங்கு அதிகம் பணியாற்றிய தமிழர்களின் நலன் குறித்த எச்சரிக்கையில் இந்தியாவின் பாதுகாப்புக் குறித்தும் செல்வநாயகம் பேசியிருந்தார்.

ஆனால் அறுபதுகளில் நேருவுடன் பேசும்போது நேருவின் ஆலோசனை வேறாகவிருந்தது. அவரது இலங்கை பற்றிய நோக்கு, அதாவது தெற்கின் அரசுடனான உறவு பற்றிய நோக்கு மாறியிருந்தது.

நேரு மலையக மக்கள் தொடர்பாகச் சில கொள்கைகளின் அடிப்படையில் தீர்வுக்கு அணுகியபோதிலும், அவருக்குப் பின்னர் வந்த பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி அவை தொடர்பான மக்களையோ தலைவர்களையோ கலந்தாலோசிக்காது- தமிழ்நாட்டுத் தலைவர்களுடன் கூட அவர் ஆலோசிக்க வில்லை என்றும் ஒரு தகவல் - சிறீமாவோ அம்மையாருடன் அவர் ஒப்பந்தத்திற்கு வந்தார். மனித உரிமைகளைப் புறக்கணித்து இலட்சக்கணக்கான தமிழ் மக்களை நாடு கடத்துவதற்கான கூட்ட ஏற்பாடுகள் இடம் பெற்றபோது அதனை முதலில் எதிர்த்துத் தந்தை செல்வநாயகமே குரல் எழுப்பினார்.

நேரு பேச்சுக்கள் மூலம் தென்னிந்தியாவில் கிளம்பிய பிரிவினைவாதங்களை அணைத்து - சுயாட்சி முறையை -அது முழுமையான தோ அரைவாசியானதோ என்னவோ- உருவாக்கினார். அவை அமைந்த கால அட்டவணையையும் ஒரு தகவலுக்காகத் தருகிறேன்.

1947 ஓகஸ்ட் 15 இந்திய சுதந்திரத்தைத் தொடர்ந்து பிரிட்டிஷ் மெட்றாஸ் பிரெசிடென்சி - மெட்றாஸ் மாநிலமாக அமைக்கப்பட்டது.

1969 ஜனவரி 14 அன்று தமிழ்நாடு மாநிலம் நிறுவப்பட்டது.

14 ஜனவரி 1969 இந்த மாநிலம் -தமிழ்நாடு என்று பெயர் மாற்றப்பட்டது.

1957 இல் செல்வநாயகம் பண்டாரநாயக்கவுடன் ஒப்பந்தம் செய்தார் . அதுவும் கிழிக்கப்பட்டது.

1965 இல் செல்வா டட்லியுடன் ஒப்பந்தம் செய்து அதுவும் இனவாதிகளின் எதிர்ப்பால் நிறைவேறாமல் ஆக்கப்பட்டது.

1964 இல் நேருவுடன் பேச எடுத்த முயற்சிக்கு அனுமதி கிடைக்கவில்லை.

1976 இலும் வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்குப் பிறகும் செல்வநாயகம் சிறிமாவோவுடன் பேசினார். இறுதி வரையும் பேசினார்.

1977 தேர்தல் நடைபெற முன்னர் தமது மக்களிடமிருந்து பிரிந்தார்.

அவர் தமது வாழ் நாளில் தமிழகத்துத் தலைவர்கள் பலருடன் மேற்கொண்ட சந்திப்புகள் ,தொடர்ந்து வந்த தமிழ் இளையோரின் இயக்கங்களினால் பரிணாமம் பெற்ற பல்வகை மட்டத் தொடர்புகள், 1981 யாழ் நூலக எரிப்பு, கதிர்காம யாத்திரை வந்த தனபதி மரணம் போன்ற சம்பவங்கள் தமிழகத்து மக்களின் உணர்ச்சியைப் பீறிட வைத்தன, எழுபதுகளில் எந்த நோக்கத்துக்காக அவர் தமிழகத்துக்குப் பயணம் செய்தாரோ அந்த நோக்கத்தின் விளைவான தமிழ்நாட்டு மக்களின் ஆதரவும் அனுதாபமும் எண்பதுகளில் தோன்றின. அவையும் இந்திய மத்திய அரசை அசைய வைத்தன. அவரது சிந்தனைகள் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் உருவாக்கத்திற்கு அடித்தளம் அமைத்தன. சுயாட்சி அதிகா ரம் ஒன்று வழங்கப்படவேண்டும் என்ற அடிப்படையை இரண்டு நாடுகளிற்கிடையேயான ஒப்பந்தம் மூலமாகப் பதிவு செய்தன.

தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் ஒற்றுமையாகப் பயணித்து அவரது கனவை நனவாக்க வேண்டும் என்பதை- இந்திய உப ஜனாதிபதி இராதாகிருஷ்ணன் சொன்னதன் பொருளாக, சிவத்தம்பி சேர் குறிப்பிட்டது போல- தமிழர் அரசியலின் தந்தை எனப்படும் தலைவர் செல்வநாயகத்தின் 49ஆவது நினைவு நாளில் கருத்திற் கொள்வார்களா? ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இஸ்ரேலிலும் அமெரிக்காவிலும் தான் ஆட்சி மாற்றம் தேவை

-என்.ஏ.டி.எஸ். அமரதுங்க



**சீனா மத்திய கிழக்கு முழுவதும் தனது இராஜதந்திர வலைப்பின்னலை அமைதியாகப் பின்னி, பிராந்தியத்தில் அமெரிக்க செல்வாக்கின் வீழ்ச்சியை உன்னிப்பாகக் கவனித்து வருகிறது. ஈரானால் குண்டுவீச்சுக்குள்ளான சவுதி அரேபியாவும் ஐக்கிய அரபு இராச்சியமும் ஏற்கனவே ஈரானுடன் பேச்சுவார்த்தையைத் தொடங்கியுள்ளன. இந்த முன்னேற்றங்கள் சீனாவின் தலைமையில் ஒரு புதிய உலக ஒழுங்கு உருவாவதை விரைவுபடுத்தக்கூடும்.**

இந்த உலகில் அவசரமாக ஆட்சி மாற்றம் தேவைப்படும் ஒரு நாடு இருக்குமானால் அது இஸ்ரேலாகத்தான் இருக்க முடியும். இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதான்யாகு அரசியலில் தப்பிப் பிழைப்பதற்காக கையாளும் உத்திக்களின் விளைவாக உலகமே அவதிப்பட்டு வருவதுடன், பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் மடிந்து வருகின்றனர். தான் சிறைக்குச் செல்வதைத் தவிர்ப்பதற்கும் அடுத்த தேர்தலில் ஏற்படக்கூடிய நிச்சயமான தோல்வியிலிருந்து தப்புவதற்கும் அவருக்கு இந்தப் போர் தேவையாக இருக்கிறது.

நெதான்யாகு மீதான ஊழல் மற்றும் ஏனைய குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால், அவர் சிறைக்குச் செல்ல நேரிடும். தனக்கு மன்னிப்பு வழங்குமாறு அவர் இஸ்ரேலிய ஜனாதிபதியிடம் கோரியுள்ளார், மேலும் அவரது நண்பர் ட்ரம்ப் அவர் சார்பாக ஜனாதிபதிக்கு கடிதம் வேறு எழுதியிருக்கிறார்.

அமெரிக்கா பொருளாதார, அரசியல் மற்றும் இராணுவ ரீதியாக ஐக்கிய நாடுகள் சபையிலும் இஸ்ரேலை முழுமையாக ஆதரித்துக் காப்பாற்றுவதால், நெதான்யாகுவால் காஸாவில் எவ்வித தண்டனையுமின்றி இனப்படுகொலையைச் செய்ய முடிகிறது. இந்த ஆதரவு இல்லையென்றால், இஸ்ரேலினால் பல போர்களில் ஈடுபடவோ அல்லது காஸா, லெபனான், சிரியா ஆகிய பகுதிகளில் தனது "பெரிய இஸ்ரேல்" திட்டத்தைத் தொடரவோ முடியாது. மேலும் ஈரான், யேமன் மற்றும் துருக்கி போன்ற தனது திட்டத்தை எதிர்க்கும் நாடுகளை பலவீனப்படுத்தவும் முடியாது.

இஸ்ரேலுக்கு அமெரிக்கா ஆண்டுதோறும் 3.8 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்பிலான இராணுவ உதவியை வழங்குகிறது, இது இந்த இனப்படுகொலைப் போர்களுக்கும் இஸ்ரேலின் விஸ்தரிப்புத் திட்டங்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது. எனவே, இந்த போர்க் குற்றங்கள் அனைத்திலும் அமெரிக்காவிற்கும் பங்கு உண்டு.

ஐசனோவர் (1950) முதல் ஜோ பைடன் (2022) வரையிலான அமெரிக்க ஜனாதிபதிகள் இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு குறித்து அதிருப்தி வெளியிட்டனர். றொனால்ட் றேகன் 1982 ஆம் ஆண்டில் லெபனானில் குடிமக்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படலாம் என்ற கவலையினால் கொத்துப் பீரங்கிக் குண்டுகள் விநியோகத்தை நிறுத்தினார். இஸ்ரேல் லெபனானில் இருந்து வெளியேறும் வரை எவ். -16 போர் விமானங்களின் விநியோகத்தையும் றேகன் தள்ளிவைத்தார். ஜோர்ஜ் எச்.டபிள்யூ. புஷ் (1990கள்), மேற்கு கரையில் குடியேற்றங்களை அமைப்பதை நிறுத்துவதற்கும் மாட்ரிட் சமாதான மாநாட்டில் கலந்துகொள்வதற்கும் இஸ்ரேலை வற்புறுத்தும் வகையில் 10 பில்லியன் டொலர்கள் கடன் உத்தரவாதங்களைத் தள்ளிவைத்தார்.

பராக் ஒபாமா இஸ்ரேலிய குடியேற்ற விஸ்தரிப்பை அடிக்கடி கண்டனம் செய்தார். மேலும் அவரது பதவிக் காலத்தின் கடைசி நாட்களில், குடியேற்றங்கள் தொடர்பான ஐ.நா. பாதுகாப்பு சபையின் தீர்மானத்தில் அமெரிக்காவின் வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தாமல் தவிர்த்தார். ஜோ பைடன் (2020கள்), 2024 காஸா மோதலின் போது ரஃபாவில் இஸ்ரேல் ஒரு பெரிய தாக்குதலைத் தொடங்கினால், இராணுவ உதவியை நிறுத்தி வைப்பதாக அச்சுறுத்தி, கனரக குண்டுகள் விநியோகத்தை இடைநிறுத்தினார். இந்த ஜனாதிபதிகளில் பெரும்பாலானோர் பாலஸ்தீனப் பிரச்சினைக்கு இரு-நாடுகள் என்ற அடிப்படையிலான தீர்வையே ஆதரித்தனர்.

ஒபாமாவால் நிலைநிறுத்தப்பட்டு பின்னர் பைடனால் மீட்டெடுக்கப்பட்ட நீண்டகால அமெரிக்கக் கொள்கைகளை ட்ரம்ப் கைவிட்டார். ஜெருசலேமை இஸ்ரேலின் தலைநகராக அங்கீகரித்தது, அமெரிக்கத் தூதரகத்தை அங்கு மாற்றியது, குடியேற்றங்கள் சட்டவிரோதமானவை அல்ல என்று அறிவித்தது மற்றும் சிரியாவிற்குச் சொந்தமான கோலன் குன்றுகளை இஸ்ரேலின் இறையாண்மையின் ஒரு பகுதியாக அங்கீகரித்தது எனப் பல முக்கிய மாற்றங்களை ட்ரம்ப் செய்தார்.

அவரின் இந்தத் தீய செயல்கள், இஸ்ரேலினால்அவர் மீது திணிக்கப்பட்ட ஒரு போரிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள அவர் போராடும்போது, அவருக்கே வினையாகத் திரும்பியுள்ளன. இதனால் அமெரிக்காவிற்கும் ட்ரம்ப்பிற்கும் பொருளாதார மற்றும் அரசியல் ரீதியாகப் பெரும் இழப்புகள் ஏற்பட்டுள்ளன.

இதன் விளைவாக, பல முன்னணி அரசியல் விமர்சகர்களின் பார்வையில் இஸ்ரேல் இப்போது அமெரிக்காவிற்கு ஒரு சுமையாக மாறியுள்ளது. இந்தப் போர் தொடங்கப்பட்ட விதம் நெதான்யாகுவினதும் ட்ரம்ப்பினதும் கொடூரமான மற்றும் காட்டுமிராண்டித்தனமான மனநிலையை வெளிப்படுத்துகிறது.

அமெரிக்காவும் ஈரானும் ஓமானின் மத்தியஸ்தத்துடன் தங்கள் வேறுபாடுகளைத் தீர்த்துக்கொள்வதற்கு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்தன. 2026 பிப்ரவரி 26 அன்று அமெரிக்காவுடன் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க ஒப்பந்தம் எட்டப்பட உள்ளதாக ஈரானிய வெளியுறவு அமைச்சர் தெரிவித்தார், மறுநாள் ஓமான் இதனை உறுதிப்படுத்தியது.

ஈரான் தனது அணுசக்தி திட்டத்தை சர்வதேச அணுசக்தி முகமையின் கண்காணிப்பின் கீழ் கொண்டு வர ஒப்புக்கொண்டதாகத் தெரிகிறது. ஆனால் வியக்கத்தக்க வகையில், 2026 பிப்ரவரி 28 அன்று, இஸ்ரேலும் அமெரிக்காவும் ஈரான் மீது தாக்குதல் நடத்தின. ஈரான் அமெரிக்காவிற்கு அணுசக்தி அச்சுறுத்தலாக இருப்பதாக ட்ரம்ப் கூறினார். இதற்கு ஓமான் "கவலை" தெரிவித்தது. ஈரானிய வெளியுறவு அமைச்சர் இதனை ஒரு "துரோகம்" என்று கூறினார். தனது தேர்தல் பிரச்சாரத்திற்கு நிதியளித்த யூத ஆதரவுக் குழுக்களுக்கு கடமைப்பட்டிருக்கும் ட்ரம்ப், இந்தப் போருக்குள் இழுக்கப்பட்டுள்ளார் என்பது தெளிவாகிறது. எப்ஸ்டீன் கோப்புகள் தொடர்பான விவகாரமும் ட்ரம்ப்பை இந்த எல்லைக்குத் தள்ளியிருக்கலாம்.

ஈரானின் பதில் நிதானமாகவும் பொருத்தமாகவும் இருந்தது. ஈரானிய நாகரிகத்தை ஒரே இரவில் அழித்துவிடுவேன் என்று ட்ரம்ப் கூறுகிறார், ஆனால் விரைவில் இஸ்லாமாபாத்தில் ஈரானுடன் பேச்சுவார்த்தை நடத்த ஒப்புக்கொள்கிறார். இருப்பினும், தனது பதவியைத் தக்க வைத்துக் கொள்வதற்காகத் தொடங்கிய இந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவர நெதான்யாகு விரும்பவில்லை. அவர் லெபனான் மீது 10 நிமிடங்களில் 100 குண்டுகளை வீசுகிறார், இதில் குழந்தைகள் உட்பட 254 சிவிலியன்கள் கொல்லப்பட்டனர். தெற்கு லெபனானை இணைக்கும் முயற்சியில் இஸ்ரேல் லிட்டானி நதியை நோக்கி முன்னேறி வருவதால், லெபனானில் இந்த படுகொலை தொடர்கிறது.

நெதான்யாகு போன்ற தலைவர்களைக் கொண்டிருப்பதன் மூலம் இஸ்ரேல் ஒரு நம்பகமான நட்பு நாடு என்பது மட்டுமல்லாமல், உலக சமூகத்தின் ஒரு கௌரவமான உறுப்பினர் என்ற தகுதியையும் இழந்து வருகிறது. பேராசிரியர் ராபர்ட் பேப், ஜான் மியர்ஷைமர், ரிச்சர்ட் வுல்ஃப், ஜெஃப்ரி சாக்ஸ் மற்றும் யானிஸ் வருஃபாகிஸ் போன்ற நிபுணர்களின் கூற்றுப்படி, இஸ்ரேல் சர்வதேச அளவில் தனிமைப்படுத்தப்பட்டு வருகிறது.

இஸ்ரேல் தனது ஆக்கிரமிப்பு அணுகுமுறையையும், விரிவாக்கக் கொள்கையையும் தொடர்ந்து முன்னெடுத்து, அதன் தோற்றம் மற்றும் பாலஸ்தீனப் பிரச்சினையின் வரலாற்று உண்மைகளைப் புறக்கணித்தால், அது தானாகவே வெடித்து சிதறி தன்னைத்தானே அழித்துக் கொள்ளும் என்பது இந்த நிபுணர்களின் கருத்தாகும்.

ஈரான் போருக்குப் பிறகு வலுவானதாக உருவெடுத்துள்ளது என்பதையும் அது ஹோர்முஸ் நீரிணையின் மீது கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கக் கூடும் என்பதையும் அமெரிக்காவை இப்பகுதியிலிருந்து வெளியேறக் கட்டாயப்படுத்தலாம் என்பதையும் இஸ்ரேல் எதிர்கொள்ள வேண்டும். நெதான்யாகுவின் கீழ் உள்ள இஸ்ரேல் இந்த உண்மைகளை ஒப்புக்கொள்ளத் தயாராக இல்லாவிட்டாலும், இஸ்ரேலை ஒரு தவிர்க்க முடியாத நட்பு நாடாக வைத்திருப்பது தங்கள் தேசிய நலன்களுக்கு உகந்தது அல்ல என்பதை அமெரிக்க மக்கள் உணர வேண்டும்.

இந்தப் போர் அமெரிக்காவில் மிகவும் செல்வாக்கற்றதாக மாறியுள்ளது. இதற்குப் பொருளாதார தாக்கம் மட்டுமே காரணமல்ல, இஸ்ரேல் இந்தப் போரை நடத்திய கொடூரமான விதமும், ஈரானுக்கு எதிராக அமெரிக்கா விடுத்த பயங்கரமான அச்சுறுத்தல்களுமே முக்கிய காரணங்களாகும்.

அமெரிக்காவின் நட்பு நாடுகளும் இந்தப் போரில் சேர அல்லது அதற்கு ஒப்புதல் அளிக்க அப்பட்டமாக மறுத்துவிட்டன. ஆஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் தென்கொரியா ஆகிய நாடுகள் போர்க் களத்திலிருந்து வெகு தொலைவில் இருந்தாலும், போரின் பொருளாதார தாக்கத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதால் மிகவும் கோபமாக இருப்பதாகத் தெரிகிறது. இஸ்ரேலின் மிருகத்தனமான செயல்பாடுகள் குறித்தும் அமெரிக்கா அதற்கு அளிக்கும் ஆதரவு குறித்தும் அவர்கள் கவலை கொண்டிருக்கலாம்.

இந்தப் போரின் மூலம் கணிசமான இலாபம் ஈட்டியது ரஷ்யாவாக இருக்கலாம், ஏனெனில் அவர்கள் எண்ணெய் விற்பனையில் பெரும் வருவாயைப் பெற்றிருக்கலாம். அதேபோல், சீனா மத்திய கிழக்கு முழுவதும் தனது இராஜதந்திர வலைப்பின்னலை அமைதியாகப் பின்னி, பிராந்தியத்தில் அமெரிக்க செல்வாக்கின் வீழ்ச்சியை உன்னிப்பாகக் கவனித்து வருகிறது. ஈரானால் குண்டுவீச்சுக்குள்ளான சவுதி அரேபியாவும் ஐக்கிய அரபு இராச்சியமும் ஏற்கனவே ஈரானுடன் பேச்சுவார்த்தையைத் தொடங்கியுள்ளன. இந்த முன்னேற்றங்கள் சீனாவின் தலைமையில் ஒரு புதிய உலக ஒழுங்கு உருவாவதை விரைவுபடுத்தக்கூடும்.

நெதான்யாகுவால் ட்ரம்பின் ஆதரவுடன் தொடங்கப்பட்ட இந்தப் போர், உலகளாவிய புவிசார் அரசியல் சூழலில் அவர்களுக்கு எதிராகவே திரும்பியுள்ளது. சீனா மற்றும் ரஷ்யாவைத் தலைமையாகக் கொண்ட புதிய உலக ஒழுங்கின் வளர்ச்சியை அடக்குவதை நோக்கமாகக் கொண்டுதான் ட்ரம்பின் "அமெரிக்காவை மீண்டும் உயர்வானதாக மாற்றுவோம்" திட்டம் அமைந்தது.

அவர் ரஷ்யாவைத் தடைகள் மூலம் தாக்க முயன்று தோல்வியடைந்தார்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஸ்பெயினில் உலக ஜனநாயகப் பாதுகாப்பு மாநாடு:
# ட்ரம்பை எதிர்த்து ஓரணியில் உலகத் தலைவர்கள்!

**ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்செஸ் ட்ரம்பை மிகவும் வெளிப்படையாக எதிர்க்கும் ஐரோப்பாவின் தேசியத் தலைவர்களில் ஒருவராவார். 2023 இஸ்ரேல் – ஹமாஸ் போரிலிருந்து சமீபத்திய அமெரிக்க–இஸ்ரேல்–ஈரான் மோதல் வரை, அவர் தொடர்ந்து அமெரிக்க மற்றும் இஸ்ரேல் எதிர்ப்பு நிலைப்பாடுகளை வெளிப்படுத்தி வருகிறார்.**

ஐங்கரன் விக்கினேஸ்வரா








உலகின் ஜனநாயகத்தைப் பாதுகாக்க ட்ரம்ப் அரசை எதிர்க்கும் இடதுசாரித் தலைவர்கள் அண்மையில் ஸ்பெயின் நாட்டில் கூடினர். உலகளாவிய வலதுசாரி சக்திகளின் எழுச்சிக்கு மத்தியில், ட்ரம்ப் கொள்கைகளை மறைமுகமாகக் குறிவைத்தும், ஜனநாயகப் பின்னடைவு குறித்தும் இந்த உலகளாவிய முற்போக்கு மாநாடு எச்சரிக்கை விடுத்தது.

ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்செஸ் தலைமையில் பார்சிலோனா நகரில் உலக அளவிலான இடதுசாரித் தலைவர்கள் பங்கேற்ற முக்கிய உச்சி மாநாடொன்று கடந்த வாரம் சனிக்கிழமை ஏப்ரல் 18, 2026இல் நடைபெற்றது.

ஆரம்பத்தில் 'ஜனநாயகப் பாதுகாப்பு மாநாடு' 2024 ஆம் ஆண்டில் சான்செஸ் மற்றும் பிரேசில் அதிபர் லூலாவால் உருவாக்கப்பட்டது. இந்த ஆண்டு அதன் நான்காவது அமர்வு நடைபெற்றது. சர்வாதிகார ஆட்சிகளுக்கு எதிரான, அமெரிக்கா தலைமையிலான ஒரு மேற்கத்தியக் கூட்டணியை அதன் பெயர் குறிப்பிடுகிற போதிலும், அது உண்மையில் முற்போக்கு மற்றும் இடதுசாரி அரசாங்கங்களின் ஓர் ஆலோசனைக் குழுவாகும். அது ஒத்துழைப்பை வலுப்படுத்த முயலும் அதே வேளையில், சமத்துவமின்மையைக் குறைத்தல், பன்முகத்தன்மை, பல்வகைத்தன்மை மற்றும் வன்முறையின்மை போன்ற முற்போக்கான செயல்திட்டங்களைப் பற்றி விவாதித்து வருகிறது.

**ஸ்பெயின் பிரதமரின் ராஜதந்திரம்**

2024 ஆம் ஆண்டு ஸ்பெயினும் பிரேசிலும் இணைந்து தொடங்கிய இந்த மாநாட்டு முயற்சியின் நான்காவது



சந்திப்பு இதுவாகும். கொலம்பியா ஜனாதிபதி குஸ்டாவோ பெட்ரோ, மெக்சிகோ நாட்டின் தலைவி கிளாடியா ஷெய்ன்பாம் உள்ளிட்ட பல முக்கியத் தலைவர்கள் இதில் பங்கேற்றனர்.

ஸ்பெயின் பிர்தமர் பெட்ரோ சான்செஸ் ஐரோப்பிய அரசியலில் தற்போது முக்கிய தலைவராக உருவெடுத்து வருகிறார். அவர் சீனாவுக்கு மூன்று நாள் உத்தியோகபூர்வப் பயணத்தை மேற்கொண்டு, ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் சீனாவுக்கும் இடையே நெருக்கமான வர்த்தக மற்றும் ராஜதந்திர உறவு வேண்டும் எனப் பகிரங்கமாகக் குரல் கொடுத்து விட்டுத் திரும்பிய உடனேயே இந்த மாநாட்டை அவர் கூட்டியுள்ளார். இதன் மூலம், ஐரோப்பாவில் அமெரிக்காவையும் ட்ரம்பையும் மிகக் கடுமையாக எதிர்க்கும் முதன்மைத் தலைவராகத் தன்னை அவர் நிலைநிறுத்தியுள்ளார்.

இந்த நிகழ்வை வெற்றிகரமாக ஏற்பாடு செய்த ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்செஸ் ட்ரம்பை மிகவும் வெளிப்படையாக எதிர்க்கும் ஐரோப்பாவின் தேசியத் தலைவர்களில் ஒருவராவார். 2023 இஸ்ரேல்-ஹமாஸ் போரிலிருந்து சமீபத்திய அமெரிக்க-இஸ்ரேல்-ஈரான் மோதல் வரை, அவர் தொடர்ந்து அமெரிக்க மற்றும் இஸ்ரேல் எதிர்ப்பு நிலைப்பாடுகளை வெளிப்படுத்தி வருகிறார்.

இந்த ஆண்டு மார்ச் மாதம் ஈரான் மீதான அமெரிக்க-இஸ்ரேல் வான்வழித் தாக்குதல்களுக்குப் பிறகு, ஸ்பெயினில் உள்ள இரண்டு அமெரிக்க கூட்டுத் தளங்களைப் பயன்படுத்த அவர் தடை விதித்தார். மேலும், அமெரிக்க இராணுவ விமானங்கள் ஸ்பானிய வான்வெளியைக் கடந்து செல்வதற்கு முன்னெச்சரிக்கையாகத் தடை விதித்தார். இது ட்ரம்பிடம் இருந்து கடுமையான எதிர்ப்பைத் தூண்டியது.

தற்போது உலகளாவிய இடதுசாரிகளின் மையப் புள்ளியாக சான்செஸ் உருவெடுத்ததற்கு அவரது அனுபவமிக்க அரசியல் திறன்களே காரணமாகும். ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்செஸ் 2018இல் பதவியேற்றதிலிருந்து நாடாளுமன்றத்தில் சிறுபான்மையினராக இருந்தபோதிலும், தீவிர இடதுசாரியான பொடெமோஸ் கட்சியுடனான கூட்டணிகள் உட்பட, நெகிழ்வான மற்றும் நுட்பமான கூட்டணி நிர்வாகத்தின் மூலம் எட்டு ஆண்டுகளாக அவர் ஆட்சியைத் தக்கவைத்துக் கொண்டுள்ளார்.


ஐரோப்பிய நாடாளுமன்றத்திற்குள் தீவிர வலதுசாரி சக்திகள் வேகமாக விரிவடைந்து வரும் நிலையிலும், இடதுசாரி கொள்கைகளை நிலைநிறுத்துவதன் மூலம் அவர் முற்போக்கு முகாமின் நம்பிக்கையைப் பெற்றுள்ளார். சர்வதேச அரங்கில் ஒரு 'உலகளாவிய இடதுசாரித் தலைவர்" என்ற அந்தஸ்தைப் பெறுவதன் மூலம், அவர் தனது உள்நாட்டு அரசியல் நிலையை வலுப்படுத்தவும், அதே நேரத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப் பதவிக்குப் போட்டியிடவும் நோக்கம் கொண்டுள்ளார் என்று ஐரோப்பிய அரசியல் வட்டாரங்களில் பகுப்பாய்வு செய்யப்படுகிறது.

அத்துடன் அவர் சீனாவுக்கு மிகவும் ஆதரவான போக்குகளைக் கொண்ட மேற்கத்தியத் தலைவராகவும் சான்செஸ் மதிப்பிடப்படுகிறார். ஏப்ரல் 14ஆம் திகதி, அவர் சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டு, சீன அதிபர் ஷி ஜின்பிங்குடன் ஒரு உச்சிமாநாட்டை நடத்தினார்.

**ஜனநாயகத்தை பாதுகாக்கும் மாநாடு**

உத்தியோகபூர்வமாக இது 'ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான மாநாடு' என அழைக்கப்பட்டாலும், அடிப்படையில் இது அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் தன்னிச்சையான கொள்கைகளுக்கு எதிரான ஒரு மாபெரும் எதிர்ப்புப் பிரசார கூட்டமாகவே அமைந்தது.

ட்ரம்ப் நிர்வாகம் இந்த ஆண்டின் தொடக்கத்தில் வெனிசுலா மற்றும் ஈரான் மீது நடத்திய தாக்குதல்களால் ஏற்பட்ட சர்வதேசக் குழப்பங்களுக்கு மத்தியில் இந்த மாநாடு நடைபெற்றது. இந்த நிகழ்வு ஒரு வலுவான 'அமெரிக்க எதிர்ப்பு அணி' தன்மையைப் பெற்றுள்ளது என்ற மதிப்பீடுகளுக்கு வழிவகுத்துள்ளது. உண்மையில், கலந்துகொண்ட தலைவர்கள் பலருக்கு ட்ரம்புடன் கருத்து வேறுபாடுகள் பாரியளவில் உள்ளன.




குறிப்பாக கொலம்பியாவின் முதல் இடதுசாரி அதிபரான பெட்ரோ, ஐ.நா பொதுச் சபைக்காக நியூயார்க் சென்றிருந்தபோது, அமெரிக்க எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்றதால், அவரது அமெரிக்க விசா ரத்து செய்யப்பட்டு அவமானத்தைச் சந்தித்தார். தனது அரசியல் போட்டியாளரான முன்னாள் அதிபர் ஜெய்ர் போல்சனாரோவை நீதித்துறை கையாண்ட விதம் குறித்து லூலா ட்ரம்புடன் கடுமையாக மோதினார். அவரும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

**புதிய கூட்டணி உருவாக்கம்:**

இந்த மாநாடு வெறுமனே ஒரு சந்திப்பு மட்டுமல்ல. உலக அரங்கில் மாறிவரும் அரசியல் கூட்டணிகளின் வெளிப்பாடாகும். அமெரிக்காவின் தன்னிச்சையான முடிவுகள், மத்திய கிழக்குப் போர் விவகாரங்களில் ட்ரம்ப் தன்னிச்சையாக முடிவெடுப்பது, நேட்டோ நாடுகளைப் 'பயனற்றவர்கள்' எனத் தொடர்ந்து அவமதிப்பது, மற்றும் ஹோர்முஸ் நீர்ச்சந்தியை முற்றுகையிடுவது போன்ற அண்மைய நடவடிக்கைகள் ஐரோப்பிய நாடுகளிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளன.

அமெரிக்காவின் உலகளாவிய ஆதிக்கத்தைக் குறைப்பதற்காக, ஐரோப்பிய நாடுகளையும் இலத்தீன் அமெரிக்க நாடுகளையும் ஒன்றிணைத்து ஒரு புதிய மாற்றுச் சக்தியை உருவாக்கும் முயற்சியாகவே, புதிய கூட்டணி உருவாக்கம் போல இந்த ராஜதந்திர நகர்வு பார்க்கப்படுகிறது.

**ஸ்பெயினில் ட்ரம்ப் எதிர்ப்பலை:**

ஸ்பெயினில் ட்ரம்ப் எதிர்ப்பு கூட்டணி என்பது, டொனால்ட் ட்ரம்பின் கொள்கைகளுக்கு எதிரான சர்வதேச அரசியல் தலைவர்களால் முன்னெடுக்கப்பட்டது. முக்கியமாக ஈரானுக்கு எதிரான போரில் ஸ்பெயினின் ராணுவத் தளங்களைப் பயன்படுத்த ட்ரம்ப் நிர்வாகம் அனுமதி கோரியபோது, ஸ்பெயின் அதை மறுத்ததால் இரு நாடுகளுக்கும் இடையே பதற்றம் ஏற்பட்டது.

இதனால் ஸ்பெயின் நாட்டுடனான வர்த்தகத்தை அமெரிக்கா துண்டிப்பதாக அச்சுறுத்தியது. அதேவேளை ட்ரம்ப்பின் சர்வாதிகாரப் போக்கு, குடியேற்றக் கொள்கைகள் மற்றும் போர்க் கொள்கைகளுக்கு எதிராக ஸ்பெயின் உட்பட ஐரோப்பிய நகரங்களில் போராட்டங்கள் பல நடத்தப்பட்டன.

ஐரோப்பாவில் இந்த எதிர்ப்பு, ட்ரம்ப்பின் கொள்கைகளை நிராகரிக்கும் பல்வேறு சர்வதேச அரசியல் தலைவர்களின் கூட்டணியாக செயல்படுகிறது.

இந்தச் சூழலில், ஸ்பெயின் அரசு மற்றும் மக்கள் ட்ரம்பின் கொள்கைகளுக்கு எதிரான நிலைப்பாட்டை தீவிரமாக வெளிப்படுத்தி வருகின்றனர்.

**கொதித்தெழுந்த பிரேசில் ஜனாதிபதி**

ட்ரம்பின் மிரட்டல்களுக்கு எதிராகக் கொதித்தெழுந்த பிரேசில் ஜனாதிபதியின் உரையும் மிக முக்கியமானதாக பார்க்கப்படுகிறது.

இந்த மாநாட்டில் பிரேசில் ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லூலா டா சில்வா மிகக் கடுமையான வார்த்தைகளால் அமெரிக்காவை விமர்சித்தார்.

ட்ரம்பின் பெயரைக் நேரடியாகக் குறிப்பிடாமல் அவர் ஆவேசமாக பேசினார். உலகை அச்சுறுத்தும் ஒரு ஜனாதிபதியின் வலைத்தளப் பதிவுக்காகக் காத்திருந்து, ஒவ்வொரு நாளையும் நாம் அச்சத்துடனேயே தொடங்கவோ முடிக்கவோ முடியாது. ஒரு நாடு எவ்வளவு பெரிய வல்லரசாக இருந்தாலும் சரி, மற்ற இறைமையுள்ள நாடுகள் மீது தனது சொந்த விதிகளைத் தொடர்ந்து திணிக்க எந்தவொரு நாட்டு ஜனாதிபதிக்கும் உரிமையில்லை என்று அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# செல்வநாயகம் அரங்கில் ஜி.எல்.பீரிசும் தமிழ் மிதவாத அரசியலின் டி.என்.ஏயும்



-யதீந்திரா

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தமிழ் முகநூல் பதிவுகள் ஆரோக்கியமான அரசியல் உரையாடலுக்கானதாக இருப்பதில்லை. கட்டுரைகளை பதிவிடும்போது தர்க்க ரீதியான விவாதங்களை காண முடியவில்லை. பெரும்பாலும் வசைபாடல்களும் முத்திரை குத்தல்களுமே இடம்பெறுகின்றன. அடிப்படையில் தமிழ் முகநூல் உரையாடல்களை ஆழமாக உற்று நோக்கினால், ஒரு உண்மை வெளிப்படும்.



அதாவது, நமது தமிழ் இளைய தலைமுறை அரசியல் ரீதியில் எந்தளவுக்கு சிந்தனை ரீதியாக காயடிக்கப்பட்டிருக்கின்றது என்பதற்கான ஒரு சிறந்த ஆதாரம்தான் இந்த முகநூல் களம். அதே போன்றுதான் ஏனைய சமூக ஊடகத் தளங்களில் இடம்பெறும் உரையாடல்களும். தர்க்க ரீதியான அதேவேளை நாகரிகமான அரசியல் விவாதக் கலாசாரத்தை தமிழில் காண்பது அரிதான ஒன்றாகவே இருக்கின்றது.

இதற்கு தமிழ் கருத்துருவாக்கமும் ஒரு முக்கிய காரணம். ஒரு தமிழ்க் கட்சியின் அரசியல் தலைவர் இதனை ஒரு முறை என்னிடம் கூறினார். இளம் ஆய்வாளர்கள் மத்தியில், நீங்கள் ஒருவர்தானே பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை கையாளுவது பற்றிப் பேசிக் கொண்டிருக்கின்றீர்கள். யதார்த்தத்தை அனுசரிக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி வருகின்றீர்கள். ஆனால் உங்களோடு சம காலத்தில் எழுதி வரும் ஏனைய அரசியல் எழுத்தாளர்கள் அவ்வாறு வாதிடவில்லையே அவர்களோ, வேறு ஏதோவொரு உலகத்தில் அல்லவா இருக்கின்றனர். மிகவும் அரிதாகத்தானே இவ்வாறான குரல்கள் வெளிப்படுகின்றன. உங்களைப் போன்றவர்கள் பெரும்பான்மையாக இருந்தால் நாங்களும் யதார்த்தமான பாதை தொடர்பில் துனிந்து பேச முடியும். ஆனால் இப்போது நிலைமை அப்படியில்லையே! அவர் கூறியது உண்மைதான். எனது சொந்த அரசியல் அனுபவத்தில், தனியாக பேசும்போது, சில விடயங்களை ஏற்றுக்கொள்ளும் நண்பர்களோ, பொது வெளிகளில் பேசும் போது, அதற்கு தலைகீழாகத்தான் பேசுகின்றனர்.

முன்னாள் வெளிவிவகார அமைச்சரான ஜி.எல்.பீரிஸ் யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் செல்வநாயகம் நினைவுப் பேருரை ஆற்றுவது தொடர்பிலான ஒரு முகநூல் பதிவை பார்த்தேன். அந்தப் பதிவைப் பார்த்தபோது, இது பற்றி விவாதிக்கலாம் என்னும் எண்ணம் மேலிட்டது. குறித்த பதிவின் சாராம்சம் இதுதான் - அதாவது, தந்தை செல்வாநாயகம் அறக்கட்டளையின் ஏற்பாட்டில், செல்வாவின் 49ஆவது, நினைவு தின நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மகிந்தவினதும், கோட்டபாயவினதும் ஆட்சியில் வெளிவிவகார அமைச்சராக இருந்து, அவர்களுடைய அரசியல் அட்டூழியங்களுக்கும், துர் நடத்தைகளுக்கும் சர்வதேச ரீதியில் வெள்ளையடிக்க முற்பட்டவரும், ஆகக் குறைந்தது அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தைக் கூட (முழுமையாக) அமுல்படுத்துவதை எதிர்த்தவருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நினைவுப் பேருரை ஆற்றும் தகுதி கொண்டவரா? அவரை அழைப்பது சரியானதா? - இதுதான் குறித்த பதிவின் மறைமுகமான கேள்வி? பீரிஸ் 2022 இல், குறிப்பிட்ட காலம் பாதுகாப்பு விவகாரங்களுக்கான இராஜாங்க அமைச்சராகவும் இருந்தவர் என்பதும் முக்கியமானது. இப்படியான ஒருவர் செல்வநாயகம் அரங்கிலா? தர்க்க ரீதியாக நோக்கினால் கேள்வி சரியானதுதான்.

ஆனால் நீங்கள் ஒரு அரசியல் மாணவனாக, தமிழ் மிதவாத அரசியல் சிந்தனைப் பள்ளியை உற்று நோக்கினால், இதில் ஆச்சரியமடைய ஒன்றுமில்லை. தேர்தல் அரசியலில், இனி பீரிஸ் ஈடுபடப் போவதில்லை-அதற்கான வாய்ப்பும் இல்லை - ஏனெனில் அவர், தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறக் கூடிய ஒரு நபரல்லர். புத்திஜீவிகள் சிலர் வேண்டும் என்பதற்காகவே பீரிஸ் உள்வாங்கப்பட்டார். அதே போன்றுதான், தயான் ஜயதிலக, பாலித கோஹன்ன போன்ற சிலரை மகிந்த தனது தேவைக்காக பயன்படுத்தினார். ஆனால் இவர்கள் புத்திஜீவிகளாக மகிந்தவின் அரசியல் தீர்மானங்களில் எப்போதுமே செல்வாக்குச் செலுத்தியதில்லை - மகிந்தவின் அரசியல் கிறுக்கல்களுக்கு, ராஜதந்திர விளக்கம் அளித்தமைதான் இவர்களின் புத்திப் பங்களிப்பு. அதிலும் பீரீஸ், மகிந்த காலை, தலை என்றால், அற்புதம், அபாரம் - என்று விளக்கமளித்தவர். அடிப்படையில் பீரிஸ் ஒரு அரசியல் யாசகன். அடிப்படையில் சந்திரிகா குமாரதுங்கவினால் அரசியலுக்கு கொண்டுவரப்பட்ட ஜி.எல், பின்னர் சந்திரிகாவிலிருந்து வெளியேறி, ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து கொண்டார். ஒஸ்லோ பேச்சுவார்த்தையிலும் அரச குழுவுக்கு தலைமை தாங்கினார். சமஷ்டியை பரசீலிப்பதற்கான இணக்கத்தை வெளியிட்டார். பின்னர் ஜக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேறி மகிந்த ராஜபக்சவின் விசுவாசியானார். ஒப்பீட்டடிப்படையில் மிகவும் சிறப்பான தீர்வாக சொல்லப்படும் சந்திரிகாவின் தீர்வுப் பொதி விடயத்தில், நீலன் திருச்செல்வத்துடன் இணைந்து செயற்பட்டவர். ஆனால் பின்னர் அந்த நிலைப்பாட்டிற்கு தலைகீழாக செயற்பட்டவர். பீரிஸ், தனது புத்திஜீவித்துவ வாழ்விற்கு உண்மையாக் இருந்திருந்தால், சந்திரிகாவின் தீர்வு பொதியை முன்னிலைப்படுத்தி தொடர்ந்தும் பேசியிருக்க வேண்டும் - ஆனால் அவரோ, தனது பதவிநிலை வாழ்வுக்காக தனது புலமையை ராஜபக்ச குடும்பத்திடன் சமர்ப்பணம் செய்தார்.

இனி - தென்னிலங்கையின் அதிகார அரசியலில் தனக்கு இடமில்லை என்னும் நிலையில் வடக்கு நோக்கி வருகின்றார். எனவே பீரிஸ், செல்வநாயகம் ஞாபகார்த்த உரையாற்றுவது என்பது, எதிர்க்கருத்துள்ளவர்களை தங்கள் பக்கம் கொண்டுவரும் உக்தி தொடர்பானதாக இருந்தால் மகிழ்ச்சி - ஆனால், அதற்கு முதலில், பீரிஸின் கருத்துக்கு தென்னிலங்கையில் மதிப்பிருக்கவேண்டும் அல்லவா! மேலும் பீரிஸ் போன்றவர்கள், வடக்கில் பேசுவதற்கு அமைவாக, தென்னிலங்கையில் சிங்கள மக்கள் மத்தியில் பேசப் போவதுமில்லை. மகிந்தவின் காலத்தில் தீர்வு நோக்கிச் செல்வதற்கு நல்ல வாய்ப்பிருந்தது. மகிந்தவினால்தான் அதனைச் சாத்தியப்படுதிய ருக்கவும் முடியும் - ஆனால் இந்தப் புத்திஜீவி என்ன செய்து கொண்டிருந்தார்?

மேலும் மகிந்த மகுடிக்கு ஆடிய ஒருவர், இப்போது அதற்கு தலைகீழாக பேசினால், அது தென்னிலங்கையால் பொருட்படுத்தப்படுமா என்னும் கேள்வியுமுண்டு. தவிர, பீரிஸ், ஆட்சியிலிருக்கும் தேசிய மக்கள் சக்தியை எதிர்த்து செயற்பட்டு வரும் ஒருவர். எதிர்க் கருத்துள்ளவர்களுடன் உரையாடவேண்டும் என்றால் அதற்கு பீரிஸை விடவும், உதய கம்மன்பில மிகவும் பொருத்தமானவர். ஏனெனில் கம்மன்பிலவிற்கு இப்போதும் சிங்கள தேசியவாதிகள் மத்தியில் ஒரு இடமுண்டு. பீரிஸ் ஒரு சட்ட புலமையாளர் - அவர் சமஷ்டி அறிந்தவர் - என்பதெல்லாம் பொருத்தமான வாதங்களாக தெரியவில்லை. அவ்வாறானவர்கள்தான் வேண்டும் என்றால் தற்போதைய ஆட்சியாளார்களுடன் நெருக்கமான தென்னிலங்கை புலமையாளர்களை அழைப்பதே சிறப்பானது.



தமிழ் அரசியலில், ஏன் எப்போதுமே, எதிரணியிலுள்ளவர்களுக்கே செங்கம்பளம் விரிக்கப்படுகின்றது - என்னும் கேள்வி அடிக்கடி குறுக்கிடுவதுண்டு. விடை தெரிந்தவர்கள் கூறுங்கள். மேலும் சமஷ்டி பற்றி அறிவதற்கு இனி ஏதுமில்லை. உண்மையில் அரசியலமைப்பிலுள்ளவற்றை முழுமையாக அமுல்படுத்துங்கள் என்னும் நிலைப்பாட்டுக்கான மக்கள் இயக்கம் ஒன்றுதான் இன்றைய தேவை. ஏனெனில், சமஷ்டிக் கட்சி என்னும் ஆங்கிலப் பெயரை சூட்டிக் கொண்ட, இலங்கை தமிழரசுக் கட்சியின் இன்றைய தலைவர்களே - பெயர்ப் பலகை முக்கியமல்ல எங்களுக்கு உள்ளடக்கம்தான் முக்கியம் என்று கூற வேண்டிய நிலைக்குச் சென்றிருக்கின்றனர். ஆனாலும் அதுவும் இலங்கைத் தீவில் நடக்கப் போவதில்லை- ஆகக் குறைந்தது பீரிஸ் போன்றவர்கள் - தான் தவறிழைத்ததை ஒப்புக்கொண்டு பேசுவாராக இருந்தால் கூட, அதனை வரவேற்கலாம்.

செல்வநாயகம் அறக்கட்டளை, செல்வநாயகம் ஞாபகார்த்த உரையாற்றுவதற்காக, இப்படியான ஒருவரை அழைக்கலாமா என்னும் கேள்வியை பார்த்தபோது ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் ஆலோசகராக செயற்பட்ட, கலாநிதி.ஏ.ஜே.வில்சனின் பெயர்தான் எனக்கு சட்டென நினைவுக்கு வந்தது. வில்சன் செல்வநாயகத்தின் மருமகன். பயங்கரவாதத்தை இல்லா தொழிப்பதற்காக பிசாசுகளுடன் கூட்டுச் சேரத் தயார் என்று கூறிய ஜே.ஆருடன், செல்வநாயகத்தின் மருமகனால் எப்படி இருக்க முடிந்தது? இந்தக் கேள்விக்கு பதிலை தேடினால், ஜி.ஜி.பொன்னம்பலம் பின்னர் செல்வநாயகம் வழிவந்த தமிழ் மிதவாத அரசியல் பாசறையின் அரசியல் டி.ஏன்.ஏயை இலகுவாக புரிந்து கொள்ள முடியும்.

இந்த அரசியல் டி.என்.ஏயை மேலும் புரிந்து கொள்வதற்கு வில்சன் தொடர்பில் இன்னும் சில சுவாரஷ்யமான விடயங்களை நோக்குவது உசிதமானது. இலங்கையின் புகழ்பெற்ற அரசியல் விஞ்ஞானியான பேராசிரியர் ஏ.ஜே.வில்சன், 1978-1983 காலப்பகுதியில் ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் அரசியலமைப்பு ஆலோசகராக இருந்தவர். இந்தக் காலத்தில் தான் எந்தளவு ஜே.ஆர்.ஜயவர்த்தனவுடன் நெருக்கமாக இருந்தேன் என்பதைப் பற்றி அவரே பதிவு செய்திருக்கின்றார். ஜே.ஆருக்கு ஆலோசகராக இருந்து கொண்டே செல்வநாயகம் நினைவுப் பேருரையும் ஆற்றியிருக்கினறார். 1981இல், செல்வநாயகத்தின் மூன்றாவது நினைவுப் பேருரை, கொழும்பு இராமகிருஸ்ண மிஷன் மண்டபத்தில் இடம்பெற்றது. தமிழ் மக்களின் அதிகாரப் பகிர்வை நிராகரித்து, போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம் என்று முழங்கிய, ஜே.ஆருக்கு ஆலோசகராக இருந்துகொண்டு, எவ்வாறு தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்த ஒருவரது ஞாபகார்த்த நிகழ்வில், அவரை ஆதரித்து உரையாற்ற முடியும்? இது என்னவகை அரசியல்? அன்றிருந்த அறிவுச் சமூகத்தில் இந்தக் கேள்வியை எவருமே கேட்கவில்லை. ஒரு வேளை வில்சன், மருமகன் என்னும் தகுதியில் அதனைச் செய்திருந்தால், அது சரி, ஆனால் வில்சன் அந்த அடிப்படையில் செல்வநாயகம் தொடர்பில் வாதிடவில்லை. 81 நினைவுரையில், செல்வநாயகம், இயற்கையிலேயே ஒரு தலைவர் என்று புகழாரம் சூட்டினார். ஜே.ஆருடன் நெருக்கமாக பணியாற்றியிருந்த வில்சன், பின்னர் 1988இல் (The Break-Up of Sri Lanka) இலங்கையின் உடைவு என்னும் நூலை எழுதியிருந்தார். அதில் - எனது மனச்சாட்சி சார்ந்து, நீண்ட காலமாக சில விடயங்களை எழுதுவதை தவிர்த்து வந்திருந்தேன் ஆனால் பாதுகாப்பு படைகளால் மேற்கொள்ளப்பட்ட அட்டூழியங்களை அறிந்த போது, தொடர்ந்தும் ஒரு மௌன சாட்சியாக இருக்க முடியாது என்பதை உணர்ந்தேன். தனது அரசியல் இடமாற்றத்தை வில்சன் இப்படித்தான் நியாயப்படுத்தினார்.

தமிழ் மிதவாத அரசியல் சிந்தனைப் பள்ளியில் கற்றவர்கள், கொழும்பின் உயரடுக்கு அரசியல்வாதிகளுடன் கூடிமகிழ்வதும் - பின்னர் கலைந்து சென்று அதிருப்திகளை வெளியிடுவதும், நமது அரசியல் பாரம்பரியத்தில் ஒரு அங்கம்தான். இந்தப் பின்புலத்தில் நோக்கினால் செல்வநாயகத்தின் டி.ஏன்.ஏயால் வழிநடத்தப்படும், அவரது பெயரிலான அறக்கட்டளை, பீரிஸை நினைவுப் பேருரை ஆற்றுவதற்கு அழைத்திருப்பதை ஆச்சரியத்துடன் நோக்குவதுதான் தவறானது.

---

## இஸ்ரேலும்...

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரிகள் மூலம் சீனாவை கட்டுப்படுத்த முயன்று தோல்வியடைந்தார்.

வெனிசுலா அதிபரைக் கடத்துவதன் மூலம் சீனாவிற்கு எண்ணெய் விநியோகத்தைத் தடுக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அரிய வகை தாதுக்களில் சீனாவின் ஏகபோக உரிமை ட்ரம்பிற்குத் தலைவலியைத் தந்தது, எனவே இந்தத் தாதுக்கள் அதிகம் உள்ள கனடா மற்றும் கிரீன்லாந்தை இணைக்க அவர் திட்டமிடுகிறார்.

ஈரான் மீதான போர் என்பது அங்கு ஆட்சி மாற்றத்தைச் செய்து, அந்நாட்டையும் அதன் எண்ணெயையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான மற்றொரு வாய்ப்பாகும். "நாகரிகம் நாளை இரவு அழிந்துவிடும்" என்று கூறி ஈரானை அழிப்பதாக அவர் அச்சுறுத்தினார் இத்தகைய பேச்சுகளை அமெரிக்க ஜனாதிபதி அல்ல, ஒரு மனநோயாளி மாத்திரமே பேச முடியும்,

அதிர்ஷ்டவசமாக, மாறிவரும் உலக ஒழுங்கு ட்ரம்ப் தனது பைத்தியக்காரத் தனமான இலக்குகளை அடைய அனுமதிக்காது. உலகளாவிய புவிசார் அரசியல் மாறிவிட்டது என்பதையும் ட்ரம்பின் முழு ஆதரவுடன் கூடத் தான் நினைத்ததைச் செய்ய முடியாது என்பதையும் உணராமல் ஒரு போரைத் தொடங்கிய தன் மூலம் நெதான்யாகு கவனக் குறைவாகத் தனது சொந்த வீழ்ச்சியை விரைவுபடுத்தியுள்ளார். உலகில் அமைதி நிலவ வேண்டுமானால் இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா ஆகிய இரு நாடுகளிலும்தான் ஆட்சி மாற்றம் அவசியம்.

(த ஐலண்ட் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## அரச அதிகாரிகளின்...

ஒப்பிட்டுச் சரிபார்க்கப்பட்டிருக்க வேண்டும் என்றும், இத்தகைய பாதுகாப்பு நடைமுறைகள் பொதுவானவை என்றும் அவர் வாதிட்டார். பொதுமக்களின் பணம் இழக்கப்பட்டுள்ள நிலையில், இதனை வெறுமனே "பணம் காணாமல் போன" சம்பவமாகத் தட்டிக்கழிக்க முடியாது எனத் தெரிவித்த ஹர்ஷ டி சில்வா, இதற்குப் பொறுப்பான அதிகாரிகள் உரிய பொறுப்பை ஏற்க வேண்டும் என வலியுறுத்தினார்.

அரச நிதியைக் கண்காணிப்பது நாடாளுமன்றத்தின் அரசியலமைப்பு ரீதியான பொறுப்பு என்பதால், இந்த விடயம் சபையில் முன்வைக்கப்பட வேண்டும் என்றும், அரச நிதி பற்றிய குழு இந்த சம்பவம் குறித்து விரிவான விசாரணைகளை முன்னெடுக்கும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

## பிரதி நிதியமைச்சர்...

உப்பு உற்பத்தி நடைபெற்ற குறிஞ்சாத்தீவு பகுதியையும் அமைச்சர் பார்வையிட்டார்.

இப்பகுதியில் மீண்டும் உப்பு உற்பத்தியை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாகவும் அவர் அங்கு குறிப்பிட்டார். இதன் மூலம் பலருக்கு வேலை வாய்ப்புகளை வழங்க முடியும் என்பதுடன் பலரது வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து ஆனையிறவு உப்பளத்தின் செயற்பாடுகளை அவர் பார்வையிட்டார். இதனையடுத்து, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையின் கட்டுமாணப் பணிகளையும் பார்வையிட்டார். அமைச்சருடன் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜெ.ரஜீவன், க.இளங்குமரன், தேசிய உப்பு நிறுவனத்தின் தலைவர்,பரந்தன் இரசாயன தொழிற்ச்சாலையின் தலைவர், முதலீட்டு சபையின் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (அ)

## காங்கேசன் சிமெந்து...

கைவிடப்பட்டுள்ள நிலையில், சிமெந்து தொழிற்சாலைக்கு சொந்தமான சுமார் 400 ஏக்கர் காணியில் பாரிய கைத்தொழில் பேட்டையை உருவாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த திட்டத்திற்காக முதல் கட்டமாக காணியை முதலீட்டு சபைக்கு கையளிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன் ஊடாக எதிர்காலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்க்க முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தொழில்பேட்டை உருவாக்கப்படும் பட்சத்தில் எதிர்காலத்தில் வடக்கு மாகாணத்தில் பாரிய வேலைவாய்ப்புக்கள் உருவாகும் என்பதுடன், நாட்டின் பொருளாதாரத்திலும் பாரிய முன்னேற்றத்தினை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் கைத்தொழில் பேட்டை அமையவுள்ள காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை அமைந்துள்ள பகுதியை நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ தலைமையில் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களாக ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி , க.இளங்குமரன் மற்றும் ச.சிறீபவானந்தராசா உள்ளிட்ட குழுவினர் நேரில் பார்வையிட்டனர். (அ)

## கடந்த ஆண்டு...

ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உலக மலேரியா தினம் ஒவ்வொரு ஆண்டும் சித்திரை 25 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது. மலேரியா உலக அளவில் இன்றும் முக்கிய பொது சுகாதார பிரச்னையாகவுள்ளது. 2024 ஆம் ஆண்டு உலக அளவில் 282 மில்லியன் நோய் தாக்கங்களும், 6 இலட்சம் மரணங்களும் பதிவாகியுள்ளன. இதில் 95 வீதமான மரணங்கள் ஆபிரிக்க பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ளது. ஆபிரிக்கா, தென்னாசியா, தென் அமெரிக்கா பகுதிகளில் இன்னும் மலேரியா தொற்று காணப்படுகிறது.

இலங்கையிலும் முன்னர் மலேரியா பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. 1934, 1935 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில ஒரு இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டனர். அவற்றில் மரணங்களும் ஏற்பட்டன.

தடுக்கும் நேதாக்கில மலேரியா ஒழிப்பு திட்டம் 1955 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன் விளைவாக 1962 ஆம் ஆண்டு மிகக் குறைந்த நோய் தாக்கமே இனங்காணப்பட்டது. இருந்த போதிலும் தொடர்ச்சியான கண்காணிப்பு, கவனக் குறைவு காரணமாக மீண்டும் 1968 இல் நோய் பரம்பல் ஏற்பட்டது. 2012 ஆம் ஆண்டு இலங்கையில் மலேரியா நோய் தாக்கம் முற்று முழுதாக ஒழிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து உலக சுகாதார ஸ்தாபனம் 2016 ஆம் ஆண்டு மலேரியா அற்ற நாடாக இலங்கைக்கு சான்றிதழ் அளித்தது. இருந்த போதிலும் வெளிநாட்டு பயணங்கள், மலேரியா நோய் நுளம்புகளின் பெருக்கங்கள் மூலம் மீண்டும் மலேரியா நோய் ஏற்படும் அபாயமுள்ளது.

கடந்த 2025 ஆம் ஆண்டு இலங்கையில் 42 மலேரியா நோய் தொற்றாளர்கள் கண்டு பிடிக்கப்பட்டனர். அவற்றில் ஒரு மரணமும் பதிவாகியது. 2026 ஆம் ஆண்டு இன்று வரை 10 பேர் நோய் தாக்கங்களுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். வட மாகாணத்தைப் பொறுத்தவரை வவுனியாவில் நோய் தாக்கங்களுடன் எவரும் கண்டு பிடிக்கவில்லை.

யாழ்ப்பாணத்தில் 2025 இல் 5 நோயாளர்கள் இனங்காணப்பட்டதுடன், அதில் ஒரு மரணமும் பதிவாகியது. அவர் வெளிநாட்டில் நோய் தொற்றுக்குள்ளாகி வருகை தந்தவராவார். 2026 இல் ஒருவர் கடந்த மார்ச் மாதம் யாழ்ப்பாணத்தில் கண்டறியப்பட்டுள்ளார்.

இந்த நோய் தாக்கங்களும், தொற்றுக்களும் வெளிநாட்டில் இருந்து வருகை தந்ததன் மூலமே ஏற்பட்டிருந்தன.

வெளிநாடுகளுக்கு செல்பவர்கள், வெளிநாடுகளில இருந்து வருபவர்கள், யாத்திரிகர்கள், சுற்றுலா பயணிகள், வர்த்தகம் நோக்கி செல்பவர்கள் ஆகியோர் தேசிய மலேரியா ஒழிப்பு திட்டம் தொடர்பான நடைமுறைகளை பின்பற்றுவதன் மூலம் நோயை கட்டுப்படுத்த முடியும்.

மக்களின் பங்களிப்பு அவசியம். அவர்கள் வெளிநாடு செல்வதாக இருந்தால் ஒரு வாரத்திற்கு முன்பு மலேரியா தடை இயக்கத்தை தொடர்பு கொள்ளவேண்டும். அவர்களால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களை பின்பற்றவேண்டும். வெநாடுகளில் இருந்து வருபவர்கள் மலேரியா தடை இயக்கத்தை தொடர்பு கொண்டு இரத்த பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். அதன் மூலமே தடுக்க முடியும். இது குணமாக்கக் கூடிய ஒரு நோய் - என்றார். (அ)

## ஈஸ்டர் தாக்குதல்...

அதன்படி, இந்த வழக்கில் சாட்சியம் வழங்கும் முக்கிய நபர்களுக்குக் கொலை மிரட்டல்களும், போதைப்பொருள் வழக்குகளில் சிக்க வைப்பதாக மிரட்டல்களும் விடுக்கப்படுவதாகக் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றில் தெரிவித்துள்ளது.

குற்றப்புலனாய்வு திணைக்களம் சமர்ப்பித்துள்ள அறிக்கையின்படி, முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் எனப்படும் சிவனேசதுரை சந்திரகாந்தன், மட்டக்களப்பு சிறையில் இருந்தபோது, பேராசிரியர் ரொஹான் குணரத்ன அவரை மூன்று முறை சந்தித்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதல் ஐ.எஸ். அமைப்பினால் மட்டுமே நடத்தப்பட்டது என்ற பிம்பத்தை உருவாக்குவதற்காக இவர்கள் இருவரும் இணைந்து புத்தகங்களை வெளியிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதேபோல், வவுணதீவில் இரண்டு பொலிஸார் கொல்லப்பட்ட சம்பவத்தைச் சஹ்ரான் குழுவினர் செய்த போதிலும், அதனை விடுதலைப் புலிகள் மீது திசை திருப்பத் திட்டமிட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டமையும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சதித்திட்டங்கள் குறித்துத் தகவல் வழங்கும் சாட்சிகளை இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்ச்சியாக அச்சுறுத்தி வருகின்றனர்.

சாட்சிகளுக்குப் பணம் மற்றும் வெளிநாட்டுப் பயண ஆசை காட்டுதல், அதற்கு இணங்காதவர்களை மோட்டார் சைக்கிள்களில் பின்தொடர்ந்து கண்காணித்தல் மற்றும் போதைப்பொருள் வழக்குகளில் சிக்க வைப்பதாக மிரட்டுதல் போன்ற செயற்பாடுகள் குறித்து நீதிமன்றில் விவரிக்கப்பட்டது.

குறிப்பாக, தேசிய தவ்ஹீத் ஜமாஅத் அமைப்பிற்கு இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் ஆயுதங்களை வழங்கியதாகத் தகவல் வெளியிட்ட சாட்சிக்கு, மட்டக்களப்பு சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அலுவலக உத்தியோகத்தர்கள் நேரடியாகக் கொலை மிரட்டல் விடுத்துள்ளமையும் அம்பலமாகியுள்ளது.

தாக்குதல் குறித்து முன்கூட்டியே அறிந்திருந்த இராணுவ அதிகாரி ஒருவரைப் பற்றித் தகவல் வழங்கிய சாட்சி, போலி பேஸ்புக் கணக்கு மூலம் வரவழைக்கப்பட்டுத் தாக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சூழலை மிகவும் பாரதூரமானது என வர்ணித்த கோட்டை நீதவான் இசுரு நெத்திகுமார, சாட்சிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நீதிமன்ற உத்தரவுகளுக்காகக் காத்திருக்கத் தேவையில்லை என்றும், சட்டமா அதிபர் திணைக்களம் இது குறித்து உடனடி நடவடிக்கை எடுக்க முழு அதிகாரம் கொண்டுள்ளது என்றும் உத்தரவிட்டார். (அ)

## சட்டவிரோத...

ஆராயப்பட்டுள்ளது.

இதன்போது, உயர் தொழில்நுட்பம் கொண்ட செய்மதி தரவு அமைப்புகளை இலங்கைக்கு வழங்குவது குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இந்த நவீன தொழில்நுட்பத்தை இலங்கையினால் இலவசமாகப் பெற்றுக்கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இந்தத் தொழில்நுட்பத்தை மிகவும் பயனுள்ள முறையில் கையாள்வதற்காக, கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சு மற்றும் திணைக்கள அதிகாரிகளுக்கு விசேட பயிற்சித் திட்டங்களை வழங்கவும் நோர்வே தரப்பு இணக்கம் தெரிவித்துள்ளது. இந்த புதிய தொழில்நுட்ப ஒத்துழைப்பின் ஊடாக, இலங்கையின் கடல் வளங்களைப் பாதுகாக்கவும், சர்வதேச தரத்திலான கண்காணிப்பு முறையை அமுல்படுத்தவும் வழிவகை ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## சோமாலியாவில்...

குறித்த கப்பலில் 17 பேர் இருந்ததாகவும் ஊழியர் குழுவில் ஒரு இலங்கையர், 10 பாகிஸ்தானியர்கள், நான்கு இந்தோனேசியர்கள், ஒரு இந்தியர் மற்றும் மியான்மார் நாட்டு பிரஜை ஒருவரும் அடங்குகின்றனர்.

சோமாலிய அதிகாரிகள் அல்லது சோமாலியக் கடல் பரப்பில் கடற்கொள்ளை ஒழிப்பு நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் ஐரோப்பிய கடற்படை இது குறித்து இதுவரை உத்தியோகபூர்வ அறிவிப்பு எதனையும் வெளியிடவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## 2.5 மில்லியன்...

இணைய வழியில் செலுத்தியபோது, அது திட்டமிட்டபடி உரிய தரப்புக்குச் செல்லாமல் மாற்றுத் தரப்பினரின் கைக்குச் சென்றது நாடு முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை நிதியமைச்சில் பல கட்டப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. இந்த மோசடி தொடர்பாக பிரதி அமைச்சர் எரங்க விபரத்தைத் தெரிவிக்கையில்-

இந்த பணப் பரிமாற்றம் வங்கி முறைமைக்கு ஊடாகவே நடந்துள்ளது. விசாரணையில் நல்ல முன்னேற்றம் உள்ளதுடன், என்ன நடந்தது என்பதை நாங்கள் கண்டறிந்துள்ளோம்.

டிஜிற்றல் உலகில் பணம் மிக விரைவாக கைமாறக்கூடியது என்பதால், ஆதாரங்களை அழிக்காமல் இருக்க விசாரணையின் சில தகவல்களை இரகசியமாக வைத்திருக்க வேண்டியுள்ளது. இந்த மோசடியானது கணினி கட்டமைப்பை நேரடியாக ஹக் செய்ததை விட, ஏமாற்றும் முறையிலேயே நடந்துள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

வெளிநாட்டு நிறுவனத்தின் பெயரைப் போலவே மின்னஞ்சல் முகவரிகளை உருவாக்கி, அதிகாரிகளைத் தவறாக வழிநடத்தி இப்பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது. இதில் நிறுவனத்துக்குள் இருப்பவர்களுக்குத் தொடர்பு இல்லை என்றும், மின்னஞ்சல் முகவரியில் இருந்த சிறிய மாற்றத்தைக் கவனிக்காததே இதற்குக் காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் டிஜிற்றல் கட்டமைப்புகளை 24 மணிநேரமும் கண்காணிக்க சிறப்பு மையம் அமைக்கப்பட்டுள்ளதோடு, தற்போது 12 நிறுவனங்கள் இணைக்கப்பட்டுள்ள நிலையில், விரைவில் 37 பிரதான அரச நிறுவனங்கள் இந்த பாதுகாப்பு வலையமைப்பிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

அத்தோடு, சைபர் தாக்குதல்களை முன்கூட்டியே கண்டறிய செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துடன் கூடிய மென்பொருள்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பான முழுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கு விசாரணைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதற்கு இன்னும் ஒரு வாரம் காலம் எடுக்கும்-என்றார். (அ)

## எரிபொருள்...

2025 இல் 4 பில்லியன் அமெரிக்க டொலர்களாக குறைந்துள்ளது. மசகு எண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் மற்றும் நிலக்கரி ஆகியவற்றின் உலக சந்தை விலை வீழ்ச்சியே இதற்கு பிரதான காரணமாகும்.

சர்வதேச சந்தை மாற்றங்களுக்கு ஏற்ப, ஒரு பரல் மசகு எண்ணெயின் சராசரி இறக்குமதி விலை 2024 இல் 84.7 டொலர்களிலிருந்து, 2025 இல் 73.2 டொலர்களாக குறைவடைந்துள்ளது.

செலவுகளைப் பிரதிபலிக்கும் எரிபொருள் விலை சூத்திரம் 2025ஆம் ஆண்டு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதனூடாக உலக சந்தை விலையில் ஏற்படும் மாற்றங்கள் நேரடியாக உள்நாட்டு சந்தையில் பிரதிபலிக்க வழிவகை செய்யப்பட்டது. இதன்படி, 2024ஆம் ஆண்டு இறுதியுடன் ஒப்பிடுகையில், 2025 ஆம் ஆண்டு இறுதியில் 92 ரக பெற்றோல் 15 ரூபாவினாலும், டீசல் 9 ரூபாவினாலும், மண்ணெண்ணெய் 8 ரூபாவினாலும் குறைக்கப்பட்டன.

பொருளாதார நடவடிக்கைகள் மீட்சியடைந்ததைத் தொடர்ந்து, 2025 ஆம் ஆண்டில் பெற்றோலிய உற்பத்திகளின் விற்பனை 7.4 வீதத்தால் அதிகரித்துள்ளது.

இருப்பினும், தற்போதைய நிலையில் மத்திய கிழக்கு போர் சூழலினால் ஏற்பட்டுள்ள அழுத்தங்கள் காரணமாக, 2026 மார்ச் மாதத்தில் சாதாரண விலை நிர்ணய பொறிமுறைக்கு அப்பாற்பட்டு, எரிபொருள் விலைகளை கணிசமாக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய வங்கி மேலும் தெரிவித்துள்ளது. (அ)

## வடக்கு மாகாண...

இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மற்றும் மாகாண உயர் அதிகாரிகளுடனான விசேட உயர்மட்டக் கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

மாகாணத்தின் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதில் தற்போதைய கள யதார்த்தத்தில் உள்ள சவால்கள், நடைமுறைச் சிக்கல்கள் மற்றும் எதிர்கால திட்டங்கள் குறித்து இச்சந்திப்பில் மிகவும் ஆழமாக ஆராயப்பட்டது.

இக்கலந்துரையாடலில் உரையாற்றிய ஆளுநர்,

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தற்போதைய அரசாங்கம் வடக்கு மாகாணத்தின் சுற்றுலா மேம்பாட்டில் அதீத ஆர்வத்துடன் செயலாற்றி வருகின்றது.

அரசாங்கம் பல அபிவிருத்தி விடயங்களை மிகவும் நேர்மையான முறையில் முன்னெடுத்து வருகின்ற போதிலும், சில அரச திணைக்களங்கள் இவ்வாறான சிறந்த மற்றும் பயனுள்ள செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தடையாகச் செயற்படுவது மிகுந்த கவலைக்குரியது.

உடனடியாக இவ்வாறான அதிகாரத்துவ முட்டுக்கட்டைகள் நீக்கப்பட்டு, அதிகாரிகள் வினைத்திறனுடன் செயற்பட முன்வர வேண்டும், என தெரிவித்தார்.

ஆளுநரை தொடர்ந்து கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாணச் சுற்றுலாப் பணியகத்தின் தலைவர் ஜே.விவேகானந்தன்,

வடக்கு மாகாணத்தை இலங்கையின் முதன்மைச் சுற்றுலா மையமாக மாற்ற, இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தனது கட்டுப்பாட்டில் உள்ள அதிகாரங்களை மாகாணப் பணியகத்துக்குப் பரவலாக்க வேண்டும்.

குறிப்பாக, சிறிய அளவிலான சுற்றுலா விடுதிகளைப் பதிவு செய்யும் அதிகாரத்தையாவது மாகாணத்துக்கு வழங்குவது பணிகளைத் துரிதப்படுத்தப் பெரிதும் உதவும்" எனத் தெரிவித்தார்.

அதேவேளை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன் மற்றும் எஸ்.சிறீபவானந்தராஜா ஆகியோர் சுற்றுலாவிகளின் தற்போதைய மனநிலை மற்றும் முதலீட்டாளர்களின் ஏமாற்றங்கள் குறித்து கருத்து வெளியிட்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு

# வடக்கு இ.போ.ச. பஸ் சேவைகளில் உள்ள குறைபாடுகளை நிவர்த்திக்க நடவடிக்கை

## மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையினர் விசேட கவனம்

யாழ்ப்பாணம், ஏப். 26

வடக்கு மாகாணத்தில் இலங்கை போக்குவரத்துச் சபையினால் முன்னெடுக்கப்படும் சில பஸ் சேவைகளில் நிலவும் சீரின்மை மற்றும் கால தாமதங்கள் குறித்துப் பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை அடுத்து, அவற்றை நிவர்த்திப்பதற்கான காத்திரமான நடவடிக்கைகள் வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையால் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அதிகார சபையின் தலைவர் பொறியியலாளர் சூ.விமலேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

முன்வைக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தி, அவற்றை உடனடியாக நிவர்த்தி செய்யுமாறு இலங்கை போக்குவரத்துச் சபையின் வடக்கு பிராந்தியப் பொது முகாமையாளருக்கு எழுத்துமூலமான கோரிக்கைகளை அதிகார சபையின் தலைவர் முன்வைத்திருந்தார். இதனடிப்படையில், இலங்கை போக்குவரத்துச் சபையால் சம்பந்தப்பட்ட சாலை முகாமையாளர்களுக்குக் கடும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதனடிப்படையில், மன்னார் - தோட்டவெளி வழித்தடத்தில் இலங்கை போக்குவரத்துச் சபையால் முன்னெடுக்கப்படும் பஸ் சேவைகள் சீரற்றுக் காணப்படுவதால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டை அடுத்து, குறித்த சேவையைத் தடையின்றித் தொடர்ச்சியாக முன்னெடுக்குமாறு மன்னார் சாலை முகாமையாளருக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

இச்சேவை சீராக நடைபெறத் தவறும் பட்சத்தில், மக்களின் போக்குவரத்துத் தேவையைப் பூர்த்தி செய்யத் தனியார் துறையினருக்கு பிரவேசிக்க நேரிடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவிலிருந்து ஓமந்தை நோக்கிச் செல்லும் பஸ்கள் காலதாமதமாகச் செல்வதால், மாணவர்கள் முதலாவது பாடவேளையைத் தவற விடும் நிலை காணப்படுவதாக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து, மாணவர்களின் நலன் கருதி குறித்த பேருந்து காலை 7.25 மணிக்குள் பாடசாலையை வந்தடைவதை உறுதி செய்யுமாறு சாலை முகாமையாளருக்குப் பிராந்திய முகாமையாளரால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குப்பிளானிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் செல்லும் பஸ் சேவைகளில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பில் ஏழாலை மேற்கு மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளும் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன. இது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு சாலை முகாமையாளருக்குப் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. (அ)

## 2.5 மில்லியன் டொலர் திருட்டு

# அவுஸ்ரேலிய அதிகாரிகள் விசாரணைகளுக்கு உதவி

கொழும்பு, ஏப். 26

நிதி அமைச்சின் கணினி அமைப்புகளை ஊடுருவி, இணையக் குற்றவாளிகள் 2.5 மில்லியன் அமெரிக்க டொலர்களைத் திருடிய சம்பவம் தொடர்பான விசாரணைக்கு, அவுஸ்ரேலிய அதிகாரிகள் உதவி வருவதாக அவுஸ்ரேலிய தூதுவர் மத்யூ டக்வொர்த் தெரிவித்துள்ளார்.

இந்த நிதி, அவுஸ்ரேலியாவுக்குச் செலுத்தவேண்டிய இருதரப்புக் கடன் திருப்பிச் செலுத்துதலின் ஒரு பகுதியாகும் 2025 செப்ரெம்பரில் இதனை செலுத்தவேண்டியிருந்த நிலையில், இந்தத் திசைதிருப்பல் கடந்த ஜனவரி மாதத்தில் நடைபெற்றிருந்தது.

இலங்கை உரிய தொகையைச் செலுத்திய பின்னர், இணையக் குற்றவாளிகள் தலையிட்டு நிதியை மற்ற கணக்குகளுக்குத் திசை திருப்பிவிட்டதாக நிதி அமைச்சின் செயலாளர் ஹர்ஷன சூரியப்பெரும ஒரு தெரிவித்தார்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள இலங்கைக்கான அவுஸ்திரேலிய தூதுவர் "எங்கள் பார்வையில், நான் கூற விரும்புவது இரண்டு விடயங்கள்தான் முதலாவதாக, இந்தச் சம்பவம் குறித்து நாங்கள் தெளிவாக அறிந்திருக்கிறோம், மேலும் கன்பெராவில் உள்ள எங்கள் அதிகாரிகள் இலங்கையின் விசாரணைக்கு உதவி வருகின்றனர்.

இரண்டாவதாக, இலங்கை கடன் நிலைத்தன்மைக்குத் திரும்புவதற்கு ஆதரவளிப்பதில் எங்களது தொடர்ச்சியான அர்ப்பணிப்பை இது எந்த வகையிலும் குறைத்து மதிப்பிடாது என்று கூறியுள்ளார்.

முக்கிய பிரச்னைகளை இலங்கை ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் மூலம் தீர்க்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# 2.5 மில்லியன் டொலர் மோசடி குறித்து நாணய நிதியம் தீவிர கண்காணிப்பு!

கொழும்பு, ஏப். 26

இலங்கை நிதி அமைச்சின் கணினி அமைப்புகளை ஊடுருவி, இணைய குற்றவாளிகளால் 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் தனது அவதானத்தைச் செலுத்தியுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக பதிலளித்த சர்வதேச நாணய நிதியத்தின் ஊடகப்பேச்சாளர், வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் கணினி அமைப்புக்குள் அத்துமீறி நுழைந்ததை உறுதிப்படுத்தி நிதி அமைச்சு வெளியிட்ட அறிக்கையைத் தாம் அறிந்திருப்பதாகவும், இந்த முக்கிய நகர்வை மிக நெருக்கமாகக் கண்காணித்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு வழங்க வேண்டிய கடன் தவணையைச் செலுத்துவதற்காக இந்த நிதி ஒதுக்கப்பட்டிருந்தது.

2022ஆம் ஆண்டு ஏற்பட்ட பாரிய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு வரும் இலங்கை, தற்போது சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தின் கீழ் செயற்பட்டு வருகின்றது.

ஏற்கனவே 46 பில்லியன் அமெரிக்க டொலர் கடனைச் செலுத்த முடியாமல் இலங்கை வங்குரோத்து நிலையை அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது சர்வதேச நாணய நிதியத்தின் "நீடிக்கப்பட்ட நிதி வசதி" திட்டத்தின் ஐந்தாவது மற்றும் ஆறாவது மீளாய்வுகள் தொடர்பாக இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இந்த மீளாய்வு நிறைவேற்றப்பட்டதும் இலங்கைக்கு சுமார் 700 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி கிடைப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் மொத்தமாக 3 பில்லியன் டொலர் நிதியை வழங்க 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சர்வதேச ஊடகங்களின் கவனத்தை ஈர்த்த திறைசேரி 2.5 மில்லியன் டொலர் மோசடி!

கொழும்பு, ஏப். 26

இலங்கையின் திறைசேரிக்குச் சொந்தமான 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி, கணனி ஊடுருவல்களால் சட்டவிரோதமான முறையில் அபகரிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் சம்பவம், தற்போது சர்வதேச ஊடகங்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

இலங்கை வரலாற்றில் இவ்வாறானதொரு பாரிய நிதி மோசடி இடம்பெற்றிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

இதன் காரணமாகவே சர்வதேச மட்டத்தில் இந்தச் செய்தி பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

திறைசேரி நிதியானது டிஜிற்றல் ஊடுருவல் மூலம் திருடப்பட்டுள்ள விவகாரம் குறித்து உலகின் முன்னணி ஊடகங்களான பிபிசி, ப்ளூம்பெர்க், வியோன், ஏஎவ்பி மற்றும் த கார்டியன் உள்ளிட்ட பல நிறுவனங்கள் முக்கிய செய்தியாக வெளியிட்டுள்ளன. (அ)

# ஆரம்ப சுகாதார சேவையை மேம்படுத்த 9 மாகாணங்களுக்கும் ரூ. 3,600 மில்லியன்

## புரிந்துணர்வு ஒப்பந்தம் கொழும்பில் கைச்சாத்து



கொழும்பு, ஏப். 26

இலங்கையின் ஆரம்ப சுகாதார சேவை முறைமையின் தரத்தை மேம்படுத்தும் நோக்கில், சுகாதார மற்றும் ஊடக அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமை மேம்படுத்தும் திட்டத்தினூடாக ஒன்பது மாகாண சபைகளுக்கும் 3,600 மில்லியன் ரூபாய் வழங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது.

மத்திய, கிழக்கு, வடமத்திய, வடமேல், வடக்கு, சப்ரகமுவ, தெற்கு, ஊவா மற்றும் மேல் மாகாணங்கள் ஆகிய ஒன்பது மாகாண சபைகளுக்கும், தலா 400 மில்லியன் ரூபாய் வீதம் வருடந்தோறும் வழங்கப்படவுள்ளது.

இதன்மூலம் நாடளாவிய ரீதியிலுள்ள சுமார் 1,700 ஆரம்ப சுகாதார பராமரிப்பு அலகுகள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களின் பௌதீக வளங்களை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தில் சுகாதார மற்றும் ஊடக அமைச்சின் சார்பில் அமைச்சின் செயலாளர் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க, மேலதிக செயலாளர் சாலிந்த பண்டார மற்றும் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சரத்சந்திர குமாரவன்ச ஆகியோர் கையெழுத்திட்டனர்.

மாகாண சபைகள் சார்பில் பிரதம செயலாளர்கள், பிரதி பிரதம செயலாளர்கள் மற்றும் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். (அ)

# மே 1 முதல் அமுலுக்கு வரும் டிஜிற்றல் காப்பீட்டு அட்டை

கொழும்பு, ஏப். 26

இலங்கையின் முதல் டிஜிற்றல் மோட்டார் காப்பீட்டு அட்டை மே 1 முதல் அறிமுகப்படுத்தப்படும் என நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த முயற்சி, தேசிய டிஜிற்றல் மயமாக்கலில் ஒரு படி முன்னேற்றத்தைக் குறிக்கிறது என்றும், பொது மக்கள் பாதுகாப்பை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், பிளாஸ்ரிக் அட்டைகளுக்குப் பதிலாக இது அறிமுகப்படுத்தப்படுவது சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கும் துணைபுரியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த டிஜிற்றல் மோட்டார் காப்பீட்டு அட்டை, இலங்கை காப்பீட்டு ஒழுங்குமுறை ஆணைக்குழு, இலங்கை காப்பீட்டு சங்கம் மற்றும் இலங்கை பொலிஸ் ஆகியவற்றுடன் இணைந்து தொடங்கப்படும் என்றும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.04.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.